கலைஞர் 100
1924 - 2023

தமிழரசு
Tamilarasu
(Monthly)

ஜனவரி 2024 (January 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 7

தமிழ்நாடு
உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024

ரூ.6,64,180 கோடி முதலீடுகள்...
26,90,657
நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்...

மக்களுடன் முதல்வர்

திட்டம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

18.12.2023 அன்று, கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில் 'மக்களுடன் முதல்வர்' என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

“எல்லோர்க்கும் எல்லாம்” என்ற நமது இலட்சியம் நிறைவேறும் நிறைவான ஆண்டாக அமையட்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி - 31.12.2023

புதிய சிந்தனை, புதிய இலக்குகளுக்கான வாசலைத் திறந்துவைத்து நம்பிக்கையின் ஒளிக்கதிர்களுடன் பிறக்கிறது இனிய புத்தாண்டு!

தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதிக்கானப் பயணத்தில் எத்தனை தடைகள் எதிர்ப்பட்டாலும் அவற்றைத் தகர்த்தெறிந்து முன்னேறும் நமது திராவிடமாடல் அரசின் வெற்றிப்பயணம், வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும். அதற்கான நம்பிக்கையும் உறுதியும் புத்தாண்டில் நிறைந்துள்ளது.

“எல்லோர்க்கும் எல்லாம்” என்ற நமது இலட்சியம் நிறைவேறும் நிறைவான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையட்டும்! அனைவருக்கும் எனது இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054 - 2055
சோபகிருது வருடம்
மார்கழி - தை
ஜனவரி 2024

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 7

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு. (குறள்- 482)

காலம் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுதல், அந்த நற்செயலின் வெற்றியை நழுவ விடாமல் கட்டிப் பிணிக்கும் கயிறாக அமையும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ சென்னையில் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2024" ரூ.6,64,180 கோடி முதலீடுகள், 26,90,657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் 5

★ அரசின் சேவைகளைப் பொதுமக்கள் விரைவாகப் பெற்றிட "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டம் 15

★ தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2.19 கோடி குடும்பங்கள் பயன்பெறும் பொங்கல் பரிசுத் தொகுப்பு 23

★ கல்வியில் சமூகநீதியையும், புதுமைகளையும் புகுத்துவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும் 24

★ சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதில், எப்போதும் கவனமாக உள்ளது நமது அரசு 28

★ மிக்ஜாம் புயலால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம் 37

★ "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டுச் சிறப்பு விழாவில் "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்" வெளியீடு 51

★ சென்னை, கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடியில் "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" 59

★ மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தல் 68

★ வெளிச்சம் - சிறுகதை 80

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால் 07.01.2024 அன்று
சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் இரண்டு நாள்
"உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024"
தொடங்கி வைக்கப்பட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
மேற்கொள்ளப்பட்டன.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

சென்னையில்
"உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024"

★ ரூ.6,64,180 கோடி முதலீடுகள்...

★ 26,90,657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்து, முன்னணி பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 07.01.2024 அன்று, சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024"-யைத் தொடங்கி வைத்தார்.

இம்மாநாட்டில், மாண்புமிகு ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம், ஜவுளி அமைச்சர் திரு. பியுஷ் கோயல் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் டாடா எலெக்ட்ரானிக்ஸ், பெகட்ரான், டிவிஎஸ் குழுமம், மிட்சுபிஷி, ஏ.பி. மோலார் மெர்ஸ்க், ஹுண்டாய், JSW, அசோக் லேலண்ட், வின்பாஸ்ட் ஆகிய முக்கிய நிறுவனங்களின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கை வெளியீடு

தமிழ்நாடு குறைக்கடத்தி, மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

அதனைத் தொடர்ந்து, க்வால்காம் டிசைன் சென்டர், ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களைத் தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மாநாட்டின் சிறப்பு அம்சங்கள்

இம்மாநாடு தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தலைமைத்துவம், அதன் நிலைத்தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership, Sustainability and Inclusivity) ஆகிய கருப்பொருட்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. இம்மாநாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்குமான ஒரு பிரத்யேக சந்திப்பு (Buyer - Seller Meet) நடைபெற உள்ளது. அச்சந்திப்பில் பல நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்களுக்கும், உள்நாட்டு விற்பனையாளர்களுக்குமிடையேயான கலந்துரையாடல்கள் நடைபெற உள்ளன. அனுபவம் பகிர்வு உரையாடல்களும், பலதுறை சார்ந்த வல்லுநர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்கங்களும் நடைபெற உள்ளன. தொழில் நிறுவனங்களின் அரங்குகள், பன்னாட்டு அரங்குகள், புத்தொழில்களுக்கான அரங்குகள், தமிழ்நாடு தொழில் சூழலமைப்பு அரங்கம் ஆகியவை பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர், தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா, தைவான் பொருளாதார, கலாச்சார மையமும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் மேம்பட்ட தொழில் சூழல் மற்றும் மனித வளம் ஆகியவற்றை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்திப் புதிய தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் இம்மாநாடு அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக வெளிநாடுகளுக்கு செல்லும்போதுதான் நான் சூட் போடுவது வழக்கம். ஆனால் இங்கு எல்லா வெளிநாடுகளும் தமிழ்நாட்டிற்குள் வந்துவிட்ட காரணத்தால், இங்கே நான் கோட் சூட் அணிந்து வந்திருப்பது பொருத்தமாக உள்ளது. இன்று காலையிலிருந்து சென்னையில் மழை பெய்து கொண்டிருக்கிறது. நான் இங்கு வந்தவுடன், முதலீடும் மழையாகப் பெய்யும் என்ற நம்பிக்கை எனக்கு வந்துள்ளது.

உலகம் முழுவதும் இருந்து வந்திருக்கும் எனது அருமை சகோதர, சகோதரிகளே! நீங்கள் அனைவரும் சமத்துவத்தைப் போற்றிய வள்ளுவரும், கணியன் பூங்குன்றனாரும் பிறந்த மண்ணுக்கு வந்திருக்கிறீர்கள். பல வரலாற்றுப் பெருமைகளையும், புகழையும் கொண்ட தமிழ்நாட்டுக்கு வருகை தந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன். இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமின்றி, உங்கள் சகோதரனாக வருக, வருக, வருக என நான் வரவேற்கிறேன்.

தொழில் துறையில் மேன்மையும், தனித்த தொழில்வளமும் கொண்ட மாநிலம்தான், தமிழ்நாடு! பண்டைய காலத்தில் இருந்து கடல் கடந்தும் வாணிபம் செய்தவர்கள்! அதனால்தான், "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" - என்று தொழிலை ஊக்குவிக்கும் பழமொழி உருவானது! இந்தியாவுக்குப் பல்வேறு வகைகளில் தமிழ்நாடு, முன்மாதிரி மாநிலம்! 1920ஆம் ஆண்டு 'தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு' எனப்படும் தொழிலதிபர்கள் அமைப்புத் தொடங்கப்பட்டது. இதனால்தான், தமிழ்நாடு அனைத்து வகைத் தொழில்களிலும், முன்னேறிய மாநிலமாக இன்றைக்கு இருக்கிறது. கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற மாநிலமாக இருப்பதால், இதற்கான திறமையான தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் ஏராளமாகக் கிடைத்தார்கள். சிறந்த தொழில் அதிபர்களும், திறமையான தொழிலாளர்களும் நிறைந்த தமிழ்நாட்டுக்கு,

உலகத் தொழில் முனைவோரான நீங்கள் வந்திருக்கிறீர்கள். நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதுடன் எனது உளமார்ந்த நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டிற்குத் தலைமையேற்க வந்திருக்கும் மாண்புமிகு ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியுஷ் கோயல் அவர்களை நான் நெஞ்சார வரவேற்கிறேன். மாண்புமிகு திரு. பியுஷ் கோயல் அவர்களது குடும்பம் அரசியல் குடும்பம். அப்பா, அம்மா இரண்டு பேருமே அரசியலில் கோலோச்சியவர்கள். வங்கித் துறை பணியாளராக வாழ்க்கையைத் தொடங்கி நிதி மற்றும் வர்த்தகத் துறையில் தனித்துவம் படைத்தவர் மாண்புமிகு திரு. பியுஷ் கோயல் அவர்கள். அவர் இங்கு வந்து தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களையும் – தொழில்துறைச் செயலாளர் திரு. அருண்ராய் அவர்களையும் - அனைத்துத் துறைகளைச் சார்ந்த அதிகாரிகளையும் - அரசு உயர் அலுவலர்களையும் என அனைவரையும் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

உலக நாடுகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வில், அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, டென்மார்க் ஆகிய 9 நாடுகள் எங்களுடன் பங்குதாரர் நாடுகளாக இணைந்துள்ளன. மேற்கு ஆஸ்திரேலியா, தைவான் பொருளாதார, கலாச்சார நிறுவனங்களும் எங்களுடன் இணைந்து செயல்பட்டுள்ளார்கள். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார

வளர்ச்சியில் அதிவிரைவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டிற்கு, கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பது மூலமாக, மேலும், தொழில் வளர்ச்சிக்கு இந்த மாநாடு வழிவகுத்துக் கொடுக்கும்! முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், நிதி நிறுவனங்கள், நிகழ்வில் கலந்து கொண்டிருக்கின்ற எல்லாருக்கும் இந்த மாநாடு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

இந்த மாநாட்டில், நாங்கள் பல்வேறு சிறப்பம்சங்களை உங்களுக்கு அளிக்க இருக்கிறோம். தலைமைத்துவம் - Leadership, நீடித்த நிலைத்தன்மை - Sustainability, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - Inclusivity என்ற கருப்பொருள்களில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளாகவே, 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி மாநாடு தமிழ்நாடுதான்' என்று தமிழ்நாடு அங்கீகாரம் பெற்றிருக்கிறது. இந்த நிலையை மேம்படுத்துகின்ற வகையிலேயும், மாநிலத்தின் முதலீடு ஈர்ப்புத் திறனை உலகுக்கு வெளிப்படுத்தவும், இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துகிறோம். நாங்கள் துறை வாரியாக

மேற்கொண்ட முதலீட்டாளர்கள் மாநாட்டுச் சந்திப்பிற்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. அதில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்துச் சாதனைகளையும் படைத்திருக்கிறோம். உங்களையெல்லாம் காணும்போது, இந்த சாதனைகளையெல்லாம் விஞ்சக்கூடியதாக இந்த மாநாடு அமையப் போகிறது என்ற நம்பிக்கை பிறக்கிறது. தொழில்மயமாக்கல் வரலாற்றில், ஒரு மகத்தான அத்தியாயமாகவும் இந்த மாநாடு இருக்கப் போகின்றது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றவேண்டும் என்ற குறிக்கோளோடுதான், 2030ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று ஒரு இலட்சிய இலக்கை நான் நிர்ணயித்திருக்கிறேன். உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது, வேலைவாய்ப்பு மிகுந்த முதலீடுகளை ஈர்ப்பது என்ற இருமுனை அணுகுமுறையை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். ஒரு மாநிலத்தில், தொழில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால், அந்த மாநிலத்தின் ஆட்சி மேல் நல்லெண்ணம் இருக்கவேண்டும்! அங்கு சட்டம் – ஒழுங்கு நல்ல முறையில் பேணப்பட்டு, அமைதியான சூழல் நிலவவேண்டும்! ஆட்சியாளர்கள் மேல் உயர்மதிப்பு இருக்கவேண்டும்! அந்த மாநிலத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருக்கவேண்டும்! 2021இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல், இந்த அம்சங்களெல்லாம் தமிழ்நாட்டில் இருப்பதால்தான், தொழில் துறையில் ஏராளமான முதலீடுகள் குவிகிறது! முதலீட்டாளர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று முன்கூட்டியே கணித்து, இன்றைய தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

வணிகம் புரிதலை எளிதாக்கி வருகிறோம். திறன்மிகு பணியாளர்களை உருவாக்கி வருகிறோம். நாளைய தொழில் மாற்றங்களைக் கணித்து வைத்திருக்கிறோம். தொழிலகங்கள், கல்வி நிறுவனங்களிடையே இணைப்பினை ஏற்படுத்தி வருகிறோம். தொழிற்சாலைகளுக்கேற்ற தொழிலாளர்களைத் தயார்படுத்தி வருகிறோம். 'நான் முதல்வன்' திட்டம் மூலம் மாணவர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து வருகிறோம். இளைஞர்களின் திறனுக்கேற்ற வேலைகளை உறுதிசெய்து தருகிறோம். திறமையான இளைய சக்தியை உருவாக்கித் தருவதை நோக்கமாகக் கொண்டது, இன்றைய தமிழ்நாடு அரசு.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பெண்களை முன்னிலைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தமிழ்நாட்டில் இருந்துதான் உருவானார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி, பெண்களுக்குச் சமூக, கல்வி, பொருளாதார, அரசியல் ரீதியாக அதிகாரமளிக்கின்ற திட்டங்கள், இந்தியாவுக்கே முன்னோடியாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். பெண்களுக்குப் பொருளாதார விடுதலை என்பது இந்தத் திராவிட மாடல் அரசின் முழக்கம்! அதனால்தான், "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்", "புதுமைப் பெண் திட்டம்", "விடியல் பயணம்", "தோழி விடுதி" என்று அறிவித்து, பெண்கள் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்!

கடந்த இரண்டரை ஆண்டு ஆட்சிக் காலத்தில், பெருமளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகள் உருவாக்குகின்ற வகையில், 200க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு

ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு மாநிலக் குழந்தைகளுக்கான கொள்கை, தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை, தமிழ்நாடு தரவு மையக் கொள்கை, தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு விண்வெளி, பாதுகாப்புக் கொள்கை, தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை, செயற்கை மணல் (M-Sand) உற்பத்தியை ஒழுங்குப்படுத்துவதற்கான புதிய கொள்கை, தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை, தமிழ்நாடு எத்தனால் கொள்கை, தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை, தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்துத் திட்டம், தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல், செயற்கை இழை துணி, ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்பு திட்டம், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை திட்டம், மாநிலப் பேரிடர் மேலாண்மைக் கொள்கை, தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை, தென்னை நார் கொள்கை எனப் பல்வேறு கொள்கைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் பரவலான, சீரான வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் எங்களுடைய இலட்சியம்! அதனால்தான் தொழில் திட்டங்கள் எல்லாம் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு வருகிறது! பல பின்தங்கிய மாவட்டங்களில், பெருமளவில், வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற விதமாக முதலீட்டுத் திட்டங்கள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், அந்த மாவட்டங்களில் இருக்கின்ற இளைஞர்களுக்கும், மகளிருக்கும் அவரவர்கள் வசிக்கின்ற மாவட்டங்களிலேயே வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவது மட்டுமல்லாமல், அந்த மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியும் பெருமளவில் அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே தங்களுடைய தொழில் திட்டங்களை அமைத்திருக்கிற பல நிறுவனங்கள், தங்களுடைய திட்டங்களை நன்றாக விரிவுபடுத்தி இருக்கிறார்கள் என்பது, தமிழ்நாட்டின் சிறப்பான தொழில் சூழலுக்கான அத்தாட்சி! மிகப்பெரும் தொழில் நிறுவனங்களான, ஹூண்டாய், டாடா போன்ற நிறுவனங்கள், தங்கள் முதலீடுகளைப் பன்மடங்கு அதிகரித்துள்ளன. 130க்கும் மேற்பட்ட "Fortune 500" நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருப்பது, தமிழ்நாட்டில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் அமைந்திருப்பதற்கு இது ஒரு சான்று! முதலீடுகளை ஈர்க்கின்ற மாநிலங்களில், இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி நிலை வகிக்கிறது! உலக அளவிலான முதலீட்டாளர்களை நன்கு வரவேற்கும் மாநிலமாக அதாவது 'Most Welcoming State' ஆக தமிழ்நாடு இருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பணியாளர்கள் மிகவும் திறமையானவர்கள். முதலீட்டாளர்களுக்குத் தேவையான அனைத்துச் சேவை ஆதரவுகளையும் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது. அனைத்துத் துறைகளிலும் திறன்மிகு பணியாளர்களை இந்த மாநிலம் கொண்டுள்ளது. இந்த மாநாடு நடைபெறுகிற இரண்டு நாட்களிலும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் PV செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள்,

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளையும், ஜவுளி, ஆடைகள், காலணிகள், தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. உலகம் முழுவதிலும் இருந்து 150க்கும் மேற்பட்ட முன்னணி வல்லுநர்களும், தலைமையாளர்களும் பங்கேற்கின்ற கருத்தரங்குகள், புத்தாக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள், இளம் தலைவர்கள் வணிகத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், மகளிர் தலைமையாளர்களின் குழு விவாதங்கள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

எட்டு துறைகள் சார்ந்த பெரிய தொழிற்சாலைகள், குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்களுக்கான அரங்குகள், தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என்று பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பன்னாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டு, பங்குதாரர் நாடுகள் தமிழ்நாட்டின் உடனான தங்களுடைய ஆழமான, நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, 3,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்பட, எதிர்கால சந்ததியினரை இம்மாநாட்டிற்கு ஈர்த்துள்ளோம். புத்தொழில்களுக்கென்று ஒரு தனி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வளர்ந்து வரும் முதலீட்டாளர்கள், இந்தத் துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடுவார்கள்! குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில் 'வாங்குவோர் – விற்பனையாளர் சந்திப்பு' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இது மூலமாக 20க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், 500க்கும் மேற்பட்ட உள்நாட்டு விற்பனையாளர்களுடன் கலந்துரையாடுவார்கள்! உலகம் முழுவதும் இருக்கின்ற முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது முதலீடுகளை நாங்கள் கோரியுள்ளோம்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக, முதலீட்டாளர்களுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்து வருகிறோம். அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாட்டை நாங்கள் முதன்மை பெறச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழவேண்டும் என்பதே எங்களது இலட்சியம்! இந்த முயற்சிகளுக்கு மகுடம் சூட்டிடும் வகையிலும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் வலிமையை உலகிற்குத் தெரிய வைத்திடும்!

இங்குக் கூடியிருக்கும் முதலீட்டாளர்களாகிய உங்கள் மத்தியில் உரையாற்றுவது உள்ளபடியே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தொழில்துறையில் பெரும் சாதனை படைத்த அனுபவசாலிகள் இந்த அரங்கில் நிறைந்துள்ளீர்கள். இங்குப் பல ஆண்டுகளாக தொழில் புரியும் அனுபவமும் உங்களுக்கெல்லாம் உள்ளது. சுருங்கச் சொன்னால், உங்களையும், உங்கள் வணிகத் திட்டங்களையும், உலகளாவிய முதலீட்டாளர்களோடு இணைத்துக்கொள்ளும் பொன்னான வாய்ப்பினை நாங்கள் இந்த மாநாடு மூலமாக ஏற்படுத்தித் தந்துள்ளோம்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யுங்கள்! அனைவரும் சேர்ந்து எதிர்காலத்தைப் பகிர்ந்து கொள்வோம் வாருங்கள்! ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கனவை நனவாக்குவோம் வாருங்கள் என மனதார அழைப்பு விடுக்கிறேன்.

இந்த மாநாட்டினால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளரும்! அதன்மூலம் இந்தியப் பொருளாதாரமும் உயரும்! அன்புக்குரிய முதலீட்டாளர்களே, உலகத்தின் பல நாடுகளிலிருந்து, அமைதியில் சிறந்த, முதலீட்டாளர்களின் நண்பனாகத் திகழுகிற தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வந்திருக்கிறீர்கள். என் தலைமையிலான தமிழ்நாடு அரசு, உங்களுக்கு அனைத்து வகையிலும், உறுதுணையாக இருக்கும்! உங்களுடைய உணர்வுகளை மதிக்கும்! தொழில் தொடங்க அனைத்து உதவிகளையும் செய்யும்! ஏனென்றால், இது, "சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!" என்ற ஆட்சி நடத்துகின்ற திராவிட மாடல் அரசு!

வாருங்கள்... முதலீடு செய்யுங்கள்... தமிழ்நாட்டின் முன்னேற்றத்திலும், இந்தியாவின் வளர்ச்சியிலும் உங்கள் பங்களிப்பைத் தாராளமாக வழங்குங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
08.01.2024 அன்று
சென்னை வர்த்தக மையத்தில்
"உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024"
நிறைவு விழாவில் ஆற்றிய சிறப்புரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட மாடல் அரசின் இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக, தமிழ்நாட்டினுடைய 20 ஆண்டுகால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக உங்கள் எல்லோருக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநாட்டை உலகமே வியக்கும் வகையில் நடத்தி - இந்தியாவே வியக்கும் வகையில் முதலீட்டை ஈர்த்து - என் இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள். தொழில்துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட குறுகிய காலத்திலேயே இமாலய சாதனையைச் செய்திருக்கும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவை பாராட்டுகிறேன்.

இவ்விழாவில் கண்ணும் கருத்துமாய் இருந்த தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, "முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு" என்ற பெயரில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலமாக, ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2 இலட்சத்து 80 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

நான் ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, 17,371 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துகிற வகையில், ரூ.7,441 கோடி மதிப்பிலான முதலீடுகளைப் பெற்றோம். அதோடு, நான் தொடர்ந்து இந்த முதலீடுகள் செயல்வடிவம் பெறுவதைக் கண்காணிப்பேன்.

அந்த வகையில், ஆட்சிக்கு வந்ததிலிருந்து இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். 27 தொழிற்சாலைகளைத் திறந்து வைத்திருக்கிறேன். இதுமூலமாக 74,757 இளைஞர்கள், மகளிர்க்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நம்பிக்கையோடு சொல்கிறேன், இந்த மாநாடு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக அமையும்! தமிழ்நாட்டின் வரலாற்றில் நிச்சயம் இது நினைவுகூரப்படும்! இந்த மாநாட்டினுடைய தனித்துவமும் புதுமைத்துவமும் என்றென்றும் பேசப்படும்!

நான் அதிகாரிகளுக்கு ஆரம்பத்திலேயே ஒரு அன்புக்கட்டளை இட்டேன். உலக அளவில் முதலீட்டுக்கான சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை முன்னேற்ற வேண்டும். இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதற்கான முக்கியக் காரணமாக அதுதான் இருக்க வேண்டும் என்று தெரிவித்தேன்.

எங்களுடைய அயராத உழைப்பு, உங்களுடைய பங்களிப்புக் காரணமாக, இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, இறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவாக, ரூ.6,64,180 கோடி என்பதை, இந்தியாவே உற்றுநோக்கும் இந்த அவையில் பெரும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

இந்த முதலீடுகள் மூலம், நேரடி வேலைவாய்ப்பு என்ற வகையில், 14 இலட்சத்து 54 ஆயிரத்து 712 நபர்களுக்கும், மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில், 12 இலட்சத்து 35 ஆயிரத்து 945 நபர்களுக்கும் என மொத்தம் 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மேம்பட்ட மின்னணுவியல் உற்பத்தி, பசுமை எரிசக்தி, தோல் அல்லாத காலணிகள், வாகனங்கள், மின் வாகனங்கள், வான்வெளி, பாதுகாப்பு, தரவு மையங்கள், திறன்மிகு மையங்கள், தகவல் தொழில்நுட்பச் சேவைகள் போன்ற பலதரப்பட்ட துறைகள் மூலமாக இந்த முதலீடுகள் வந்திருக்கிறது.

ஈர்க்கப்பட்டுள்ள மொத்த முதலீடுகளில், உற்பத்தித்துறையில், அதாவது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை சார்பாக, 3 இலட்சத்து 79 ஆயிரத்து 809 கோடி ரூபாய் முதலீடுகள், எரிசக்தித் துறை சார்பாக ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 157 கோடி ரூபாய் முதலீடுகள், வீட்டுவசதி, நகர்ப்புர வளர்ச்சித்துறை சார்பாக ரூ.62,939 கோடி முதலீடுகள், தகவல் தொழில்நுட்பவியல், பல நுட்பச் (டிஜிட்டல்) சேவைகள் துறை சார்பாக ரூ.22,130 கோடி முதலீடுகள், பெருந்தொழிற்சாலைகளுக்கு

வலுவான விற்பனையாளர் தளத்தை வழங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக ரூ.63,573 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

சீரான, பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற விதமாக, இந்த முதலீடுகள் எல்லாம், மாநிலம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன. 2030ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாடு ஒன் டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கியப் பங்களிக்கின்ற மாநிலமாகவும் சிறந்திட, பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இந்த இலக்கை விரைவில் அடைந்திட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பெரும் துணை நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

தொலைநோக்குப் பார்வையோடு தொழில் கொள்கைகளை வடிவமைத்து, அதன்மூலம் தொழில், பொருளாதார மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுதான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு உகந்த பாதை. 20க்கும் மேற்பட்ட கொள்கைகளை வெளியிட்டு, அந்தத் துறைகளில் உற்பத்தி மட்டுமல்லாமல், ஏற்றுமதியையும் வெகுவாகப் பெருக்கிடும் வகையில் முதலீடுகளைக் கணிசமாக ஈர்த்து, அதன்மூலம் வேலை வாய்ப்புகளை வெகுவாக அதிகரித்து வருகிறோம்.

இதன் தொடர் நடவடிக்கையாகத்தான், தொடக்க விழா நாளில், மின்னணு உற்பத்தி மற்றும் செமி கண்டக்டர் கொள்கையை வெளியிட்டேன். இது, இந்தத் துறைகளில் முதலீடுகளை ஈர்த்து, வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும்!

மிகப்பெரும் உட்கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது, அதற்கான முதலீடுகள் முழுவதையும் அரசே மேற்கொள்வது கடினம். கூட்டு முயற்சியில், தனியார் துறைகளோடு இணைந்து செயல்படுவதுதான் நடைமுறையில் சாத்தியம். அந்த வகையில், அப்படிப்பட்ட முதலீடுகளை ஈர்க்க, தனியார், அரசுத் துறைகளின் சிறந்த நடைமுறைகளை இணைத்து, பொது-தனியார் கூட்டாண்மைக் கொள்கையையும் (Public - Private Partnership Policy) வெளியிட்டிருக்கிறோம்.

தமிழ்நாடு அரசின் புத்தொழில், புத்தாக்க ஊக்குவிப்பு நிறுவனமான STARTUP தமிழ்நாடு உருவாக்கியுள்ள டேன்-ஃபண்ட் மூலம் பன்னாட்டுத் துணிகர முதலீட்டு நிறுவனங்களைத் (Venture Funds) தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்களோடு இணைப்பதற்கான தளம், இன்றைக்குத் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

நமது Startup தமிழ்நாடு, உலகளாவிய புத்தாக்கச் சூழல்களை ஆராயும் தரவு, ஆலோசனை நிறுவனமான ஸ்டார்ட்அப் ஜினோம் ஆகியவற்றுக்கிடையே ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் சுமார் 200க்கும் மேற்பட்ட புத்தொழில் துணிகர முதலீட்டாளர்கள், துறை சார்ந்த நிபுணர்களுடனும் புத்தொழில் நிறுவனங்களுடனும் கலந்துரையாடினார்கள். வாங்குவோர் - விற்பனையாளர் சந்திப்பில் 20க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், 500க்கும் மேற்பட்ட உள்நாட்டு விற்பனையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

இதன்மூலமாக, ஏற்கெனவே, ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக விளங்குகின்ற தமிழ்நாடு, தன்னுடைய போட்டித்திறனை நன்கு அதிகரிக்க முடியும். வான்வெளி, பாதுகாப்புத்துறை நிறுவனங்களுக்கான விற்பனையாளர் – வாங்குவோர் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தோம். வளர்ந்து வரும் இந்தத் துறையைச் செம்மைப்படுத்தி, இந்தத் துறையை மேலும் வளர்க்க, இப்படியான முயற்சிகள் மிகச் சரியான உத்வேகத்தை எங்களுக்குக் கொடுத்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பம்சமாக, ஒன்பது பங்காளர் நாடுகள் பன்னாட்டு அரங்கம் அமைத்து, இந்த மாநிலத்தின் மீது தங்களின் ஆழமான, நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்கள். சிறப்பு அரங்குகள் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வலிமை, பன்முகத் தன்மையைப் பல்வேறு அரசு நிறுவனங்கள் வெளிப்படுத்தி இருக்கின்றன.

இந்த மாபெரும் நிகழ்வின்போது நடைபெற்ற வேறுசில முக்கிய நிகழ்வுகளையும் இங்கே குறிப்பிட விரும்புறேன். திட்டங்களுக்கான தொடக்க விழாக்கள், அடிக்கல் நாட்டு விழா, துறை, நாடுகளுக்கான அரங்குகள், புத்தொழில்களுக்கான களங்கள், பல்வேறு தலைப்பிலான கலந்துரையாடல்கள், அனுபவங்கள் பகிரும் சந்திப்புகள், கண்கவர் கலை நிகழ்ச்சிகள் - ஆகியவை நடந்திருக்கின்றன. இவை எல்லாம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. இவை எல்லாம் ஆக்கப்பூர்வமாக நடந்திருக்கிறது.

மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் மூலமும், "நான் முதல்வன்" திட்டம் மூலமும் மாணவர்கள் அதிக அளவில் இந்த மாநாட்டில் பங்கேற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கப்பட்டு

இருந்தது. நாளைய உலகத்திற்கு இன்றே வழிகாட்டுகிற வகையில், அவர்கள் இந்தப் பெரும் முதலீட்டாளர்களின் ஆழமான அனுபவங்களைக் கேட்டறிந்தது, தமக்கான பாதையை வகுத்திட அவர்களுக்கு இது பெரிதும் உதவும். சுமார் இருபதாயிரம் பிரதிநிதிகள், 39 இலட்சம் மாணவர்கள், இதில் எல்லாம் கலந்துகொண்டு பயனடைந்துள்ளார்கள்.

Our partner countries, have contributed to make the Global Investors Meet a grand success. I also thank the Diplomatic community for their co-operation.

முக்கியமாக, நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, எங்கள் அரசு மீதும் - எங்கள் கொள்கைகளின் மீதும் வைத்திருக்கிற உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றுவது, எங்களுடைய தலையாயக் கடமை.

எங்களுடைய அரசைப் பொருத்த வரைக்கும், நீங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்துப் போடுவதிலிருந்து உங்களுடைய எல்லா செயல்களுக்கும் - அதாவது நீங்கள் உங்கள் தொழிற்சாலையை முழுமையாகக் கட்டி முடித்து, உற்பத்தியைத் தொடங்குவதில் இருந்து, அதற்குப் பிறகும்கூட, உங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்! உங்களுக்குத் தேவையான எல்லா க்ளியரன்சும் - சிங்கிள் விண்டோ சிஸ்டம் மூலமாக, விரைந்து வழங்கப்படும் என்று நான் உறுதிகூற விரும்புறேன்.

அதேபோல, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த, தொழில்துறை அமைச்சர் தலைமையில் ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும். அதில் தொழில்துறை அலுவலர்கள், நெறியாளுகை (Guidance) அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்பார்கள். ஒவ்வொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தொடர்ந்து கண்காணித்து, அதை ஒரு முழுமையான தொழிற்சாலையாக மாற்றுவதற்கு, அவர்கள் எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள்.

உங்களுக்கு எந்தத் தருணத்திலும், என்னிடம் ஏதாவது தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால், என்னோட அலுவலகத்தை, நீங்கள் எப்போது வேண்டும் என்றாலும் தொடர்பு கொள்ளலாம்! இந்த உறுதிமொழியை நான் தொழிற்துறை அமைச்சர், அரசு அலுவலர்கள் முன்னிலையில் வழங்குகிறேன். அதனால் நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம்.

நிறைவாக, இந்த மாநாட்டில் முதலீடுகள் மேற்கொண்டுள்ள எல்லோருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை, இங்கே முதலீடு செய்யாதவர்களும், எங்கள் மாநிலத்தில் முதலீடு செய்ய முன்வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறேன்! உங்கள் எல்லோரையும் நான் தொழில்முனைவோராக மட்டுமில்லை – தமிழ்நாட்டின் நல்லெண்ணத் தூதுவர்களாகப் பார்க்கிறேன். எனவே, தமிழ்நாட்டை உலகுக்கு அறிமுகம் செய்யுங்கள். உலக நாடுகளைத் தமிழ்நாட்டுக்கு அழைத்து வாருங்கள்.

நன்றி, வணக்கம்!

அரசின் சேவைகளைப் பொதுமக்கள் விரைவாகப் பெற்றிட "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார் - 18.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 18.12.2023 அன்று, கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாமினைப் பார்வையிட்டு, பதிவுச் செய்ய வந்த மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார்.

அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருவதுடன், பொதுமக்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவும், அரசின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திடவும், "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்", "கள ஆய்வில் முதலமைச்சர்" போன்ற திட்டங்களையும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பெண்களுக்கான விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், இன்னுயிர்க் காப்போம் - நம்மைக் காக்கும் 48 போன்ற முன்னோடித் திட்டங்களையும் இவ்வரசு அறிவித்துச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் மக்களைச் சென்றடையும் வகையிலும், நிருவாகத்தில்

வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டம் கோயம்புத்தூரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

"மக்களுடன் முதல்வர்" என்ற இப்புதிய திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நகராட்சி நிருவாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, எரிசக்தித் துறை, தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறை, குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்றுத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புர, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு, கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களைத் தவிர்த்திட வேண்டும் என்பதும்தான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக வரும் 18.12.2023ஆம் தேதி முதல் 06.01.2024 வரை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரப்புரங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் 1,745 முகாம்கள் நடத்தப்படும்.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முடிவுற்றவுடன், 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து 31.01.2024 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

முதற்கட்டமாக, நகர்ப்புறங்களில் நடத்தப்படும் முகாம்கள் முடிவுற்ற பின்னர், அடுத்த கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தச் சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

செம்மொழிப் பூங்கா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.133.21 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், 7,945 பயனாளிகளுக்கு ரூ.110.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

உலகத் தரத்திலான செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுதல்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு கோயம்புத்தூரில்

நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், கோயம்புத்தூரில் செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், காந்திபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

கோயம்புத்தூர் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டைப் பறைசாற்றும் வகையில், தாவரவியல் தோட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு பொதுமக்கள் இயற்கையை அறிந்து கொள்ளவும், தாவர இனங்களை நிலைக்கத்தக்க வகையில் பயன்படுத்துதலை ஊக்கப்படுத்தவும், நீலகிரி உயிர்கோளப்படுகையில் உள்ள அரிய வகை தாவர இனங்களைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் ஆளுமையை நிறுவி மேம்படுத்தி மேலாண்மை செய்யும் நோக்கிலும், செம்மொழிப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

மேலும் உலகிலேயே இங்கிலாந்தில் உள்ள கியு பூங்கா மட்டுமே தாவர உயிரியல் வங்கியாகவும், அதன் தொடர்புடைய ஆராய்ச்சி மையமாகவும் உள்ளது. வெப்ப மண்டல நாடான இந்தியாவில் அத்தகைய பூங்கா அமைக்கப்படாத காரணத்தால் சிறப்பு மிக்க தாவரங்களைக் கொண்ட செம்மொழிப் பூங்கா காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகப் பகுதியில் 165 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ளது.

இவற்றில் முதற்கட்டமாக, 45 ஏக்கர் நிலப்பரப்பிலும், இரண்டாவது கட்டமாக 120 ஏக்கர் நிலப்பரப்பிலும் பூங்கா அமைக்கப்படவுள்ளது. தற்போது, முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில் செம்மொழிப் பூங்கா அமைக்கும் நோக்கத்துடன் மாணவர்கள், பொதுமக்களிடையே இயற்கையைப் பாதுகாத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், மாணவர்களுக்குத் தாவரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும், சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்து அறிந்திடவும், பொதுமக்கள் குழந்தைகளுக்குச் சிறந்த பொழுது போக்கிற்கு ஏற்ற வகையிலும் செம்மொழிப் பூங்கா ரூ.133.21 கோடி மதிப்பீட்டில் உலகத்தரத்துடன் அமைக்கப்படவுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த இப்பூங்கா இந்தியாவிலேயே தனித்துவத்துடன் பல சிறப்புகளை உள்ளடக்கியிருக்கும். இப்பூங்காவில் செம்மொழி வனம், மகரந்த வனம், மூலிகை வனம், நீர் வனம், நட்சத்திர வனம், நலம்தரும் வனம், நறுமண வனம் போன்ற பல வகையான தோட்டங்கள் அமைக்கப்படும். இதில் இயற்கை அருங்காட்சியகம், திறந்தவெளி அரங்கம், இயற்கை உணவகம், அனைத்து நவீன வசதிகளுடன் ஆயிரம் இருக்கைகள் கொண்ட மாநாட்டு மையம் ஆகியவைகளும் அமைக்கப்படும்.

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – மகளிர் திட்டத்தின்கீழ், 3,000 பயனாளிகளுக்குக் கடனுதவிகள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 284 பயனாளிகள் பயன்பெறும் வகையில், வீட்டுமனைப் பட்டாக்கள், முதியோர் ஓய்வூதியத் தொகை, இ-பட்டாக்கள், சாலை விபத்து நிவாரணம், பழங்குடியினருக்கான சாதிச்சான்றுகள், வன உரிமைச் சட்டத்தின்கீழ் பட்டாக்கள்;

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை சார்பில் 1,149 பயனாளிகள் பயன்பெறும் வகையில் பழங்குடியினர் வகுப்புச் சான்றுகள், வன உரிமைப் பட்டாக்கள், இ-பட்டாக்கள், தையல் இயந்திரங்கள்;

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலப்பிரிவின்கீழ் 980 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள், இ.பட்டாக்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தின் கீழ் 534 பயனாளிகளுக்குப் புதியதாக காப்பீடு அட்டைகள்;

தொழிலாளர் நலத்துறையின் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) சார்பில் 210 பயனாளிகளுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, பணியின்போது விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி;

கூட்டுறவுத் துறையின் சார்பில் 200 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவைகளுக்குக் கடனுதவி, மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கடனுதவி, மாற்றுதிறனாளிகளுக்குக் கடனுதவி, சிறு வியாபாரிகளுக்குக் கடனுதவி, பணிபுரியும் மகளிருக்கான கடனுதவி, மகளிர் தொழில்முனைவோர் கடனுதவிகள்;

பேரூராட்சிகள் சார்பில் 302 பயனாளிகளுக்குச் சாலையோர வியாபாரிகளுக்கு, அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் நிதியுதவி;

வேளாண்மை, உழவர் நலத்துறையின் சார்பில் 242 பயனாளிகள் பயன்பெறும் வகையில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பரப்பு அதிகரித்தல், பண்ணைப் பற்றாக்குறை சரிசெய்தல், வாழைத் தார் உரையிடுதல், வேளாண்மை விற்பனை, வணிகத்துறை மூலம் தரமான கரும்பு அச்சு வெல்லம் தயாரிக்கும் மையம் அமைத்தல், புதிய உழவர் சந்தை அடையாள அட்டைகள் வழங்குதல் போன்றவையும்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 60 பயனாளிகள் பயன்பெறும் வகையில், பேட்டரியால் இயக்கப்படும் சக்கர நாற்காலிகள், மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி, வாகனம், திறன் (ஸ்மார்ட்) கைப்பேசிகள், தையல் இயந்திரங்கள்;

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 20 பயனாளிகளுக்குச் செல்வபுரம் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகள்;

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி, மேம்பாட்டுக் கழகம் சார்பில் 5 பயனாளிகளுக்குச் சுற்றுலா வாகனம், பயணிகள் ஆட்டோ, பல்பொருள் அங்காடிகள் அமைக்க கடனுதவிகள், விபத்து நிவாரண நிதி;

சமூக நலத்துறை சார்பில் 3 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்;

எனப் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 7,945 பயனாளிகளுக்கு ரூ.110.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மலை வளங்கள் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய இனிய மாவட்டம், இந்தக் கோவை மாவட்டம்!

கல்வி வளமும், தொழில் வளமும் கொண்ட தென்னிந்தியாவின் மான்செஸ்டரான இந்தக் கோவை, கொஞ்சும் கொங்குத் தமிழைக் கொண்டது! தமிழ்ச் செம்மொழி மாநாட்டைக் கண்டது!

பலமுறை கோவைக்கு நான் வருகை தந்து பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்திருந்தாலும், இன்றைக்கு, "மக்களுடன் முதல்வர்" என்ற ஒரு மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறேன்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த 4ஆம் தேதி புயலோடு கூடிய பெருமழை பெய்தது. 47 ஆண்டு காலம் இல்லாத அளவிற்கு மழை பெய்தது. அதை முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடனும், மழைக்குப் பிறகு போர்க்கால அடிப்படையிலும் செயல்பட்டு அரசு எதிர்கொண்டது. கடுமையான மழை ஒருநாள் முழுவதும் பெய்தது. மழை நின்றவுடன், நிவாரணப் பணிகளை நாங்கள் தொடங்கிவிட்டோம். மறுநாள் காலையில், முக்கியச் சாலைகளில் போக்குவரத்துச் சீர்செய்யப்பட்டது. பெரும்பாலானப் பகுதிக்கு மின் இணைப்பானது மூன்று நாட்களுக்குள் கிடைத்தது. புறநகர்ப் பகுதிகளில் ஒரு சில பகுதிகள் நீங்கலாக, நான்கைந்து நாட்களில் மற்ற அனைத்துப் பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கைத் திரும்பியது. அந்த மாவட்டத்தின் மக்களுக்கு ரூ.6,000 இழப்பீடு அறிவித்து நேற்று நானே தொடங்கி வைத்தேன். இதற்கிடையில், இரண்டு நாட்களாக, தென் மாவட்டங்களில் கடுமையான மழை பெய்து வருகின்றது. அரசு இயந்திரம் முழுமையாகத் தென் மாவட்டங்களில் குவிக்கப்பட்டிருக்கிறது. நேற்றைக்கும், இன்று காலையில் இங்கே வருகிறவரைக்கும், அதிகாரிகள், அமைச்சர்களுடன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். சென்னையில் செயல்பட்டதைப்போல, அந்த அனுபவங்களைக் கொண்டு, இன்னும் சிறப்பாகச் செயல்பட்டு, தென் மாவட்ட மக்களைக் காப்போம் இது உறுதி.

திராவிட மாடல் அரசின் முன்னோடித் திட்டங்கள்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணம், இல்லம் தேடிக் கல்வி, மக்களைத்தேடி மருத்துவம், நான் முதல்வன், இன்னுயிர்க் காப்போம் நம்மைக் காக்கும் 48, புதுமைப் பெண் திட்டம் என்று பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மூலமாக, சமுதாயத்தில் ஏழை-எளிய விளிம்புநிலை மக்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்கள் என்று நலிவுற்ற எல்லாத் தரப்பு மக்களுடைய காவலனாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

இந்தத் திட்டங்களின் பயன்கள் எல்லாம், கடைக்கோடி மனிதருக்கும் போய்ச் சேர்ந்திருக்காதா? என்ற எண்ணத்துடன் ஆய்வு செய்ய, 'கள ஆய்வில் முதலமைச்சர்' திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். நானே, சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று, கள நிலவரங்களை ஆய்வு செய்தேன். மண்டல வாரியாக, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி அறிவுரைகள் வழங்கிக்கொண்டு வருகிறேன். அந்த ஆய்வுகள் மூலமாகப் பொதுமக்கள் பயனடைவதைப் பார்க்க முடிகிறது. பொதுமக்கள், அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி, பெரும்பாலான அடிப்படைச் சேவைகள், இணையதளம் வழியாக வழங்கப்பட்டு வருகின்றன.

மக்கள் அடிக்கடி அணுகுகின்ற துறைகளான, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிருவாகத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர்-மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும்

திறன் மேம்பாட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலன், மகளிர் உரிமைத் துறை, எரிசக்தித் துறை ஆகிய இந்த 13 அரசுத் துறைகள் மூலம், மக்களுக்குப் பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சேவைகளைப் பெறுவதில் அடித்தட்டு மக்கள் சில சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்று அரசுக்குத் தெரியவந்தது. இந்தச் சேவைகளை இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்வதில், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் மக்களுக்குச் சில சிரமங்கள் இருந்தது. இந்த சிரமங்களைப் போக்கி; மக்களுக்கு உதவுகிற வகையில் உருவாக்கி இருக்கக்கூடிய ஒரு புதிய திட்டமாகத்தான், இந்த "மக்களுடன் முதல்வர்" திட்டம், முதல்வரின் முகவரித் துறையால் இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகிறது.

அரசினுடைய சேவைகளை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு சென்று, அனைத்துப் பொதுமக்களுக்கும், அனைத்துச் சேவைகளும் எளிதாகக் கிடைக்கச் செய்வதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்! அதாவது,

செயல்முறையை விரைவுபடுத்துவது!, தாமதங்களை குறைப்பது, சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறைப்பது! என்று விரைவாகவும், எளிதாகவும் சேவைகளை வழங்குகின்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகள், முதியோர் போன்றவர்களின் சிரமங்களை முன்கூட்டியே கண்டறிந்து, அதையெல்லாம் தீர்த்து வைப்பதில் இந்தத் திட்டம் தனிக்கவனம் செலுத்தும். அனைத்து நகர்ப்புற, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு, கிராம ஊராட்சி அளவில் அனைத்து மாவட்டங்களையும் சிறப்பு முகாம்களை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றோம். இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் எல்லோரும் ஒரே குடையின்கீழ்க் கூடி, மக்களுடைய கோரிக்கைகளைப் பெற்றுப் பதிவு செய்வார்கள்.

முகாம்களில் பெறப்படுகின்ற மனுக்கள் எல்லாம், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 நாட்களுக்குள்ளாக உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் என்னுடைய நேரடிக் கண்காணிப்பில் இருக்கும். இந்த முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

முதல் கட்டமாக, புயல் பாதித்த சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைத் தவிர, பிற மாவட்டங்களில் இருக்கின்ற அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியிருக்கின்ற கிராம ஊராட்சிகளிலும் ஏறத்தாழ 1,745 முகாம்கள் நடத்தப்படும்.

இப்போது கோவையில், நான் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கின்ற இதே சமயத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

அவர்களுடைய மாவட்டங்களிலும், பொறுப்பு அமைச்சர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த முகாம்களைத் தொடங்கி வைக்கிறார்கள்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண உதவித் தொகை வழங்குவது முடிந்ததும், ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இருந்து ஜனவரி 31ஆம் தேதி வரைக்கும் இந்தச் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

இரண்டாம் கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட இருக்கின்றன. இந்த முகாம்களில் பெறப்படுகின்ற அனைத்து கோரிக்கைகளும் அரசால் பரிசீலிக்கப்பட்டு, முறையான கோரிக்கையாக இருந்தால் நிறைவேற்றித் தரப்படும் என்று இங்கே நான் உறுதி அளிக்கின்றேன். பொதுமக்கள் கொடுக்கின்ற கோரிக்கைகள் அனைத்தும் 'மக்களுடன் முதல்வர்' இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். தொடர்புடைய துறை அலுவலர்கள் சேவை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் முகாம்களிலேயே பெற்றுப் பரிசீலிப்பார்கள்.

அனைத்து முகாம்களிலும், "தமிழ்நாடு மின் ஆளுமை முகமை" மூலம் இ-சேவை மையங்கள் அமைக்கப்படுகின்றன. பொதுமக்கள் இந்த முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்தி, உரிய சேவைகளைப் பெற்றுப் பயனடைய வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்களுக்கு உங்கள் முதலமைச்சர் அன்போடு கூறிக் கொள்வது, மக்கள் அளிக்கின்ற ஒவ்வொரு மனுவுக்கும் முடிவு காண்பது என்பதே முக்கியம் என்று நினைக்காமல், விடிவு காண்பதே நோக்கம், அதுதான் உண்மை என்று செயல்பட்டாகவேண்டும். அரசு மேல் ஏழைகள் கொண்டிருக்கின்ற நம்பிக்கைகள் வலுவடையும்!

கண்களில் கண்ணீரோடும், வாடிய முகத்தோடும், ஆனால், இதயத்தில் நம்பிக்கையோடும், தலைமைச் செயலகத்தில் வரிசையாக, பொறுமையாக நின்று மனு கொடுக்கின்ற மக்களை இப்போதும் அவர்களைப் பார்க்க முடிகிறது. பொதுமக்கள் கோட்டையை நோக்கி இப்படி வருவதை மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட அலுவலர்களும் குறைக்கவேண்டும்; வட்ட அளவில் முடிய வேண்டியதை, வட்ட அளவிலும், மாவட்டத்தில் முடிய வேண்டியதை மாவட்ட அளவிலும், முடித்து வைக்க போதிய முயற்சிகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும்.

நம்மை நாடி வருகின்ற பொதுமக்களுக்கு, அரசின் சட்ட வரையறைக்கு உட்பட்டு, அவர்கள் குறைகளைக் களைய முழு ஈடுபாட்டோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் பணியாற்ற வேண்டும் என்று அனைத்துத் துறை அரசு அலுவலர்களையும் அன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் வழங்குகின்ற விண்ணப்பங்களுக்குப் பதில் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயத்தில், தற்காலிகமாக, பயனில்லாத பதில்களைக் கொடுப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

'காரணம் சொல்பவர், காரியம் செய்ய மாட்டார்' என்பது தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று! ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி கோரிக்கை மனுக்களைத் தட்டிக் கழித்துவிடக் கூடாது. மக்களுக்கு நம்பிக்கை என்பது அரசாங்கம்தான். அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் மக்கள் சேவகர்களான நமக்குத்தான் இருக்கிறது.

"மக்களுடன் முதல்வர்" திட்டம் ஒரு சிறப்புத் திட்டம். பெறப்படும் விண்ணப்பங்களைச் சரியாகப் பரிசீலனை செய்து, பயனுள்ள வகையில், இறுதியான பதில்களை வழங்கவேண்டும் என்று அனைத்துத் துறை அலுவலர்களையும், மீண்டும் மீண்டும் நான் கேட்டுக் கொண்டு, "மக்களுடன் முதல்வர்" திட்டம் முழுமையான வெற்றி பெறவேண்டும்!

"மக்களுடன் முதல்வர்" திட்டத் தொடக்க விழாவிற்காகக் கோவை வந்திருக்கின்ற எனக்குக் கோவைக்கான சிறப்புத் திட்டங்களையும் தொடங்கி வைக்கும் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. இந்த விழாவில், "செம்மொழிப் பூங்கா" அமைக்க கால்கோள் (அடிக்கல்) நாட்டப்பட்டிருக்கிறது.

2010ஆம் ஆண்டு ஜூன் 23 முதல் 27ஆம் நாள் வரை கோவை மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு அரசின் சார்பில், "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு" மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. அந்த மாநாட்டில் 27.06.2010 அன்று நிறைவுரை ஆற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15 அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் ஒன்றுதான், கோவை காந்திபுரம் அருகில் செம்மொழிப்பூங்கா அமைக்கப்படும் என்பது!

தாவரவியல் தோட்டத்தைப் பின்புலமாக வைத்து இந்தப் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. பொதுமக்கள் இயற்கையைத் தெரிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும் ஏற்ற வகையில், தாவர இனங்கள் நிலைக்கத்தக்க வகையில், நீலகிரி உயிர்க்கோளப் படுகையில் இருக்கின்ற அரிய வகை தாவர இனங்களைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் ஆளுமையை மேம்படுத்தும் நோக்கில், செம்மொழிப் பூங்கா கோவையில் அமைக்கப்படுகிறது.

இத்துடன் முதல்கட்டமாக, 45 ஏக்கர் நிலப்பரப்பிலும், இரண்டாவது கட்டமாக, 120 ஏக்கர் நிலப்பரப்பிலும், இந்தச் செம்மொழிப் பூங்கா அமையவிருக்கிறது. இந்தப் பூங்கா ரூ.133.21 கோடி மதிப்பீட்டில் உலகத்தரத்துடன் இந்தியாவிலேயே தனித்துவத்துடன் பல சிறப்புகளை உள்ளடக்கியிருக்கும்.

இந்தப் பூங்காவில் 'செம்மொழி வனம்', 'மகரந்த வனம்', 'மூலிகை வனம்', 'நட்சத்திர வனம்', 'நறுமண வனம்' போன்ற 23 வகையான தோட்டங்கள் அமைக்கப்படும். இப்படியொரு சிறப்புவாய்ந்த திட்டத்திற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டியதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழா ஏற்பாடுகளை எல்லாம் மிகச் சிறப்பாகச் செய்திருக்கின்ற நம்முடைய பொறுப்பு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், கோவை மாநகராட்சி ஆணையர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சென்னையில் கலைஞர் பல்நோக்கு மருத்துவமனை
- மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்
- கலைஞர் நூற்றாண்டு ஜல்லிகட்டு அரங்கம்
- சிவகங்கையில் கீழடி அருங்காட்சியகம்
- சேலத்தில் தொழில்நுட்பப் பூங்கா, பின்னலாடைப் பூங்காவும்
- திருச்சியில் விளையாட்டு நகரம்
- தஞ்சை, வேலூர், சேலம், தூத்துக்குடியில் சிறு தொழில்நுட்பப் பூங்காக்கள்
- திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம்
- தூத்துக்குடியில் பன்னாட்டு அறைக்கலன் பூங்கா

இந்த வரிசையில், கோவைக்குச் செம்மொழிப் பூங்கா.

இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பார்த்துப் பார்த்துத் திட்டங்களை உருவாக்கிக் கொடுத்து வருகிறோம். பேரறிஞர் அண்ணா வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், முதலமைச்சர் பொறுப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக உழைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு நான் உழைத்துக் கொண்டு வருகிறேன்.

"மக்களுடன் முதல்வர்" போன்ற திட்டங்கள் மூலமாக அரசுக்கும், மக்களுக்குமான நெருக்கம் அதிகமாகின்றது. அரசு வேறு, மக்கள் வேறு அல்ல என்பதை உணர்த்தும் திட்டம்தான் இது. இது போன்ற திட்டங்கள் மூலமாக மக்களும், மாநிலமும் சேர்ந்து வளரும்!

தமிழ்நாட்டை, இந்தியாவில் சிறந்த மாநிலமாக மட்டும் இல்லை, உலகமே வியந்து பார்க்கின்ற மாநிலமாக உருவாக்குகின்ற இலக்கை எனக்கு நானே உருவாக்கிக் கொண்டு உழைத்து வருகிறேன். இந்தக் காட்சியை நாம் விரைவில் காண்போம் என்பது உறுதி! உறுதி! உறுதி! என்று கூறி விடைபெறுகிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2.19 கோடி குடும்பங்கள் பயன்பெறும் பொங்கல் பரிசுத் தொகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி தொடங்கி வைத்தார் – 10.01.2024

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்ற குறளில் அய்யன் திருவள்ளுவர், உழவுத் தொழிலே சிறந்தது என்றும், உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது என்றும் புகழ்ந்த உழவர் பெருமக்களையும், அவர்களுக்குத் துணையாக இருக்கும் கதிரவனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றிகூறி மரியாதை செலுத்தும் நன்னாளாகவும், தமிழர் அனைவரும் ஓரினம் என்ற தமிழினத்தின் சிறப்பினை உலகிற்குப் பறைசாற்றும் பொன்னாளாகவும் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசிக் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்குத் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு, ரூ.1,000 ரொக்கம் ஆகியவற்றை 2,19,71,113 குடும்பங்களுக்கு ரூ.2,436.19 கோடி செலவில் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்திடும் வகையில், ஒரு கோடியே 77 இலட்சம் வேட்டிகள், ஒரு கோடியே 77 இலட்சம் சேலைகளை வழங்கிட தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் பயன்பெறுவதோடு, கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது.

அதன்படி, பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு, ரூ.1,000 ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.01.2024 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ். நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

இப்பொங்கல் பரிசினைப் பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதைத் தவிர்த்திட, நாள், நேரம் குறிப்பிடப்பட்டு சீட்டு வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள், நேரத்தில் அக்குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசினைப் பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கல்வியில் சமூகநீதியையும், புதுமைகளையும் புகுத்துவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்
38ஆவது பட்டமளிப்பு விழாவில்
ஆற்றிய உரை – 02.01.2024

Before I start my speech, let me first extend my New Year wishes to our Honourable Prime Minister and welcome him on behalf of the people of Tamil Nadu.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருக்கக் கூடிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

மேயர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளே,

மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே,

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வம் அவர்களே,

பேராசிரியர் பெருமக்களே,

என் அன்பிற்கினிய மாணவக் கண்மணிகளே,

பத்திரிகை, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள், காலை வணக்கம்.

“எங்கள் வாழ்வும் – எங்கள் வளமும் - மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு” என்று திராவிடக் கொள்கையைத் தமிழ் நிலத்தில் முழங்கிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரால் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இந்தப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம், தமிழ்நாடு! ‘கல்வியில் சிறந்த’ என்ற எந்தப் பட்டியல் எடுத்தாலும், அதில் தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்கள்தான் அதிகமாக இடம்பெற்றிருக்கும். 100 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் கல்விக்காகப் போடப்பட்ட விதைதான், இன்றைக்கு வளர்ந்து, கல்வியில் சிறந்த மாநிலமாக, நாம் உயர்ந்து நிற்கிறோம்.

நமது திராவிட மாடல் அரசு, அனைவருக்கும் கல்வி – அனைவருக்கும் கல்லூரிக் கல்வி – அனைவருக்கும் ஆராய்ச்சிக் கல்வி என்ற இலக்கோடுதான் சமூகநீதிப் புரட்சியைக் கல்வித் துறையில் நடத்தி வருகிறது.

“இன்னார்தான் படிக்க வேண்டும்” என்று இருந்த நிலையை மாற்றி, அனைவருக்கும் அனைத்துவிதமான வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறோம்.

- தமிழ்நாட்டு மாணவர்களைப் படிப்பிலும், வாழ்க்கையிலும் வெற்றியாளராக்குவதற்கு “நான் முதல்வன்” திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது.
- உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், “CM Research Grant Scheme”,
- உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், “CM Fellowship Program” ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
- பெண்கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்” எனும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக்குள் நுழையும் 3,45,362 மாணவியருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு மாணவர்கள் போட்டித் தேர்வுகள், ஆட்சிப் பணித் தேர்வுகள், திறன்சார்ந்த தேர்வுகளுக்குத் தயார் செய்யும்பொருட்டு மதுரையில் “கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்” அமைக்கப்பட்டிருக்கிறது.
- எனது கனவுத் திட்டமான, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 29 இலட்சம் மாணவர்களுக்கும், 32 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தில், ஒரு இலட்சத்து 40 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி, அனைத்துத் தரப்பு மாணவர்களும் தொழிற்கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021-2022, 2022-2023, 2023-2024 ஆகிய மூன்று கல்வி ஆண்டுகளில் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் 28,749 மாணவர்கள் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், மீன்வளம் மற்றும் கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளில் சேர்ந்துள்ளார்கள். இவர்களின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், பேருந்துக் கட்டணம் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டு ரூ.482 கோடி செலவிடுகிறது.

இது எல்லாமே தமிழ்நாட்டின் மாணவர் சக்தியை அடுத்தகட்டத்துக்கு வளர்த்தெடுக்கும் முயற்சிகள்! இன்றைக்குப் பாரதிதாசன் பல்கலைக்கழகம், உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியலிலும், தேசிய தரவரிசைப் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்தப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சிலை, பொறியியல், தொழில்நுட்பத் துறைகள், தமிழ் மையம் ஆகிய அனைத்தையும் தொடங்கியது நம்முடைய திராவிட மாடல் அரசுதான் என்பதைப் பெருமையோடு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கியதன் விளைவாகத்தான்,

❖ பாலிடெக்னிக் மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்.

❖ பி.எச்.டி. மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 கலை, அறிவியல் கல்லூரிகளாகத் தேசியத் தர வரிசையில் உள்ள 35 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 பல்கலைக் கழகங்களில் 22 பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 பொறியியல் கல்லூரிகளில் 15 பொறியியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

இவ்வாறு பல்வேறு பிரிவுகளில் 146 கல்வி நிறுவனங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

❖ 2022, 2023ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு, தேசியத் தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பெற்றுள்ளது.

❖ 2023 ஆகஸ்டு நிலவரப்படி, தேசியத் தரமதிப்பீட்டுக் கவுன்சிலின் தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாட்டிலிருந்து 398 கல்லூரிகளும், 38 பல்கலைக் கழகங்களும் இடம் பெற்றுள்ளன.

❖ தமிழ்நாட்டில் மொத்தம் 1,623 கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 242 மகளிர் கல்லூரிகள்.

இப்படி "உயர்கல்வியின் பூங்காவாகத்" தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களும், தமிழ்நாடும் திகழ்கிறது.

கல்வியில் சமூகநீதியையும், புதுமைகளையும் புகுத்துவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய பல்கலைக்கழகங்களுக்கே சிறப்பான எதிர்காலம் உண்டு.

இன்று பட்டம் பெறும் மாணவக் கண்மணிகளே! நீங்கள்தான் நாட்டின் எதிர்காலம்! சிறந்த அதிகாரிகளாக, தொழில்முனைவோர்களாக நீங்கள் தேர்ந்த துறையில் சிறந்து விளங்குங்கள்!

சமுதாயமும், பெற்றோரும், உங்களுக்குத் தந்த கல்வியைப் பயன்படுத்தி உங்கள் பெற்றோருக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் உங்கள் சேவையை திரும்ப வழங்கிடுங்கள்! முக்கியமாக, சிறந்த மனிதர்களாக விளங்குங்கள்! உங்கள் வெற்றிக்கு உறுதுணையாகும் பட்டங்களை வழங்கிய பல்கலைக்கழகத்துக்கும், நீங்கள் பட்டம்பெற காரணமான ஆசிரியர்களுக்கும் பெருமைத் தேடித் தாருங்கள்!

இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் புகழ் சேருங்கள்! இதுதான் உங்கள் முதலமைச்சராகவும், தந்தையின் உணர்வோடும் நான் வைக்கும் வேண்டுகோள் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

விழுதுகளாகிய நீங்கள் எல்லாம் ஒன்றிணைந்து "நம் பள்ளி நம் பெருமை" என்ற கூற்றை நிலை நிறுத்த வேண்டும்

பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற "விழுதுகள்" அரசுப் பள்ளி முன்னாள் மாணவர்களை ஒன்றிணைக்கும் முன்னெடுப்புத் தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் வாழ்த்துரை – 09.01.2024

தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாகத் திகழ்வதற்கு, மிக முக்கியக் காரணம் கல்வியே. அத்தகைய கல்வியை அனைவருக்குமானதாக மாற்றிய பெருமை, நம் அரசுப் பள்ளிகளையே சாரும்.

தொடக்க காலகட்டம் முதல், இன்றைய நாள் வரை, அரசுப் பள்ளிகளே அனைவருக்குமான கல்வியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய சிறப்புக்குரிய அரசுப் பள்ளிகளில் படித்து, இன்றைக்கு வாழ்க்கையிலும், பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி, பல உயரங்களை எட்டியிருக்கிற, உங்கள் எல்லோரையும் மனதார வாழ்த்துகிறேன்.

நாம் படித்த பள்ளிக்காக, நாம் எல்லோரும் திரும்ப, ஓரிடத்தில் ஒன்று கூடியிருக்கிறோம் என்பது மிகவும் முக்கியமான தருணம். இப்போது முதல், நாம் படித்த அந்த அரசுப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஊக்கமாகவும், அந்தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு நாம் உறுதுணையாகவும் இருப்பதோடு, அந்தப் பள்ளிக்கும், ஊருக்கும் இணைப்பை ஏற்படுத்துகிற, இணைப்புப் பாலமாகவும், நாம் எல்லோரும் இருக்க வேண்டும்.

'நம் பள்ளி, நம் பெருமை!' என்கிற முழக்கத்திற்கு முன்னாள் மாணவர்களாகிய நீங்கள்தான் சொந்தக்காரர்கள். நீங்கள்தான் 'விழுதுகள்' விழுதுகளாகிய நீங்கள் எல்லாம், ஒன்று சேர்ந்து "நம் பள்ளி நம் பெருமை" என்ற கூற்றை நிலைநிறுத்த வேண்டும். அதற்கு நாம் அனைவரும் பள்ளி மேலாண்மைக் குழுவோடு இணைந்து நம் பள்ளியின் மேம்பாட்டிற்காகச் செயலாற்ற வேண்டும்.

விழுதுகளாகிய ஒவ்வொருவரும் நம்முடைய அரசுப் பள்ளிகளைப் பேணிக் காப்பதையும், அவற்றை மேம்படுத்துவதையும் நமக்கான பொறுப்பாக எடுப்போம், அடுத்த தலைமுறையினருக்கான நம்பிக்கையாகவும் வழிகாட்டியாகவும் இருப்போம்.

நம் பள்ளி, நம் பெருமை என்பதனை நம் கடமையாக முன்னெடுத்துச் செயல்படுத்துவோம்.

கலைஞர் நூற்றாண்டு கிளாம்பாக்கம் பேருந்து நிலைய பராமரிப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

படமும் / செய்தியும்

தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், 09.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிலுள்ள கலைஞர் நூற்றாண்டு கிளாம்பாக்கம் பேருந்து முனையம் செயல்பாடு, பராமரிப்புப் பணிகள், போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் தடுப்பதற்கும், பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகக் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதில், எப்போதும் கவனமாக உள்ளது நமது அரசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 09.01.2024

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமது திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதிலும், அவர்களது சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதிலும் எப்போதும் கவனமாக உள்ளது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

சிறுபான்மையின மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்புகளில் சமமான வாய்ப்பை வழங்கியும், அவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை உறுதிசெய்தும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்தியும், சிறுபான்மையினருக்கு ஒரு வளமான எதிர்காலத்தினை உருவாக்குவதில் எங்களது அரசு பெரும் பங்காற்றி வருகிறது என்றால், அது மிகையல்ல.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல்,

- கிறித்தவத் தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள், பணியாளர்கள் மேம்பாட்டுக்காக நல வாரியம்;
- சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியர்க்குச் சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு;

- கரூர், மதுரை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒரு கிறித்தவ உதவிச் சங்கம் கூடுதலாகத் துவங்கிட நிதி ஒதுக்கீடு;
- ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் செல்வதற்கு அருட் சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்வு;
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிகக் கடன்கள்

என நமது திராவிட மாடல் அரசின் சார்பில் கிறித்தவ மக்களுக்காக எண்ணற்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் மணிமகுடமாக, கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் இடஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமெனத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தனித்தீர்மானம் கொண்டு வந்து நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

இப்படி எண்ணற்ற திட்டங்களை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது காலம் தொட்டு, நாங்கள் சிறுபான்மையினரின் நலனைக் கருத்தில் கொண்டு திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையாக, உறுதியோடு செயல்படுத்தி வருகிறோம்.

அந்த வகையில், இங்கே நீங்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையிலும், கோரிக்கைகளின் அடிப்படையிலும் அரசு சார்பில் நாங்கள் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து உங்களுக்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

- உபதேசியர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் தளர்வு செய்யப்பட்டு, அது இம்மாத இறுதிக்குள் தொடங்கப்படும்.
- கல்வி நிறுவனங்களுக்குச் சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் பெறுவதற்கு இணைய வழியில் விண்ணப்பித்துச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கான Web Portal இந்த மாதத்திற்குள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் செல்வதற்கு அரசு நிதியுதவி வழங்குவதற்குத் திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளும் (Revised Guidelines) இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும்.
- கிறித்துவக் கல்லறைகளில் மீண்டும் ஒரு உடலை அடக்கம் செய்வதற்குத் தற்போதுள்ள விதிகளைத் தளர்த்தி சவப்பெட்டியில்லாமல் புதைக்கப்பட்ட இடத்தில், 12 மாதங்களுக்குப் பிறகு வேறு ஒருவரின் சடலத்தைப் புதைக்க அனுமதி அளிக்கும் ஆணையையும்;

மரத்தினால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் புதைக்கப்பட்ட இடத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு அதே குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவரின் சடலத்தைப் புதைக்க அனுமதி அளிக்கும் ஆணையையும்;

உலோகத்தினால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் புதைக்கப்பட்ட இடத்தில், ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு அதே குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவரின் சடலத்தைப் புதைக்க அனுமதி அளிக்கும் ஆணையையும்;

சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள கிறித்துவக் கல்லறையில் இருப்பதைப் போன்று உடல்களை அடுக்ககப் பெட்டகங்களில் அடக்கம் செய்ய அனுமதியளிக்கும் ஆணையையும் இந்த வார இறுதிக்குள்ளாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய விதி, தமிழகத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றில் உள்ள கிறித்துவக் கல்லறைகளுக்குப் பொருந்தும். கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் / கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- கோயில், மசூதி, தேவாலயம், குர்த்வாரா போன்றவற்றின் மூலம் பொது நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், முறைப்படுத்துதல், மறு இருப்பிடம் செய்தல் தொடர்பாக விரிவான கொள்கை அரசால் உருவாக்கப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி பெறுவதிலும், வழிபாட்டுத் தலங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதிலும் பல இடர்ப்பாடுகளைக் களைந்து, ஒரு நிலையான இயக்க

நடைமுறை (SOP) வெளியிடப்படும். இதற்காக உயர்மட்ட அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

❖ அரசு சாரா நிறுவனங்களுக்கான மானியத் தொகையை எந்தவித தங்கு தடையுமின்றி, விரைந்து வழங்குவதற்கு ஏதுவாக, உரிய இணைய வழி முகப்பு உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

❖ இல்லங்கள், விடுதிகளுக்கான உரிமம் பதிவு, புதுப்பித்தல் குறித்துத் தேவையான அனைத்துச் சான்றிதழ் மற்றும் அனைத்து ஆவணங்கள் வழங்கப்பட்டவுடன் குறுகிய காலத்திற்குள் உரிமம் வழங்கப்படும்.

❖ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் வழங்கப்படும் அரிசி போன்றவை இல்லங்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெறுவது தொடர்பாக மாநில அளவில் உள்ள துறைகளின் மூலம் இதற்கான விநியோக அனுமதி, குறைத்தீர்வு வழிமுறைகள் (Grievance redressal mechanism) வழங்கப்படாமல் மாவட்ட ஆட்சியரின் மூலமே இதற்கான முன்னெடுப்புகள் நடைமுறைப்படுத்தப்படும்.

❖ அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Labs), வானவில் மன்றம், தேன் சிட்டு மலர், கலைத்திருவிழா போன்ற திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்துவது குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

❖ அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற மாணவிகள் புதுமைப்பெண் திட்டத்தில் சேர்த்தல் குறித்து நிதி நிலை அறிக்கையில் நல்ல செய்தி வெளிவரும்.

❖ கிராமப்புறங்களில் உள்ள அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் குறித்து வரும் நிதிநிலை அறிக்கையில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

❖ அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாளர் நிர்ணயம், பணி நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்தல், பணியிட மாற்றங்கள், பதவி உயர்வுகள் குறித்த கோரிக்கைகளுக்கெனத் தனியாக ஒரு இணையதள வசதி ஏற்படுத்தப்படும்.

❖ பள்ளிக்கல்வித் துறையில், அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து வகையான ஆசிரியர்கள் நேரடி நியமனத்திற்கான உச்ச வயது வரம்பினைப் பொதுப்பிரிவினருக்கு 53 எனவும், இதரப் பிரிவினருக்கு 58 எனவும் நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வயது வரம்பு அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

❖ சிறுபான்மையினரின் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில், யு.ஜி.சி., அரசு விதிகளுக்குட்பட்டுத் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழகம், அரசால் மூன்று மாத காலத்திற்குள் நியமன அங்கீகாரம் அளிக்கப்படும்.

❖ மாநில அரசால் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மதசார்பு சிறுபான்மையினர் (Religious Minority) அந்தஸ்து சான்றிதழ் தற்போது ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இனிவருங் காலங்களில் இச்சான்றிதழ் காலம் குறிப்பிடப்படாமல் நிரந்தரச் சான்றிதழாக வழங்கப்படும்.

❖ சமூகநலத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின்கீழ் உதவி பெறும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களைப் பதிவு செய்தல், உரிமங்களைப் புதுப்பித்தல், நிதியுதவி, மானியங்களைப் பெறுவதற்கான நடைமுறைகள் ஆகியவை எளிமைப்படுத்தப்படும்.

இதற்கென பிரத்யேகமாக ஒரு இணையதளம் உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நான் குறிப்பிட்ட விவரங்களில் இடம்பெறாத உங்கள் கோரிக்கைகள், கருத்துக்கள்

மீதும் அரசு உரிய கவனம் செலுத்தி அவற்றிற்கும் விரைவில் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது அனைத்துக் கோரிக்கைகளையும் கேட்க திறந்த மனத்தோடு இருக்கிறேன்.

மேலும், தொடர்புடைய அரசுச் செயலாளர்களிடம் உங்கள் கோரிக்கைகளை வழங்கலாம். உரிய நேரத்தில் அவற்றைப் பரிசீலித்து, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளிக்கிறேன்.

திராவிட மாடல் அரசின் இந்தப் பணி தொய்வின்றித் தொடரும் என்று கூறி, அதற்கு உங்களது ஒத்துழைப்பினைத் தொடர்ந்து தாருங்கள் எனக் கேட்டு விடைபெறுகிறேன்.

தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதி நீர் இணைப்புத் திட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரிநீரைக் கொண்டு செல்வதற்கான சோதனை ஓட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆணை - 17.12.2023

கடந்த மார்ச் 2008இல் நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தபடி, தாமிரபரணி ஆற்றிலிருந்து கடலில் உபரியாக கலக்கும் 13,758 மில்லியன் கன அடி வெள்ளநீரில், கன்னடியன் (தாமிரபரணியின் 3ஆவது) அணைக்கட்டிலிருந்து 2,765 மில்லியன் கன அடி நீரைக் கருமேனியாறு, நம்பியாறு நதிகளுடன் இணைக்கும் திட்டத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தை நான்கு நிலைகளாக செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 21.02.2009 அன்று இத்திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டன. தற்போது, முதல் மூன்று நிலைகளுக்கான பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு நான்காவது நிலைப்பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் 67.1 கி.மீ. நீளத்திற்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கி.மீ. நீளத்திற்கும், ஆக மொத்தம் 75.2 கி.மீட்டர் நீளத்திற்கு வெள்ளநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 17,002 ஹெக்டேர் புதிய பாசனப் பரப்பு உட்பட 23,040 ஹெக்டேர் நிலங்கள் (56,933 ஏக்கர்) பாசன உறுதி பெறும். திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, நாங்குநேரி, இராதாபுரம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளும் தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளும் பயன்பெறும். திருநெல்வேலி மாவட்டத்தில் 32 கிராமங்கள், 177 குளங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 18 கிராமங்கள், 75 குளங்களும் பயன்பெறும்.

தற்போது வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து, தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இத்திட்டத்தில் உபரிநீரைக் கொண்டு செல்வது குறித்து, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களிடமும் நீர்வளத்துறை அலுவலர்களுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்தாலோசித்தார்கள். இந்த ஆலோசனையின்போது எடுக்கப்பட்ட முடிவின்படி, கன்னடியன் வெள்ளப்பெருக்குக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுச் சோதனை ஓட்டம் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இவ்வாறு உபரிநீர் திறக்கப்பட்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளில் வாழும் விவசாயிகளின் நூற்றாண்டுக் கனவான இத்திட்டம் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால், வேளாண் பெருமக்கள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாட்டு மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைதளப் பதிவு - 09.01.2024

அடித்தட்டு மக்களின் ஏற்றம், எல்லோருக்கும் எல்லாம் என்பதைக் குறிக்கோளாகக்கொண்டு செயல்பட்டுவரும் நமது திராவிட மாடல் அரசு, கல்வியும் சுகாதாரமும் இரு கண்கள் எனப் போற்றி முன்னுரிமை அளித்துத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஒரு குழந்தைகூட பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடக்கூடாது, போதிக்கும் வேளையில் ஊன்றிப் பாடங்களைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, நாட்டுக்கே முன்னோடியாக, கடும் நிதிநெருக்கடிக்கு இடையிலும் செயல்படுத்திவரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நாட்டு மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது. வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் அன்றாடப் பணிச்சுமையைக் குறைத்து இருக்கிறது.

மாணவச் செல்வங்கள் படிப்பைப் பாதியில் கைவிடுவதை இந்தத் திட்டம் தடுத்து நிறுத்தியது மட்டுமன்றி, பள்ளிக்கூடங்களிலும் சமுதாயத்தில் பல நற்பயன்களுக்கு வித்திட்டு வருகிறது.

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு சிற்றுண்டி உண்ட பின், மீதமிருக்கும் உணவு வீணாவதில்லை; மாறாக, ஆறாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியரில் யார் காலை உணவு சாப்பிடாமல் வந்துள்ளனர் என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு அந்த உணவை வழங்குகின்றனர் என்ற செய்தி அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். காலையில் வேலைக்குச் செல்லும் தனது தாயால் சமைக்க முடியவில்லை என்பதால் பசியோடு பள்ளிக்கு வந்த ஒன்பதாம் வகுப்பு மாணவன் ஒருவன், பள்ளியில் பகிர்ந்தளிக்கப்படும் சிற்றுண்டியை உண்பதாகக் கூறியதைப் படிக்கும்போது நெகிழ்ந்தேன். அவரைப்போல, பசியோடு வரும் பல மாணவர்களும் உணவருந்திய பின் வகுப்புக்குச் செல்கிறார்கள் என்பதைக்கண்டு, ஒரு நல்ல நோக்கத்தோடு செயல்படுத்தப்படும் திட்டம், மேலும் பற்பல சமூக நன்மைகளுக்கு வித்திடுகிறது, நிறைவைத் தருகிறது. உணவை வீணாக்காமல், பகிர்ந்தளிக்கும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எத்தனைக் கடினமான சூழ்நிலை இருந்தாலும் நம் வருங்காலத் தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தர வேண்டும் என்ற எனது கனவு, கண் முன்னே பலன் தரும்போது ஏற்படும் மகிழ்ச்சியைச் சொல்லவா வேண்டும்!

"கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டி - 2023"க்கான துவக்க விழா அழைப்பிதழ் வழங்கல்

படமும் செய்தியும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் டெல்லியில் 04.01.2024 அன்று சந்தித்து, தமிழ்நாட்டில் வரும் ஜனவரி 19 முதல் 31ஆம் தேதிவரை நடைபெறவுள்ள "கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி-2023"க்கான துவக்க விழா அழைப்பிதழை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குப்பை, தோட்டக் கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொண்ட 3,449 தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கினார் - 12.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.12.2023 அன்று, பெருநகரச் சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிக்ஜாம் புயல், கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கிய குப்பை மற்றும் தோட்டக்கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3,449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களுக்குத் தலா 4 ஆயிரம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக 15 தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

தமிழ்நாட்டில் 'மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டது. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிய மக்களை மீட்டுப் பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு. அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருந்து, போர்வை, பாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன் மழைக்காலங்களில் ஏற்படக்கூடிய நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகள். தாம்பரம், ஆவடி மாநகராட்சிகள், கூடுவாஞ்சேரி, மறைமலைநகர், பொன்னேரி, திருநின்றவூர், மாங்காடு, பூந்தமல்லி, திருவேற்காடு, குன்றத்தூர் ஆகிய நகராட்சிப் பகுதிகளில் உள்ள தெருக்கள், சாலைகளில் தேங்கியுள்ள குப்பைகள், தோட்டக்கழிவுகளை அகற்றி தூய்மைப் பணிகளை மேற்கொள்ள திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், வேலூர். சேலம், திருப்பூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து 3,449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.

மிக்ஜாம் புயல், கனமழையினைத் தொடர்ந்து, பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தேங்கியிருந்த குப்பை, தோட்டக் கழிவுகளை அகற்றி சுத்தம் செய்திடும் வகையில், திருநெல்வேலி மண்டலத்தில் 173 நபர்கள், மதுரை மண்டலத்தில் 287 நபர்கள், தஞ்சாவூர் மண்டலத்தில் 185 நபர்கள், வேலூர் மண்டலத்தில் 396 நபர்கள், வேலூர் மாநகராட்சியில் 107 நபர்கள், சேலம் மண்டலத்தில் 91 நபர்கள், சேலம் மாநகராட்சியில் 220 நபர்கள், திருப்பூர் மண்டலத்தில் 225 நபர்கள், திருப்பூர் மாநகராட்சியில் 133 நபர்கள், செங்கல்பட்டு மண்டலத்தில் 4 நபர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சியில் 414 நபர்கள், ஈரோடு மாநகராட்சியில் 113 நபர்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 260 நபர்கள் என மொத்தம் 2,608 தூய்மைப் பணியாளர்கள் தூய்மைப் பணிகளில் ஈடுபட்டனர். பெருநகரச் சென்னை மாநகராட்சியின் 22,075 தூய்மைப் பணியாளர்களும், தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

மிக்ஜாம், கனமழையின் காரணமாக 46,727,66 மெட்ரிக் டன் குப்பை, தோட்டக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.

பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 30.11.2023 முதல் 10.12.2023 வரை 162 நிவாரண முகாம்களில் 1,35,681 நபர்கள் தங்க வைக்கப்பட்டனர். நிவாரண மையங்களில் தங்கிய பொதுமக்கள், வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மூன்று வேளைகளுக்கு 49,59,351 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கனமழையால் ஏற்பட்ட குப்பைகள், தோட்டக் கழிவுகளை அகற்றிட தாம்பரம் மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, கூடுவாஞ்சேரி, மறைமலைநகர் பொன்னேரி, திருநின்றவூர், மாங்காடு, பூந்தமல்லி, திருவேற்காடு பகுதிகளில் 841 தூய்மைப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டு. குப்பைகள், தோட்டக்கழிவுகள் அகற்றப்பட்டன.

கடினமான இச்சூழ்நிலையில் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து வந்து குப்பைகளை அகற்றிடும் பணிகளை மேற்கொண்ட 3,449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி ஊக்கத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

படமும் / செய்தியும்

சுயஉதவிக் குழுக்களின் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு நிதியுதவி

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 23.12.2023 அன்று நடைபெற்ற விழாவில், சென்னை, மேற்கு மாம்பலம் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ.1.40 கோடிக்கான காசோலையை வழங்கினார்.

தையூர் தமிழ்நாடு கட்டுமானக் கழகப் பயிற்சி நிலையத்தில் உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.12.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக, தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழகப் பயிற்சி நிலையத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழுக்களின் தலைவராக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரும், துணைத் தலைவராகத் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத் தலைவரும், உறுப்பினர் செயலாளராகத் தொழிலாளர் ஆணையரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்புப் பிரதிநிதியாகத் தொழிலாளர் நலத்துறைச் செயலாளரும், நிதித்துறைச் செயலாளரும், பொதுப்பணித்துறைச் செயலாளரும், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளரும், ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறைச் செயலாளரும், நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், CREDAI, Builders Association of India (BAI), CII, FICCI மற்றும் Construction Industrial Developmental Council (CIDC) பிரதிநிதிகளும் ஆட்சிமன்றக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறன் மேம்பாட்டுப் பயிற்சியைத்
தொடங்கி வைத்தார் – 15.12.2023

தமிழ்நாடு கட்டுமானக் கழகம், அரசு, தனியார் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் மூலம் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கட்டுமானத் தொழில் சார்ந்த நவீனப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கான மாற்றியமைக்கப்பட்ட மாதிரி நலத்திட்டத்தின் (Modified Model Welfare Scheme) அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களும், அவர்களுடைய வாரிசுதாரர்களும், திறன் மேம்பாடு பெறுவதற்கு ஏதுவாக மாநில அரசின் திறன் மேம்பாட்டுக் கழகம் /

ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத்துறை / தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகம் இவற்றின் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், உதவித்தொகையும், பயிற்சிக்கான கட்டணமும் வழங்கப்படுகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூன்றாவது ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் 24.08.2022 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தை மறு சீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டு சென்னை, டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரிய கட்டடத்திலிருந்து, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 23 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்கள் 54 வகையான தொழில் இனங்களில் பதிவு செய்துள்ளனர். பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தங்களுடைய தொழிலினைத் திறம்படச் செய்யவும், புதியதாகத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் திறன் பெற ஏதுவாகவும் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் பயிற்சி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

முதற்கட்டமாகத் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர், எலக்ட்ரீசியன் உள்ளிட்ட 5 தொழில் இனங்களில் ஈடுபடும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 3 மாதங்கள் திறன் பயிற்சியும் வழங்க முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கட்டுமானக் கழகம் இப்பயிற்சி வழங்க ஏதுவாகக் கட்டுமானத் தொழில் வளர்ச்சிக் குழுமம் (CIDC) மற்றும் L&T கட்டுமானப் பயிற்சி நிலையம் (Larsen & Toubro Construction Limited) ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஏற்படுத்தப்பட்டது.

7 நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு (Skill Up-gradation Training) வரும் தொழிலாளர்களுக்குத் தினசரி ரூ.800 வேலைத் திறன் இழப்பீட்டு உதவித்தொகையும், இலவச தங்குமிடமும், 3 மாதங்கள் திறன் பயிற்சியில் (Skill Development Training) கலந்து கொள்பவர்களுக்கு உணவு, தங்குமிடமும் இலவசமாக வழங்கப்படும். மேலும் பயிற்சிக் கட்டணம் ஏதும் இல்லை.

2023-2024க்கான தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள், அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4,000 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர், எலக்ட்ரீசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதியதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1,000 நபர்களுக்குத் திறன் பயிற்சி அளித்தல் ஆகியவை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, 4,000 தொழிலாளர்களுக்கு ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 1,000 தொழிலாளர்களுக்கு மூன்று மாதகாலத் திறன் பயிற்சியும் ஆண்டுதோறும் தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் வழங்கிட ரூ.5.86 கோடி தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக, கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும் தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் காணொலிக்காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு நிதியாண்டிலும் 5,000 கட்டுமானத் தொழிலாளர்கள் பயிற்சிப் பெற்றுப் பலன் பெறுவர். இப்பயிற்சியின் வாயிலாக தொழிலாளர்களின் தொழில்திறன், ஆற்றல் மேம்பட்டு, தனியார் நிறுவனங்களில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்று அவர்களது வாழ்வாதாரம் உயர வழிவகை ஏற்படும்.

மிக்ஜாம் புயலால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில்

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நிவாரணத் தொகை வழங்கும் பணியினைத் தொடங்கி வைத்தார் - 17.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.12.2023 அன்று, சென்னை, வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகர், நியாயவிலைக் கடை அருகில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணத் தொகை வழங்கும் பணியினைப் பயனாளிகளுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் 2023 டிசம்பர் 3, 4 ஆகிய தினங்களில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பெரும் மழைப்பொழிவின் காரணமாகச் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது.

"மிக்ஜாம்" புயல் வெள்ளத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக ரூ.6,000 ரொக்கமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.12.2023 அன்று அறிவிப்பினை வெளியிட்டார்.

இந்த நிவாரணத்தொகை, சென்னை மாவட்டத்தின் அனைத்து வட்டங்கள், செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும், திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி, பூவிருந்தவல்லி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் ஆகிய ஆறு வட்டங்கள், ஆகிய பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலமாக ரூ.6,000 நிவாரணத்தொகை ரொக்கமாக வழங்கப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் 13 இலட்சத்து 72 ஆயிரத்து 509 குடும்ப அட்டைதாரர்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 6 இலட்சத்து 8 ஆயிரத்து 726 குடும்ப அட்டைதாரர்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 3 இலட்சத்து 12 ஆயிரத்து 952 குடும்ப அட்டைதாரர்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 149 குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெறுவர். இதற்கெனத் தமிழ்நாடு அரசால் 1,486 கோடியே 93 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிவாரணத் தொகை வழங்கும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகரில் உள்ள நியாயவிலைக் கடை அருகில் ரூ.6,000 நிவாரணத் தொகையினை பயனாளிகளுக்கு வழங்கித் தொடங்கி வைத்தார். இந்நிவாரணத் தொகையைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

வெள்ள நிவாரணத்தொகை ரூ.6,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டதும் அவர்களது கைபேசிக்குக் குறுஞ்செய்தி அனுப்பப்படும். வெள்ள நிவாரணத்தொகை விநியோகம் தினசரி காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரையும், மதியம் 3.00 மணி முதல் 5.00 வரையும் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் முதியோர், கைக்குழந்தையுடன் வரும் பெண்களுக்கு வெள்ள நிவாரணத்தொகை வழங்கப்படுவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிவாரணத்தொகை வழங்கும் பணியினைத் தொடங்கிவைத்த பின்னர், நியாயவிலைக் கடை அருகில் உள்ள குறைதீர் விண்ணப்பங்கள் பெறுதல் மையம், உதவி மையத்திற்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மக்களின் துயர் நீக்க எனது பயணம் என்றும் தொடரும்....

மிக்ஜாம் புயல் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கு நிவாரணமாக ரூ.6,000 வழங்கும் பணியைச் சென்னை வேளச்சேரியில் துவக்கி வைத்தேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தொகை வழங்கிட தமிழ்நாடு அரசு ரூ.1,486 கோடி ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் 24 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுவர்.

மக்களின் துயர் நீக்க என்றும் மக்கள் பணியில் எனது பயணம் தொடரும்...!

- மிக்ஜாம் புயல் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தொகை ரூ.6,000 வழங்கும் பணியினைத் தொடங்கி வைத்தது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைதளப் பதிவு - 17.12.2023

"மிக்ஜாம் புயல்"
தென் மாவட்டங்களில் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தேசியப் பேரிடராக அறிவித்து, சீரமைப்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள விரைந்து நிதி ஒதுக்கீடு செய்திடக் கோரிக்கை

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களைச் சந்தித்து,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கோரிக்கை மனு - 19.12.2023

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை, 19.12.2023 அன்று, புதுதில்லியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்கீடு செய்யக் கோரியும், தென் மாவட்டங்களில் தற்போது பெய்த அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு, நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்து, அப்பாதிப்புகளை சீரமைத்திடத் தேவையான நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார்.

மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்து மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது குறித்தும், புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளும், மின்சார உட்கட்டமைப்புகளும், உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் கட்டமைப்புகள் கிராமச் சாலைகள் போன்றவைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், தமிழ்நாடு அரசு மீட்பு, நிவாரண நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டதால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் மிக விரைவாக இயல்பு நிலை திரும்பியது குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் 07.12.2023 அன்று சென்னைக்கு வருகை தந்து, 'மிக்ஜாம்' புயல் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது குறித்தும், ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக்குழு, 12.12.2023 மற்றும் 13.12.2023 ஆகிய நாட்களில் மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்து, அக்குழு தன்னுடன் ஆலோசனை மேற்கொண்டது குறித்தும் எடுத்துரைத்ததுடன், தமிழ்நாடு அரசு மீட்பு,

நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொண்டதற்கு அக்குழு பாராட்டுத் தெரிவித்ததையும் குறிப்பிட்டு, சீரமைப்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தற்காலிக நிவாரணத் தொகையாக ரூ.7,033 கோடியும், நிரந்தர நிவாரணத் தொகையாக ரூ.12,659 கோடியும் கோரப்பட்டதைத் தெரிவித்து, அந்நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாகப் (டிசம்பர் 17 மற்றும் 18) பெய்த கனமழை முதல் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விளக்கி, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்பு, நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, சுற்றுப்புற மாவட்டங்களில் கடந்த 47 ஆண்டுகளாக இல்லாத கனமழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பையும், தென் மாவட்டங்களில் தற்போது வரலாறு காணாத வகையில் 100 ஆண்டுகள் இல்லாத கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில்கொண்டு, தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

எனவே, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2,000 கோடியை அவசர நிவாரண நிதியாக வாழ்வாதார உதவிக்காகவும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களின் தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காகவும் வழங்கிட வேண்டும் என்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

படமும் / செய்தியும்

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 14.12.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் திரு. குணால் சத்யாத்ரி அவர்களிடம் மிக்ஜாம் புயல் பாதிப்புகள், நிதி ஒதுக்கீட்டிற்கான கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார்.

மக்கள் போற்றிய மகத்தான திட்டங்கள்

அன்று

"உழவர் சந்தைத் திட்டம்"

கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அறுவடை செய்தவுடன் உரிய விலையைப் பெறுவதற்கும் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துள்ள சர்க்கரை ஆலைகள் வழிவகை செய்வது போன்ற சட்டப்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி காய்கறிகள், பழங்கள் முதலான வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டுசென்று இடைத்தரகர்கள், வணிகர்கள் குறுக்கீடு ஏதுமில்லாமல் உழவர்கள் நுகர்வோருக்கு நேரிடையாக, நியாயமான விலையில் விற்பனை செய்து வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரக்கூடிய மிகப் புதிய, அருமையானத் திட்டமான **"உழவர் சந்தைத் திட்டத்தினை"** முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் மதுரை மாவட்டத்தில் 14.11.1999 அன்று தொடங்கி வைத்தார்.

"மக்களுடன் முதல்வர் திட்டம்"

பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய், பேரிடர் மேலாண்மைத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி, நகர்ப்புர வளர்ச்சித்துறை, எரிசக்தித்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்குச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்திடவும் திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக **"மக்களுடன் முதல்வர்"** என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம் பாளையத்தில் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்.

இன்று

குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்
ரூ.155.42 கோடிச் செலவில் 1,000 புதிய வகுப்பறைக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
புதிய வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்தார் - 26.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 26.12.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.155.42 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 1,000 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், மாநிலத்தின் 21 மாவட்டங்களில் ரூ.20.54 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராம ஊராட்சிச் செயலகக் கட்டடங்கள், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.24.39 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், ரூ.15.46 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றைக் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், சாலை வசதிகள், பாலங்கள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதத்தில், பழுதடைந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக அரசு செயல்படுத்தி வருவதுடன், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் போன்ற புதுமையான ஊரக வளர்ச்சித் திட்டங்களையும் இவ்வரசு வகுத்து, அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தி வருகிறது.

குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110இன்கீழ், ஊராட்சி ஒன்றிய தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுமார் ரூ.800 கோடி மதிப்பீட்டில் 6,000 புதிய வகுப்பறைகளும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 1,200 வகுப்பறைகளும் என மொத்தம் ரூ.1,050 கோடி மதிப்பீட்டில் 7,200 வகுப்பறைகள் நடப்பாண்டிலேயே கூடுதலாகக் கட்டப்படும் என்று அறிவித்தார். அதன் அடிப்படையில் 2022-2023ஆம் ஆண்டில் ரூ.800 கோடி மதிப்பீட்டில் 5,653 புதிய வகுப்பறைகள் கட்ட

அரசாணை வெளியிடப்பட்டது. இத்திட்டம் "குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேயச் சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக, தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டி முடிக்கப்பட்ட 1,000 வகுப்பறைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தற்போது, இரண்டாம் கட்டமாக மாநிலத்தின் 34 மாவட்டங்களில் ரூ.155.42 கோடிச் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,000 தொடக்க, நடுநிலைப்பள்ளி வகுப்பறைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்புச் செயலாக்கம் செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.04.2022 அன்று, சட்டப்பேரவை விதி எண் 110இன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், கிராம அளவில், ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறைக்கு மட்டுமே அலுவலகங்கள் தனித்தனியே செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில், பிற துறைகள் மூலம் கிராமங்களில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களை ஒருங்கிணைத்து, அதனைக் கண்காணிக்கக் கிராம அளவில் வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, உள்ளாட்சியில் நல்லாட்சி என்ற நோக்கத்துடன், மக்களாட்சியின் மாண்பினைக் கிராம அளவில் உறுதி செய்திட ஏதுவாக, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, வேளாண்மை, உழவர் நலத்துறை, சமூக நலத்துறை போன்ற முக்கிய துறைகளின்மூலம் செயல்படுத்தப்படக்கூடிய அரசின் பல்வேறு திட்டங்களைக் கிராம அளவில் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்திட 600 ஊராட்சிகளில் "கிராமச் செயலகங்கள்" கட்டப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதனடிப்படையில், கிராம ஊராட்சி அலுவலகம், கிராம நிருவாக அலுவலகம் ஒரே கிராமத்தில் அமையப்பெற்று இருப்பின், அவற்றை முதன்மைப்படுத்தி சுமார் 600 கிராமச் செயலகக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக மாநிலத்தின் 21 மாவட்டங்களில் ரூ.20.54 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராமச் செயலகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

கிராமச்செயலகக் கட்டடங்களில் கிராம ஊராட்சித் தலைவருக்கான அறை, கிராம ஊராட்சி செயலருக்கான அறை, கிராம நிருவாக அலுவலருக்கான அறை, கூட்ட அறை, இணையதள வசதி, பொதுமக்கள் அமர்வதற்கான வசதி, குடிநீர், கழிவறை வசதி ஆகியவற்றுடன் அனைத்துத் துறை அலுவலர்களும் பயன்படுத்திடும் வகையில் கூட்ட அறையில் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், கிராம ஊராட்சியிலுள்ள பொதுமக்கள் கிராமச் செயலகங்களை எளிதில் அணுகி தங்களது குறைகளைப் போக்கிட வழிவகை ஏற்படும்.

102 கிராம ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்புச் செயலாக்கம் செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், தேசிய கிராம சுயாட்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் ரூ.24.39 கோடிச் செலவில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 102 கிராம ஊராட்சி மன்றக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்புச் செயலாக்கம் செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது

பல ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டுப் பழுதடைந்த நிலையில் இருந்த ஊராட்சி ஒன்றியக் கட்டடங்களுக்குப் பதிலாக, நாமக்கல் மாவட்டம் – பரமத்தி, தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் – கெலமங்கலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணச்சநல்லூர், கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி தெற்கு ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்க் கூறு நிதியிலிருந்து ரூ.15.46 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 5 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

சென்னை பெட்ரோ கெமிக்கல் நிறுவன வளாகத்திலிருந்து வெள்ள நீரோடு கலந்து வெளிவந்த எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.8.68 கோடி நிவாரணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவிட்டுள்ளார் - 23.12.2023

கொசஸ்தலை ஆற்றில் எண்ணூர் முகத்துவாரப் பகுதியில் கடந்த 05.12.2023 அன்று ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினை அகற்றிட தமிழ்நாடு அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிகழ்வில் காட்டுக்குப்பம், சிவன்படைக்குப்பம், எண்ணூர் குப்பம், முகத்துவாரக்குப்பம், தாழங்குப்பம், நெட்டுக்குப்பம், வ.உ.சி. நகர், உலகநாதபுரம் மற்றும் சத்தியவாணி முத்து நகர் ஆகிய கடலோர மீனவ கிராமங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள், மீன்பிடி வலைகளில் எண்ணெய் படிந்து சேதம் ஏற்பட்டது. மேலும், இக்கிராமங்களைச் சார்ந்த மீனவர்கள் எண்ணெய் கசிவினால் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல இயலாததால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.6,000 வழங்கப்படும் என STT அறிவிக்கப்பட்டு, அத்தொகையும் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கூடுதலாக எண்ணெய் கசிவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மேற்கண்ட மீனவக் கிராமங்களைச் சார்ந்த 2,301 குடும்பங்களுக்கு நிவாரணத்தொகையாகத் தலா ரூ.12,500 வீதமும், மேலும் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 787 மீன்பிடிப் படகுகளைச் சரிசெய்திட படகு ஒன்றிற்குத் தலா ரூ.10,000 வீதமும் மொத்தம் ரூ.3 கோடி அரசினால் ஒப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நிவாரணத் தொகை பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், சென்னை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 4, 6, 7 ஆகிய பகுதிகளில் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்குத் தலா ரூ.7,500 வீதம் மொத்தம் ரூ.5.02 கோடி நிவாரணத்தொகை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்நிவாரணத்தொகைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். எனவே, மிக்ஜாம் புயல் கனமழையினால் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு ரூ.8.68 கோடி வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

படமும்/ செய்தியும்

செய்தி மக்கள் தொடர்புத்துறை மண்டல அலுவலர்களுக்கான பணி ஆய்வுக்கூட்டம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் மதுரை, திருநெல்வேலி மண்டலங்களின் இணை இயக்குநர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் 03.01.2024 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி, செய்தித்துறைச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., செய்தித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் ரூ.194 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 27.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.12.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், ரூ.32.95 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள் மற்றும் சமுதாய நலக்கூடத்தைத் திறந்து வைத்து, ரூ.138 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விடுதிகள், கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், ரூ.194 கோடி மதிப்பில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதியம், பழங்குடியினருக்கான வாழ்வாதாரத் திட்டம், முதலமைச்சரின் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கானத் தொழில் முனைவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ்க் கடனுதவிகள், பழங்குடியினர்,

தூய்மைப் பணியாளர்களுக்கு வீடுகள் வழங்குதல், உயர்கல்வி பெற கல்வி உதவித்தொகை, கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.

கட்டி முடிக்கப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள், சமுதாய நலக்கூடத்தைத் திறந்து வைத்தல்

கடலூர், செங்கல்பட்டு, திருவள்ளூர், விருதுநகர், திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 10 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் ரூ.9.22 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக் கூடம், சுற்றுச்சுவர், கழிவறை, குடிநீர் வசதி;

திருவள்ளூர், காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர், சிவகங்கை, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் ரூ.19.84 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 9 விடுதிகள்;

திருப்பூர், ஈரோடு, மதுரை, தென்காசி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.3.89 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆதிதிராவிடர் சமுதாய நலக்கூடங்கள்;

என மொத்தம் ரூ.32.95 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதியதாகக் கட்டப்படவுள்ள விடுதிகள், கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 8 விடுதிக் கட்டடங்கள்;

கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஆதிதிராவிடர் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 4 விடுதிக் கட்டடங்கள்;

மாநிலத்தின் 16 மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியின கல்லூரி மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள 22 கற்றல் கற்பித்தல் அறைகள்;

என மொத்தம், ரூ.138 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விடுதிகள், கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ்க் கடனுதவி

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ், ரூ.79.35 கோடி திட்ட மதிப்பீட்டில் 244 பயனாளிகளுக்கு ரூ.53.94 கோடி வங்கிக் கடனுடன் ரூ.25 கோடி மானியம் வழங்குவதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதியத்தின் கீழ் நிறுவனங்களுக்குப் பங்கு முதலீடு

தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதியம் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர்களால் நடத்தப்படும் 3 நிறுவனங்கள், பழங்குடியினரால் நடத்தப்படும் 2 நிறுவனங்கள், என மொத்தம் 5 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.6.50 கோடிப் பங்கு முதலீடு வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வீடுகள் வழங்குதல்

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற தூய்மைப் பணியாளர் உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பங்குத் தொகையில் பயனாளியின் பங்குத்தொகையின் 90 சதவிகிதம் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் மானியமாக விடுவிக்கப்பட்டு ரூ.55 கோடி மதிப்பீட்டில் 500 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பழங்குடியினருக்கு வீடுகள் வழங்கும் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 443 பழங்குடியின இருளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய வட்டங்களில்

ரூ.22.80 கோடிச் செலவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 443 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சரின் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கானத் தொழில் முனைவுத் திட்டத்தில் வங்கிக் கடனுதவி

முதலமைச்சரின் - ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கானத் தொழில்முனைவுத் திட்டத்தின் (CM-ARISE) கீழ், 225 பயனாளிகள் பயன்பெறும் வகையில், ரூ.16.76 கோடி திட்ட மதிப்பீட்டிலான ரூ.10.65 கோடி வங்கிக் கடனுடன் கூடிய ரூ.5.80 கோடி மானியத்திற்கான வரைவோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பழங்குடியினருக்கான வாழ்வாதாரத் திட்டம்

பழங்குடியினருக்கான வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, பிரத்யேகமான வருவாய் ஈட்டும் திட்டங்களை அரசுச்சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தும் வகையில், வேளாண் பொறியியல் இயந்திரங்கள் வழங்குதல், சூரிய மின்சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல், அரியலூர் மாவட்ட இருளர் இன பழங்குடியின மக்களுக்கு முந்திரி சேகரம் செய்து கொள்ளும் உரிமைக்கான ஆணைகள், என மொத்தம் ரூ.1 கோடியில், 5 பழங்குடியினச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சங்க நிருவாகிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

புதிரை வண்ணார் பயனாளிகளுக்கு வங்கிக் கடனுதவி

விளிம்பு நிலையில் உள்ள புதிரை வண்ணார் இன மக்களுக்கான, அடிப்படை சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணி தொடங்கப்பட்டு, அதன் மூலம் கண்டறியப்பட்ட 10 புதிரை வண்ணார் பயனாளிகளுக்கு ரூ.44.16 இலட்சம் திட்ட மதிப்பிற்கான,

ரூ.27.98 இலட்சம் வங்கிக் கடனுதவியுடன் கூடிய ரூ.15.45 இலட்சம் மானியத்திற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்குதல்

ஆதிதிராவிடர், பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின்கீழ், மாநில அரசு வகுக்கும் எதிர்பாராத் திட்டத்தின்படி (Model Contigency Plan) தீவிர வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் 50 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், சமையலர் ஆகிய பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு உட்பயிற்சி உதவித்தொகை வழங்குதல்

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் 1,000 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு உட்பயிற்சி (Internship) காலங்களுக்கான உதவித்தொகை ரூ.1 கோடியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வெளிநாடுகளில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலக் கல்வி உதவித்தொகை வழங்குதல்

ஆதிதிராவிடர், பழங்குடியினர். கிறிஸ்துவராக மதம்மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு ரூ.8 இலட்சத்திற்குக் குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கு ரூ.36 இலட்சத்திற்கு மிகாமலும், ஆண்டுக்கு ரூ.8 இலட்சத்திற்கு மேல் ரூ.12 இலட்சத்திற்குக் குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கு ரூ.24 இலட்சத்திற்கு மிகாமலும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வெளிநாட்டில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில்வதற்காக இந்த ஆண்டு 30 மாணவ, மாணவியர்களுக்கு அனுமதி ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை வழங்குதல்

முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 60 மாணவ, மாணவியர்களுக்குத் தலா ரூ.1 இலட்சம் ஊக்கத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார், ஒடுக்கப்பட்ட மாந்தர்களின் விடுதலைக்காகவும், அவர்களுடைய மனித மாண்பை மீட்டு எடுப்பதற்காகவும், அறிவாயுதம் ஏந்திய புரட்சியாளர், அரசியல் சட்ட பிதாமகர் அண்ணல் அம்பேத்கர் -

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய சமூகநீதிப் பாதையில் திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

சமூக நீதி, சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் ஆகிய மானுட நெறிகளின்படி தமிழ்நாட்டை உருவாக்கத்தான் என்னை நான் ஒப்படைத்து உழைத்துக் கொண்டு வருகிறேன்.

எல்லோர்க்கும் எல்லாம் என்பதை நிருவாக நெறியாகக் கொண்டு திட்டங்களைத் தீட்டி வருகிறோம். அந்த அடிப்படையில், ஆதிதிராவிட பழங்குடியின மக்கள், சமூக, கல்வி பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மேம்படுத்த தனிக்கவனம் செலுத்திப் பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்.

இந்தத் திட்டங்களைச் சிறப்புக் கவனம் எடுத்து அக்கறையோடு தீட்டிச் செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அமைதியாக, அதே நேரத்தில் ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து கொண்டு வருகிறவர் அமைச்சர் கயல்விழி செல்வராஜ்.

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் இந்தத் துறையின் சார்பில் செய்து வருகின்ற திட்டங்களை முன்னெடுத்து இருக்கின்ற முற்போக்குச் செயல்களை நான் சுருக்கமாக நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

- அரசியலமைப்புச் சட்ட நாயகர், அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போற்றும் விதத்தில் அவர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஐ அனைத்து மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்ற அவருடைய விருப்பத்தை எடுத்துச்சொல்கிற 'சமத்துவ நாளாக' நாம் கொண்டாடி வருகிறோம்.
- ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்காகத் தொண்டாற்றி வருகிற நபர்களுக்கு ஆண்டுதோறும் 'டாக்டர் அம்பேத்கர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இப்போது, இந்த விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.5 இலட்சத்திற்கான காசோலை, தகுதியுரை, தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.
- ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்கள் கல்வி பயிலக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- திருத்தி அமைக்கப்பட்ட முனைவர் பட்டப்படிப்புக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ்த் தலா ரூ.1 இலட்சம் வீதம் 2,974 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.
- வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வி பயில மாணவர்களுக்கான

வருமான உச்சவரம்பு ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 31 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

- ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளி விடுதிகள், அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு மாதந்திர உணவுக்கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 1,400 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் நமது அரசால் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது.

- கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.175 கோடி மதிப்பீட்டில் 12 விடுதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

- அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இதேபோல, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்க் கடந்த மூன்றாண்டுகளில் பழங்குடியினர் குடியிருப்புகளில் ரூ.475 கோடிச் செலவில் 25,262 அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

- மக்களிடையே தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 முதல் 30ஆம் நாள் வரை "மனிதநேய வார விழா" நடத்திக்கொண்டு வருகிறோம். தமிழ்நாடு ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தை உருவாக்கியிருக்கோம். கடந்த ஓராண்டுகளில் 102 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிற தீருதவித் தொகை தற்போது உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

- தாட்கோவாவில் செயல்படுத்தப்படுகிற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாகக் கடந்த நிதியாண்டில் மட்டும் 10,466 பயனாளிகளுக்கு ரூ.152 கோடி மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

- தொழில் முனைவோருக்கான சமூகநீதியை உறுதிப்படுத்துகின்ற நோக்கில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதியம் 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.30 கோடி நிதியுடன் தொடங்கப்பட்டிருக்கிறது.

- கடந்தஆண்டு21புத்தொழில்நிறுவனங்கள் ரூ.28.10 கோடி மதிப்பீட்டில் பயன்பெற்ற நிலையில் இந்தத் திட்டத்தின் சிறப்பான வெற்றியைக் கருத்தில் கொண்டு 2023-2024ஆம் நிதியாண்டுக்கு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் 5 பழங்குடியினர், 21 ஆதிதிராவிடர் நிறுவனங்கள் என்று மொத்தம் 26 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. இதில் 13 நிறுவனங்கள் மகளிரால் நிருவகிக்கப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி, வணிகம், சேவை சார்ந்த புதிய தொழில் தொடங்க, திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் ஒன்றரைக் கோடி ரூபாய் வரை கடன் பெற உதவுகிற 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' நம்முடைய அரசால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

- இந்தத் திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.100 கோடி நிதியைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியிருக்கிறது.

- அரியலூர் மாவட்டத்தில் இருக்கின்ற 16 கிராமங்களில் வாழ்கிற மக்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழில் முனைவோராக மாற்றப்பட்டிருக்கிறார்கள்.
- ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் இருக்கின்ற பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிற வகையில் உன்னிக்குச்சி மூலமாக ரூ.1.36 கோடிச் செலவில் தளவாடப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது.
- காடுகளில் வாழ்கின்ற பழங்குடியினரின் வன உரிமையைப் பாதுகாக்க, 11,601 தனிநபர் வன உரிமைகளும், 691 சமூக வன உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.
- தூய்மைப் பணியாளர் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு, 87,327 உறுப்பினர்களுக்கு ரூ.10 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
- புதிரை வண்ணார் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு, அந்த மக்களுடைய வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.10 கோடிக் கூடுதல் நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.
- பழங்குடியினர் ஆன்றோர் மன்றம், பழங்குடியினர் நல வாரியம், நரிக்குறவர் நல வாரியம் ஆகியவை திருத்தி அமைக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியிருக்கிறது.

சமூக நிலைகளில் உயர்த்துகின்ற அனைத்து முயற்சிகளையும் நம்முடைய அரசு கவனத்துடன் மேற்கொண்டு வருகிறது. இதன் தன்னம்பிக்கை, சுயமரியாதை, அதிகாரத்தில் பங்கு போன்ற நிலைகளில் ஆதிதிராவிடப் பட்டியலின மக்களை உயர்த்துகின்ற பணிகளை அரசு செய்துகொண்டு வருகிறது.

இப்படித் தொடர்ச்சியான பணிகள் மூலமாகத்தான் சுயமரியாதைச் சமதர்ம சமுதாயத்தை நாம் உருவாக்கியாகவேண்டும். நிதி ஒதுக்கீடுகளால், தொலைநோக்குப் பார்வையால், கண்காணிப்பால், மற்ற வளர்ச்சிகளை நாம் எட்டிடலாம். ஆனால், சமூக வளர்ச்சியும், சிந்தனை வளர்ச்சியும் மக்கள் மனங்களில் உருவாகவேண்டும். மக்களுடைய மனதளவில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

இது அவ்வளவு சீக்கிரமாக ஏற்படாது என்பதும் உண்மைதான். அதே நேரத்தில் சமூக வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சியை உருவாக்குகின்ற நம்முடைய விழிப்புணர்வுப் பயணம் என்பது, தொய்வில்லாமல் தொடரவேண்டும். அந்தப் பணிகளையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்துகொண்டு வருகிறது.

அண்ணல் அம்பேத்கரின் கனவான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் நிறைந்த, சமூகநீதியின் அடிப்படையிலான ஒரு சமத்துவச் சமுதாயமாகத் தமிழ்நாட்டை உருமாற்றும் வகையில் நம்முடைய விழிப்புணர்வுப் பயணத்தைத் தொய்வின்றித் தொடருவோம்!

"வைக்கம் போராட்டம்" நூற்றாண்டுச் சிறப்பு விழாவில் "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்" வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.12.2023 அன்று, சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டுச் சிறப்பு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "வைக்கம் போராட்டம் (1924-2023) நூற்றாண்டு மலரினை" வெளியிட, மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்ததை நீக்கக் கோரி நடந்த வைக்கம் போராட்டத்தில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில் தந்தைப் பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பின்பு, பல நாட்கள் அங்குத் தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து, அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்துத் தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்து, வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றது.

"வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினை முன்னிட்டுத் தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டுக் காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்" என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள், மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 30.03.2023 அன்று

விதி 110இன்கீழ் 11 அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

சமூகநீதி வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த வைக்கம் போராட்டத்தினைத் தந்தைப் பெரியார் அவர்கள் முன்னின்று நடத்தி, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எல்லைக் கடந்து போராடி வரலாற்றில் பல புரட்சிகளை நிகழ்த்திக் காட்டி வெற்றி கண்ட அவரின் நினைவைப் போற்றவும், அன்னாரின் சமூகநீதிக் கருத்துக்களைப் பின்வரும் சந்ததியினர் தெரிந்துகொள்ளவும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகளைப் பல்வேறு அறிஞர் பெருமக்களிடம் இருந்து பெற்று அதனைத் தொகுத்து "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்" என்ற சிறப்பு மலர் ஒன்றினைத் தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரித்து வெளியிடப்படும் என்ற ஒரு அறிவிப்பும் அதில் இடம்பெற்றிருந்தது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் துணைத் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை திரு. த.மோகன், இ.ஆ.ப., அவர்கள் உறுப்பினர்-செயலராகவும்,

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள் அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறைக் கூடுதல் இயக்குநர், தமிழரசு அச்சக இணை இயக்குநர் (வெளியீடுகள்) திரு. இரா.அண்ணா, தமிழரசு அச்சக உதவி இயக்குநர் திருமதி அ.மகேஸ்வரி, தமிழரசு அச்சக உதவிப் பணி மேலாளர் திரு. தி.சுயம்புலிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாகவும்,

தமிழ் இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் திரு.கோமகன் அவர்கள், மூத்த பத்திரிகையாளர் திரு.ப.திருமாவேலன், தமிழறிஞர் திரு.பழ.அதியமான் ஆகியோர் ஆலோசகர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறையால் இந்நூற்றாண்டு மலர் தயார் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, இக்குழு ஆலோசனைகளின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ள "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்" என்ற சிறப்பு மலரினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, மாண்புமிகு கேரளா முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தமிழ்க் கட்டுரைகள்

இந்நூற்றாண்டு மலரில், திரு. பழ.அதியமான் அவர்கள் எழுதிய 'வைக்கம் போராட்டக் கால நிரல்', ஆசிரியர் திரு. கி.வீரமணி அவர்கள் எழுதிய 'கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெற்றியைத் தழுவிய முதல் மனித உரிமைப் போராட்டம்', திரு.வே.ஆனைமுத்து அவர்கள் எழுதிய 'கேரளத்தில் ஏழு நாட்கள்', திரு.வாலாசா வல்லவன் அவர்கள் எழுதிய 'அன்று இருந்த சூழ்நிலைகள்', திரு.அ.கா.பெருமாள் அவர்கள் எழுதிய 'பெரியாரும் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டமும்', திரு.பெருமாள் முருகன் அவர்கள் எழுதிய 'வைக்கம் போராட்டம்-வரலாற்றுச் சாதனை', திரு.கோ.ரகுபதி அவர்கள் எழுதிய 'சமத்துவத்துக்கான விவாதங்கள்', திரு.நிர்மால்யா அவர்கள் எழுதிய 'டி.கே.மாதவனுடன் ஒரு தலித் போராட்ட நாயகன்', திரு. ப.திருமாவேலன் அவர்கள் எழுதிய 'வைக்கம் வீரர் மட்டுமல்ல, கேரள வீரர்', திரு.கி.தளபதிராஜ் அவர்கள் எழுதிய 'விடை கொடுக்க மறுக்கும் வைக்கம் நினைவுகள்', திருமதி ஐஸ்வர்யா அவர்கள் எழுதிய 'வைக்கத்தில் ஈரோட்டுப் பெண்கள்' போன்ற தமிழ்க் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மலையாளக் கட்டுரைகள்

முனைவர் டி.டி.ஸ்ரீகுமார் அவர்கள் எழுதிய 'வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறு வருடங்கள்', திரு. ரவி வர்மா தம்புரான் அவர்கள் எழுதிய 'கேரள மறுமலர்ச்சியில் தமிழ் மரபின் வேர்கள்-வைக்கம் சத்தியாகிரகம் பின்னணியில் ஒரு பார்வை', முனைவர் சுரேஷ் மாதவ் அவர்கள் எழுதிய 'சிற்றேடத்து சங்குப் பிள்ளை-வைக்கம் சத்தியாகிரகத்தின் முதல் இரத்த சாட்சி', திரு.கே.கே.கொச்சு அவர்கள் எழுதிய 'வைக்கம் சத்தியாகிரகம்-சாதி எதிர்ப்பும் பெரியாரும்', முனைவர் ஓ.கே.சந்தோஷ் அவர்கள் எழுதிய 'வைக்கம் சத்தியாகிரகம்-வரலாறும் சமகாலமும்', முனைவர் எஸ்.ஷாஜி அவர்கள் எழுதிய 'சாதியமைப்பும் வைக்கம் சத்தியாகிரகமும்' போன்ற மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகளும், மலையாளக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

ஆங்கிலக் கட்டுரைகள்

Thiru. Robin Jeffrey அவர்கள் எழுதிய 'Temple entry Movement in Travancore, 1860-1940', V.Balambal அவர்கள் எழுதிய 'E.V.R and Vaikom Satyagraha', Dr.T.K.Ravindran அவர்கள் எழுதிய 'Eight Furlongs of Freedom', Mary Elizabeth King அவர்கள் எழுதிய 'Gandhian Non-violent Struggle and Untouchability in South India. The 1924-1925 Vaikom Satyagraha and Mechanisms of Change', Thiru. Sunny M.Kapikkad அவர்கள் எழுதிய 'Vaikom struggle-Historical Significance of Thanthai Periyar', Thiru. Pazha Athiyaman அவர்கள் எழுதிய 'Gandhi at Vaikom', 'Periyar the Hero of Vaikom', Thiru. K.A.Shaji அவர்கள் எழுதிய 'Vaikom Satyagraha-Thanthai Periyars role and his many differences with Gandhi' போன்ற ஆங்கிலக் கட்டுரைகள் இந்நூற்றாண்டு மலரில் இடம் பெற்றுள்ளன.

இவ்விழாவில், "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" என்ற நூலை மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக, தந்தைப் பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களும் மலர்வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் 28.12.2023 அன்று பிரம்மாண்டமாக நடைபெறவிருந்த "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டுச் சிறப்பு விழா, எதிர்கட்சி முன்னாள் தலைவர் திரு.விஜயகாந்த் அவர்களின் மறைவையொட்டி இரத்து செய்யப்பட்டது.

இவ்விழாவிற்காக வருகை தந்திருந்த மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, பெரியார் திடலில் உள்ள தந்தைப் பெரியார் அவர்கள் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி, மரியாதை செலுத்தினார்கள். அப்போது, வைக்கம் போராட்டத்தின் "வைக்கம் போராட்டம் (1924-2023) நூற்றாண்டு மலர்" "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" ஆகிய நூல்களை வெளியிட்டனர். இந்நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றவிருந்த உரை பின்வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உரை:

அனைவருக்கும் வணக்கம். எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னால், முக்கியமான ஒரு செய்தியை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அண்மையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இதுவரை இல்லாத அளவுக்குப் பெய்த கனமழையால் அங்கே இருக்கக் கூடிய மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில், சகோதரப் பாச உணர்வோடு, 'அன்போடு கேரளம்' என்கிற பெயரில், தமிழ்நாட்டுக்கு நிவாரண உதவிகளையும் அதிகாரிகளையும் அனுப்பி வைத்த கேரள மக்களுக்கும், மாண்புமிகு கேரள முதலமைச்சர் சகாவு பினராயி விஜயன் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாடு முதலமைச்சராக என் நெஞ்சார்ந்த நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?

'வை கத்தி! தீண்டாமைக் கழுத்தில்' என்று

வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி

வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!”

– என்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது கனல் தெறிக்கும் வரிகளால் எழுதினார்.

“ஈ.வெ.இராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதேப் பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்” - என்று அறிவித்துக் கொண்டு 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களின் சமூகநீதியை நிலைநிறுத்தவும் தந்தைப் பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமானது வைக்கம் போராட்டம் ஆகும்.

அத்தகைய வைக்கம் வீரர் – பகுத்தறிவுப் பகலவன் – தந்தைப் பெரியாரின் வெற்றிப் போராட்டங்களில் ஒன்றான வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இவ்விழாவில் கலந்துகொள்ள வருகை தந்துள்ள கேரள மாநில முதலமைச்சர் – மரியாதைக்குரிய காம்ரேட் பினராயி விஜயன் அவர்களை வருக வருக என்று வரவேற்கிறேன்.

சமூகப் புரட்சி இயக்கம்

வைக்கம் போராட்டம் என்பது கேரள சீர்திருத்தவாதிகளும் – தமிழ்நாட்டுச் சீர்திருத்தவாதிகளும் இணைந்து நடத்திய போராட்டம் என்பதால் இரண்டு மாநில அரசும் சேர்ந்து நூற்றாண்டு விழாவை நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த வகையில் நூற்றாண்டுத் தொடக்க விழாவைக் கடந்த ஏப்ரல் மாதம் 1ஆம் தேதியன்று கேரளாவில் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்கள் நடத்தினார்கள். அதில் நான் கலந்துகொண்டேன். இன்றைய தினம் தமிழ்நாடு அரசு நடத்துகிறது. கேரள முதலமைச்சர் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். இணைந்து போராடினால் எதிலும் வெற்றி பெறலாம் என்பதற்கு உதாரணமாகவும் வைக்கம் போராட்டம் திகழ்கிறது.

கேரளத்தில் சமூகப் புரட்சி இயக்கம் என்பது நாராயணகுரு, டாக்டர் பல்ப்பு பத்மநாபன், குமாரன் ஆசான், அய்யன்காளி, டி.கே.மாதவன் – ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

தமிழ்நாட்டுப் புரட்சி இயக்கமானது இராமலிங்க வள்ளலார், வைகுண்டசாமி, அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், டி.எம்.நாயர், தந்தைப் பெரியார் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

சமூக சீர்திருத்த வரலாற்றின் முக்கிய இடம்

இதில் கேரளத்தைச் சேர்ந்த டி.கே.மாதவன் அவர்களும் – தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தைப் பெரியாரும் இணைந்து நடத்திய வெற்றிப் போராட்டம்தான் வைக்கம் போராட்டம் ஆகும். 1924-1925ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூகச் சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது.

அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின், வைக்கம் மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்தது. 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள், கேரளத் தலைவர் டி.கே.மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அப்போராட்டம்.

அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாட்களிலேயே, அதே பகுதியைச் சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இன்றிப் போராட்டம் தவித்தது. இச்சூழலில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தைப் பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பலநாட்கள் அங்குத் தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்துப் பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

போராட்டக்காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை அருவிக்குத்தி என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில் ஒரு மாதகாலம் சிறை தண்டனை அனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்கு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஒரு மாத காலம் திருவனந்தபுரம் சிறையில் கழித்தார்.

'பந்தனத்தில் நின்னு' புத்தகம்

வைக்கம் போராட்டம் நடந்தது மொத்தம் 603 நாட்கள். இதில் 141 நாட்கள் தந்தைப் பெரியார் அவர்கள் பங்கெடுத்தார்கள். அதில் 74 நாட்கள் சிறையில் இருந்தார்கள். வைக்கம் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தமிழ்நாட்டில் இருந்து 7 முறை கேரளத்துக்குச் சென்றுள்ளார் தந்தைப் பெரியார்.

தந்தைப் பெரியார் அவர்களுக்கு என்ன சிறப்பு என்றால் – இந்தப் போராட்டத்தில் கைதான மற்ற தலைவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாக நடத்தப்பட்டார்கள். ஆனால், பெரியாரை மிக மோசமாக நடத்தினார்கள். கையிலும் காலிலும் விலங்கு போட்டு – கழுத்தில் மரப்பலகையை மாட்டி – அடைத்து வைத்திருந்தார்கள். இதே போராட்டத்தில் கைதாகிச் சிறையில் இருந்த தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவ மேனன் அவர்கள் 'பந்தனத்தில் நின்னு' என்ற தலைப்பில் மலையாளத்தில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

அதன் சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன்... " தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் – ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனாக இருந்தவரும் – ஒரு பெரும் பணக்காரரும் – உத்தம தேசாபிமானியுமான - ஈ.வெ.இராமசாமி அவர்களுக்குக் காலில் சங்கிலி மாட்டப்பட்டு இருந்தது. கைதிகளது தொப்பி மாட்டப்பட்டு இருந்தது. முழங்கால் வரையில் வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் மரக்கட்டையை மாட்டிக் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்களுடன் வைக்கப்பட்டுள்ளார். கேரளத்தின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்துக்காகத் தமிழ்நாட்டின் மேல்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவர் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தது எங்களுக்குப் புத்துயிர் தந்தது" – என்று கே.பி.கேசவ மேனன் எழுதி இருக்கிறார்கள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், உடனே ஈரோடு திரும்பாமல் வைக்கம் சென்று மீண்டும் போராடினார் பெரியார்.

போராட்டக்காரர்களுக்கும் மன்னருக்குமான பேச்சுவார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தைப் பெரியாரிடம் கலந்துரையாடல் நடத்திய பிறகே திருவிதாங்கூர் ராணியைச் சென்று சந்தித்தார்.

பெரியாரின் பங்களிப்பு

'சாலைக்குள் அனுமதிக்கிறோம், கோவிலுக்குள் அனுமதிக்க முடியாது' என்று ராணி அவர்கள் அப்போது சொன்னார்கள். இதனைப் பெரியார் அவர்களிடம் சொல்லி, 'கோவில் நுழைவைச் சிறிது காலத்துக்கு நீங்கள் ஒத்தி வைக்க வேண்டும்' என்று காந்தி அவர்கள் அனுமதி பெற்றார் என்பதும் வரலாறு ஆகும். "திருவிதாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வெ.இராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோஷமடைவார்கள்" என்றும் யங் இந்தியா பத்திரிகையில் காந்தி அவர்களே எழுதினார்கள் என்றால் பெரியாரின் பங்களிப்பு எவ்வளவு இருந்துள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

"Mr. Ramasami Naicker arrived on that day from Erode to take charge of the campaign" என்றும்;

ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களை, வைக்கம் கோயில் சாலையை நோக்கி நாகம்மையார் அவர்கள் அழைத்துச் சென்றபோது காவல்துறையால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். ஒவ்வொருவரையும் என்ன ஜாதி என்று கேட்டு – அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவரை மட்டும் உள்ளே விடாமல் தடுத்துள்ளது காவல்துறை. அங்கேயே தர்ணா செய்துள்ளார் நாகம்மையார். அவரது போராட்டத்தைக் கேரளப் பத்திரிகைகள் விரிவாக எழுதி உள்ளன.

"One Ramasami Naicker of Erode is now leading the movement" என்றும் காவல்துறை ஆவணங்களில் பெரியார் பெயர் இருக்கிறது. பெரியார் தலைமை தாங்கினார் என்பதைக் காவல்துறை ஆவணங்களே சொல்கின்றன.

ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. இதில் பெரியார் வீட்டுப் பெண்கள் அளித்த பங்களிப்பு மிக முக்கியமானது ஆகும். தந்தைப் பெரியார் அவர்கள் வைக்கம் சென்றபோது அவருடன் அவரது மனைவி நாகம்மையாரும், பெரியாரின் சகோதரி கண்ணம்மாவும், பெரியாரின் உறவினர்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாளும் சென்றிருக்கிறார்கள். இவர்கள்தான் கேரளப் பெண்களையும் போராட்டத்துக்குள் கொண்டு வந்தார்கள். போராட்டத்துக்கான நிதி திரட்டுவதற்காக இராட்டை நூற்றார்கள் இவர்கள்.

வைக்கம் போராட்டத்தில் தேசத்துரோகத்தில் ஈடுபட்டதாகப் பெரியார் சிறைப்பட்டிருந்த சமயம் நாகம்மையார் தலைமையிலான ஆறு பெண்கள் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். பெரியார் சிறை வைக்கப்பட்டு இருப்பதால் மற்ற தலைவர்கள் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று நாகம்மையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம்

மகத் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். அதன்பிறகுதான் தமிழ்நாட்டில் ஏராளமான கோயில் நுழைவுப் போராட்டங்கள் நடைபெற்றன. அனைவரும் கோயிலுக்குள் நுழையலாம், அதனை யாரும் தடுக்கக் கூடாது என்ற சட்டம் அதன் பிறகுதான் வந்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகிறது. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் இத்தகையப் புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தைப் பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும் – சமூகநீதிக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தவும் "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

- கடந்த ஏப்ரல் 1ஆம் நாள் கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா" நிகழ்ச்சியில், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று உரையாற்றினேன். அன்றைய தினம் வைக்கம் போராட்டம் நடைபெற்ற

இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத் தூணுக்கு மரியாதை செலுத்தினோம்.

- தமிழ்நாட்டில் மிக முக்கியமான வரலாற்று ஆய்வாளர்களில் ஒருவரான பழ. அதியமான் அவர்கள் எழுதிய "வைக்கம் போராட்டம்" என்ற தமிழ் நூலின் மலையாளம், கன்னட மொழி பெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

- கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்க ரூ.8.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு - மாபெரும் நினைவகம் அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மேற்பார்வையில் அது கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாதத்தில் அப்பணிகள் முடிவடையும். அதனைத் திறந்து வைப்பதற்கு நானும் கேரளம் செல்ல இருக்கிறேன்.

- தந்தைப் பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாகச் சிறை வைக்கப்பட்டிருந்த 'அருவிக்குத்தி' கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதியதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நான் அறிவித்து இருந்தேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கேரளா சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு வந்துள்ளார்கள். அதனை முறைப்படி கேரள அரசிடம் இருந்து பெற்றுப் பணிகள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

- வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றைப் பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்றுத் தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று 'தமிழரசு' இதழ் மூலம் கொண்டுவரப்படும் என்று அப்போது அறிவித்து இருந்தேன். அத்தகைய சிறப்பு மலர் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்த மலருக்கு என்ன சிறப்பு என்றால் இது மூன்று மொழிக் கட்டுரைகளைத் தாங்கியதாக அமைந்துள்ளது. தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிக் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

வைக்கம் வீரர்

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் பெரியாரை வைக்கம் வீரர் என்று சொல்கிறார்கள் என்பது போன்ற தோற்றத்தைச் சிலர் உருவாக்கப் பார்க்கிறார்கள். கேரள வரலாற்று ஆவணங்களிலும் - வைக்கம் குறித்து ஆய்வு செய்த ஆங்கில வரலாற்றாசிரியர்களும் பெரியாரின் பங்களிப்பை மறைக்காமல் - மறுக்காமல் பதிவு செய்துள்ளார்கள். அதன் முழுத் தொகுப்பாக இந்த மலர் அமைந்துள்ளது.

தந்தைப் பெரியார், டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, மன்னத்து பத்மநாபன், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் பிள்ளை, காந்திராமன், தாணுமாலையப் பெருமாள் போன்ற தியாகிகளை இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நான் அறிமுகம் செய்தாக வேண்டும். அவர்களது உணர்வை மாநிலத்து மக்கள் பெற்றாக வேண்டும். எத்தகைய கசப்பான காலத்தை பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதற்காகத்தான் இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு சீர்திருத்த இயக்கம் - அரசியல் பரிணாமம் பெற்று-ஆட்சியைப்பிடித்து-பேசியகொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த பெருமை ஆகும். இதனைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் - "ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை." என்று குறிப்பிட்டார்கள். பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம், ஒரு திருப்பம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வைக்கம் போராட்ட வெற்றி விழா 29.11.1925 அன்று நடந்தபோது அதில் கலந்து கொள்ள பெரியாருக்கும் நாகம்மையாருக்கும் அழைப்பு வந்திருந்தது. தலைமை வகிக்கச் சொன்னார்கள். தலைமை வகிக்க மறுத்து வாழ்த்திப் பேசினார் பெரியார். "உரிமையை மறுத்த அரசாங்கமே இப்போது நம்மை கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறது. இதுதான் சத்தியாகிரகத்துக்கு ஏற்பட்ட

மகிமை. பலாத்காரப் போராட்டம் நடத்தியிருந்தால் கூட இந்த வெற்றியை இவ்வளவு சீக்கிரம் பெற்றிருக்க மாட்டோம்” என்று பேசினார் பெரியார். இத்தகைய வெற்றியின் 100 ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

அன்று பெரியாரையும் வைக்கம் போராட்ட வீரர்களையும் கைது செய்தது திருவிதாங்கூர் அரசு. ஆனால். இன்று வைக்கம் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசும், கேரள மாநில அரசும் சேர்ந்து கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. இரண்டு மாநில முதலமைச்சர்கள் இங்கே இருந்து கொண்டாடுகிறோம். இதுதான் வைக்கம் உரிமைப் போராட்டத்தின் வெற்றியாகும். 100 ஆண்டுகளில் கிடைத்த மாபெரும் மாற்றம் இது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசும், கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசும், கொள்கை சார்ந்த அரசாக இருப்பதால் இதனை நாம் கொண்டாடுகிறோம்.

போராட்டக் களம்

பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டு இருக்கும்போது வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமானது. சாதாரண ராமசாமியாக இருந்தவர் தந்தைப் பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூகச் சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இது போன்ற கடந்த கால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு இதுபோன்ற விழாக்கள் பயன்பட வேண்டும்.

பொருளாதார சுதந்திரம்

100 ஆண்டுகளுக்கு முன் நாம் எப்படி இருந்தோம் – இப்போது எப்படி இருக்கிறோம் என்ற கடந்த காலத்தை அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்த மாற்றத்தை உருவாக்கியதில் பெரும் பங்கு சமூகநீதித் தத்துவத்துக்கு உண்டு. கல்வியில் – வேலை வாய்ப்பில் – சமூகப் பங்களிப்பில் நாம் சமூக நீதியை முழுமையாக அடைந்துவிட்டோம். நாம் அரசியல் ரீதியாக தடுக்கப்பட்ட இடங்களில் புகுந்து வெற்றி பெற்று அதிகார நிறுவனங்களைக் கைப்பற்றி விட்டோம். பொருளாதாரச் சுதந்திரம் என்பதும் பல்வேறு வகைகளில் கிடைத்து வருகிறது. ஆனால் சமூகத்தில் ஒரு சில இடங்களில் முழுமையான சமூகநீதி கிடைத்துவிட்டதா என்றால் இல்லை என்று சொல்ல வேண்டும்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதைச் சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அனைவரும் அனைத்து இடங்களையும் சமமாக நடத்தப்படுவதைச் சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவற்றையும் நாம் எதிர்த்துப் போராட வேண்டும். சமூகச் சீர்திருத்தமாக இருந்தாலும் – புரட்சியாக இருந்தாலும் சாதாரணமாகக் கிடைத்துவிடாது. தானாகக் கிடைத்து விடாது. ‘தானாய் எல்லாம் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா’ என்பது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாட்டு ஆகும். நாம்தான் மாற்றியாக வேண்டும். ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலையை ஒடுக்கப்பட்டோரே போராடிப் பெற்றாக வேண்டும். பிரச்சாரத்தின் மூலமாக மன மாற்றம் செய்வதும் – போராட்டங்களின் மூலமாக வலியுறுத்துவதும் – சட்டங்களின் மூலமாகக் கட்டாயப்படுத்துவதுமான மும்முனைத் தாக்குதலை நடத்தியாக வேண்டும்.

சமூகநீதி – சமத்தும் – சமதர்மம்

தீண்டாமைக்கு எதிராக – சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிராக – உயர்வு தாழ்வுச் சிந்தனைக்கு எதிராக – நாம் போராடியாக வேண்டும். அது மட்டுமல்ல ஆண் – பெண் பாகுபாடு களையப்பட வேண்டும். ஆணாதிக்கச் சிந்தனையும் – பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் தடுக்கப்பட வேண்டும். மார்க்சியம் – பெரியாரியம் – அம்பேத்கரியம் போன்ற முற்போக்குச் சிந்தனைகள் அனைத்துமே – அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராட உருவாக்கப்பட்டவைதான்.

இத்தகைய சமூகச் சீர்திருத்தப் – புரட்சியாளர்கள் காட்டிய வழியில் சமூகநீதி – சமத்துவ – சமதர்ம சமுதாயம் அமைக்க நாம் நமது போராட்டப் பயணத்தை இறுதி இலக்கை எட்டும் வரை தொடர்வோம் என்ற உறுதிமொழியை வைக்கம் நூற்றாண்டு விழாவில் எடுத்துக்கொள்வோம்.

தந்தைப் பெரியார் அவர்கள் மறைந்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் – ‘பெரியார் தனது சுற்றுப்பயணத்தை நிறுத்திக் கொண்டார், நாம் தொடர்வோம்’ என்று குறிப்பிட்டார். தந்தைப் பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப்பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம், தொடர்வோம்!

சென்னை, கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடியில் “கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையம்”

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் - 30.12.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 30.12.2023 அன்று, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ்ச் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.393.74 கோடி செலவில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப் பெரிய பேருந்து முனையங்களுள் ஒன்றான “கலைஞர்

நூற்றாண்டுப் பேருந்து முனையத்தை" திறந்து வைத்தார். மேலும், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

சென்னை, கோயம்பேடு, அதைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில், தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காகச் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் புதிய புறநகர்ப் பேருந்து முனையம் அமைத்திட தமிழ்நாடு அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய புறநகர்ப் பேருந்து முனையக் கட்டுமானத்திற்காகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு நிலம் மாற்றப்பட்டு, தொடர்புடைய அனைத்துக் கட்டுமானம், உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையத்தில், 6 இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக (SETC), தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகப் (TNSTC) பேருந்துகளுக்கு 8 தொகுதிகளைக் கொண்ட 215 பேருந்து பாந்துகளும் (Bus Bays), இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களுக்கு இரண்டடுக்கு அடித்தள நிறுத்துமிட வசதியும் உள்ளன. சென்னையிலிருந்து கிளாம்பாக்கம் வரை மாநகரப் பேருந்துக் கழக (MTC) பேருந்துகளை இயக்குவதற்கென 7 ஏக்கர் பரப்பளவில் 60 பேருந்துகள் நிறுத்தும் வசதியுடன், மாநகரப் பேருந்துக் கழக முனையம், ஜி.எஸ்.டி. சாலையையொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மாநகரப் பேருந்துக் கழக முனையத்திலிருந்து (MTC) பிரதான முனையத்திற்குச் செல்லும் பயணிகளுக்கு, இயங்குபடிகள், மின்தூக்கிகளுடன் கூடிய சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து முனையத்தில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக, அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் முனையக் கட்டடத்தில், மாற்றுத்திறனாளிகளுக்குக் குறைந்தளவு உயரம் கொண்ட பயணச்சீட்டுப் பெறுமிடங்கள், தொடு உணர்த் தரைப்பகுதி, மின்கலன் மூலம் இயக்கப்படும் கார்கள், சக்கர நாற்காலிகள், தனிக் கழிவறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், தாய்மார்கள், குழந்தைகளுக்கு பாலூட்டிட அறைகள், தரைத் தளத்தில் 53 கடைகள், 2 உணவகங்கள் / துரித உணவு மையம், முதல் தளத்தில் 47 கடைகள், 2 உணவகங்கள் / துரித உணவு மையம், ஏ.டி.எம். வசதி, தனி மருத்துவமனை, இலவச மருத்துவ மையம், போக்குவரத்து அலுவலகம், நேரக் குறிப்பாளர் அலுவலகம், ஆண்கள், பெண்கள், திருநங்கைகளுக்கான கழிவறைகள், குடிநீர் வசதி, மின்விசிறிகள், இருக்கைகள், சூழல் வரைபடங்கள் வசதியுடன் பேருந்து நிறுத்துமிட அமைப்புப் போன்ற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முனையத்தில் பயணிகளுக்காக 100 ஆண்கள், 40 பெண்கள், 340 ஓட்டுநர்களுக்கானப் படுக்கை வசதி கொண்ட ஓய்வறைகள் (Dormitory) ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 2 நகரும் படிக்கட்டுக்கள் (Escalators), பயணிகளுக்கான 8 மின்தூக்கிகள் (Lifts), 2 சரக்குகளை

ஏற்றி இறக்குவதற்கான மின்தூக்கிகள் (Service Lifts) அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு அடித்தளங்களில் 2,769 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 324 இலகு ரக வாகன நிறுத்தும் வசதிகள், நீர் வழங்கல், மின்சாரம், தீயணைப்பு, அடித்தளக் காற்றோட்டம், முக அடையாளம் காட்டும் ஒளிப்படக் கருவிகள் (Face Recognition Camera) போன்றவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்புமுறை (Integrated Building Management System) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 11 KV/433 V மின்மாற்றும் திறன் கொண்ட 2,000 KVA மின் மாற்றிகள், மின் ஆக்கிகளுடன் (Generator) கூடிய துணை மின் நிலையம், இதர மின் கட்டமைப்பு வசதிகள், 9 கழிவறைத் தொகுதிகளை (Toilet Blocks) தூய்மையாக்கவும், செடிகளுக்கு நீர் பாய்ச்சவும் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் நாளொன்றுக்கு 650 கி.லி. கொள்ளளவுள்ள கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பேருந்து முனையமானது 5 தரை சுத்தம் செய்யும் இயந்திரங்கள், ஒரு இயந்திரத் துடைப்பான் மூலம் நாள்தோறும் சுத்தமாகப் பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேருந்து முனைய கட்டுமானப் பணிகள் அல்லாமல் ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசலின்றிப் பேருந்துகள் வெளியேறுவதற்காக பிரத்யேக சாலை விரிவாக்க வசதி, பேருந்து முனையத்தின் முன்புறம் மழைநீர் வடிகால்வாய்க் கட்டும் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பேருந்து முனையத்தில் பயணிகளின் குடிநீர் வசதிக்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் நாளொன்றுக்கு 0.5 மில்லியன் லிட்டருடன் கூடுதலாக நிலத்தடி நீரைச் சுத்திகரிக்கும், 300 கிலோ லிட்டர் கொள்ளளவுள்ள எதிர் சவ்வூடுபரவல் (RO) முறையிலான நீர் சுத்திகரிப்பு நிலையம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (SETC) / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (TNSTC), மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் (MTC) செயல்பாட்டிற்காகத் தனியாக பேருந்து பராமரிப்புப் பணிமனை/பராமரிப்பிடங்கள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், மூத்த குடிமக்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக 5 மின்கல ஊர்தி (Battery Operated Vehicles) வசதி செய்யப்பட்டுள்ளது. முனையத்தின் முகப்பில் 6 ஏக்கர் பரப்பளவில் நீரூற்றுக்களுடைய நடைபாதைகள் கொண்ட பூங்கா, பயணிகளின் அவசர மருத்துவச் சிகிச்சைக்காக இலவச மையம் அமைக்கப்பட்டுள்ளதுடன் முனையத்தின் முகப்பில் ஆட்டோ / டாக்ஸி நிறுத்தத்திற்குத் தனியாக இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து முனையத்திற்காகப் புதியதாக பிரத்யேகமான ஒரு புதிய புறநகர் இரயில் நிலையம் அமைக்கவும், இதிலிருந்து பேருந்து முனையத்தை இணைக்கும் வகையில் ஆகாய நடைபாதை (Skywalk) வாயிலாக இணைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், புறநகர்ப் பேருந்து முனையம், இந்தியத் தொல்லியல் துறை (ASI) நிலங்களுக்கு அருகாமையில் அமைந்திருப்பதால், 16 ஏக்கர் நிலப்பரப்பில் தொல்லியல் அறிவுசார் மையம், காலநிலைப் பூங்கா (Archaeological Interpretation Centre & Climate Park), நடைபாதை, விளையாட்டு மைதானம், மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும், இப்பேருந்து முனையத்தில் புதியதாகக் காவல் நிலையம், இந்த முனையத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சென்னை வெளிவட்டச் சாலை முடிச்சூர், வரதராஜபுரம் பகுதியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் ஆம்னிப் பேருந்து நிறுத்துமிடம் (Idle Parking) அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையத்தை” திறந்து வைத்து, பேருந்து சேவைகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, இப்பேருந்து முனையத்தில் ஆவின் பாலகம் அமைப்பதற்கான அனுமதி ஆணையினை மாற்றுத்திறனாளி பயனாளி ஒருவருக்கு வழங்கி, கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையத்தின் சிறப்பினை விளக்கிடும் காணொலிக் காட்சியினைப் பார்வையிட்டார்.

படமும் / செய்தியும்

பத்திரிகையாளர்களுக்கான மருத்துவ நிதியுதவி

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், 11.12.2023 அன்று தலைமைச் செயலகத்தில், பத்திரிகையாளர் குடும்ப நலநிதியத் திட்டத்தின்கீழ் மூன்று பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் ரூ.5,10,133க்கான மருத்துவ உதவிக்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசுக் கூடுதல் செயலாளர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் திரு. சிவந்தி ஆதித்யன் பாலசுப்பிரமணியன், திரு. ஆர்.எம்.ஆர். ரமேஷ், திரு. பி.கோலப்பன், திருமதி லட்சுமி சுப்பிரமணியன், திரு. எஸ்.கவாஸ்கர், திரு. எம்.ரமேஷ், அலுவல்சாரா உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பெருமழை மற்றும் பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுவசதி, தொழிற்கடன் உள்ளிட்ட ரூ.1,000 கோடி மதிப்பிலான நிவாரணத் தொகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அறிவிப்பு – 30.12.2023

டிசம்பர் 17 மற்றும் 18, 2023 ஆகிய நாட்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாகப் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதில் தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 21.12.2023 அன்று ஆய்வுகள் மேற்கொண்டு பொதுமக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. கே.என்.நேரு, திரு. எ.வ.வேலு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், திரு. தங்கம் தென்னரசு, திரு. உதயநிதி ஸ்டாலின், திருமதி பி.கீதா ஜீவன், திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், திரு. பி.மூர்த்தி, திரு. த. மனோ தங்கராஜ் ஆகியோர் உடனடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதேபோல் 10க்கும் மேற்பட்ட மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு வெள்ள நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்திட அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேற்கொள்ளப்பட்ட மீட்பு, நிவாரணப் பணிகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள், குறிப்பாகக் குடிநீர், மின்சார வசதி வெகுவிரைவில் சரிசெய்யப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் தற்காலிக அடிப்படையில் சரிசெய்யப்பட்டுப் பொதுமக்கள் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள், மின்துறை, நகராட்சித்துறைப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலைக்குக் கொண்டுவர தீவிரமாகக் களப் பணியாற்றினார்கள்.

இந்தச் சூழ்நிலையில், கடந்த 21.12.2023ஆம் தேதி அன்று தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் பயணம் மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார்கள். அதற்கான அரசாணை நேற்று வெளியிடப்பட்டது.

வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளுக்குக் கூடுதலாக, அவர்களுடைய பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் இன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு பிரிவினருக்குத் தேவையான உதவிகள் பட்டியலிடப்பட்டு அதற்கான தீர்வுகள் காணப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:

1. சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள், பழுதுபார்த்தல் – ரூ.385 கோடி

(அ) திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பகுதியாகச் சேதமடைந்த வீடுகளைப் பழுது பார்ப்பதும், முழுமையாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாகக் கட்டித்தருவதும் அரசின் தலையாய கடமை என்பதைக் கருத்திற்கொண்டு வீடுகள் பழுது பார்ப்பதற்கும்,

முழுமையாகக் கட்டித்தருவதற்கும் அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆ) ஊரக வளர்ச்சித்துறை மூலம் முழுவதுமாகச் சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாகக் கட்டுவதற்கு ரூ.4 இலட்சம் வழங்கிடவும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்குத் தலா ரூ.2 இலட்சம் வரை வழங்குவது எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் ரூ.385 கோடி மதிப்பீட்டில் 4,577 புதிய வீடுகள் கட்டப்படும், 9,975 வீடுகளுக்குப் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் முழுவதும் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான வழிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

2. பயிர்ச்சேத நிவாரணம் – ரூ.250 கோடி

தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 மாவட்டங்களில் சுமார் 2,64,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது. இதற்கென இழப்பீட்டு நிவாரணம் மொத்தம் ரூ.250 கோடி வழங்கப்படும். பயிர் சேதம் நேரிட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பயிர்க் கடனும் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கும் கடன் வழங்கப்படும்.

தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் இம்மாவட்டங்களில் விவசாய நிலங்களில் வெள்ளத்தால் அடித்துவரப்பட்ட மண் படிந்துள்ளது. இதனை அகற்றி மீண்டும் விவசாயத்திற்கு ஏற்றவகையில் சீர்செய்துதரும் பணி மாநில வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாகக் கட்டணமின்றி மேற்கொள்ளப்படும், இதற்கென வெளி மாவட்டங்களிலிருந்து தேவையான கருவிகள், உபகரணங்கள் வரவழைக்கப்படும்.

3. சிறு வணிகர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை சிறப்புக் கடன் திட்டம்

இந்தப் பெருமழையின் காரணமாக சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சிறு வணிகர்கள் பெரிய பாதிப்பைச் சந்தித்துள்ளனர். அரசு அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டிய அவசரத் தேவையைக் கருத்தில்கொண்டும், உள்ளூர் பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பை அறிந்தும் அதன் அடிப்படையில் சிறு வணிகர்கள்,

சிறு கடை உரிமையாளர்கள், தெருவோர வியாபாரிகளின் கடன் தேவைகளை நிவர்த்தி செய்ய இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிறு வணிகர்கள், சிறு கடை உரிமையாளர்கள், தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.10,000 வரை 4 சதவிகித வட்டி, ஒரு இலட்சம் ரூபாய் வரை 6 சதவிகித வட்டி வீதத்தில்கடன் வழங்கப்படும்.இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

4. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ரூ.3 இலட்சம் வரை வெள்ள நிவாரணக் கடனுதவித் திட்டம்

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள், தங்கள் வணிகத்தை மீண்டும் புதுப்பிக்கத் தேவையான மூலதனச் செலவு, நடைமுறை மூலதனம் போன்ற அத்தியாவசிய செலவுகளுக்கு நிதியுதவி அளித்திட, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் (TIIC) மூலம் "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான வெள்ள நிவாரணக் கடனுதவித் திட்டம்" என்ற சிறப்புத் திட்டம் தொடங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், மேற்கூறிய மாவட்டங்களில் வெள்ளம் பாதித்தப் பகுதிகளில் அமைந்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.100 கோடிக் கடனாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், தொழில் நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை, ஆண்டுக்கு 6 சதவிகித சிறப்புச் சலுகை வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படும். இக்கடனைத் தொழில் நிறுவனங்கள் 3 மாத கால அவகாசத்துடன் 18 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3,300 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.350 கோடி கடன்

இந்த இயற்கைப் பேரிடரினால் பொருளாதார நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதால், சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் கடன் திருப்பம் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நிலையைக் கருத்திற்கொண்டு புயல், வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் கடன் பெற்றுள்ள சுயஉதவிக் குழுக்கள் நிவாரணக் கடன் தவணை, வட்டியைத் திருப்பிச் செலுத்துவதற்கும் அவர்கள் பெற்றுள்ள கடனை மறுசீரமைப்பும் செய்துதரப்படும். மாநில, மாவட்ட அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டத்தில் இதனைச் செயல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வியாபாரம் / குறு, சிறு தொழில் புரியவும், ஏற்கெனவே உள்ள பொருளாதாரச் சொத்தைச் சரி செய்யவும் / அல்லது புதிய சொத்தை உருவாக்கவும், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இந்தத் தருணத்தில் கடன் உதவி மிகவும் அவசியம். இதனைக் கருத்தில்கொண்டு பாதிக்கப்பட்டுள்ள சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில், நடப்பு ஆண்டில், கடன் பெறத் தகுதி வாய்ந்த மகளிர் 4,000 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.350 கோடி அளவில் அவர்களுக்குப் புதிய கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6. நிலுவையில் உள்ள கடன் தவணைகளுக்குக் கால நீட்டிப்பு

பெருமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலுவையிலுள்ள கடன் தவணைகளைச் செலுத்துவதில் கால நீட்டிப்புக் குறித்து மாநில அளவிலான வங்கியாளர் குழுவில் விரைவில் உரிய முடிவெடுக்கப்படும்.

7. சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்கு நிவாரணம் – ரூ.15 கோடி

பெருமழை மற்றும் வெள்ளத்தின் காரணமாகத் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் 4,928 மீன்பிடிப் படகுகளும், இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன. இதற்கென நிவாரணத் தொகையாக ரூ.15 கோடி வழங்கப்படும்.

8. கால்நடைகள் வாங்குவதற்கு கடன்

பெருமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 17,000 கால்நடைகளும் ஒரு இலட்சத்திற்கும் மேல் கோழிகளும் உயிரிழந்தன. இறந்த கால்நடைகளுக்கு நிவாரணமாக பசு, எருமைக்கு ரூ.37,500 வரையிலும், ஆடு, செம்மறி ஆடு ஒன்றிற்கு ரூ.4,000 வரையிலும், கோழி ஒன்றிற்கு ரூ.100 வரையிலும் வழங்கப்படும். கால்நடை இழப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய கால்நடைகளை வாங்கிட வசதியாக ரூ.1.50 இலட்சம் வரை புதிய கடன் வழங்கப்படும்.

9. உப்பளத் தொழிலாளர்களுக்கு உதவித்தொகை – ரூ.3,000

பெருமழை, வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட உப்பளத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உப்பளத்

தொழிலாளர்களுக்குக் கூடுதல் வாழ்வாதார நிவாரணத் தொகை தலா ரூ.3,000 வழங்கப்படும்.

10. பள்ளி, கல்லூரிச் சான்றிதழ்கள், பாடப் புத்தகங்கள் வழங்குதல்

(அ) வெள்ளத்தின் காரணமாகத் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள மாணவ, மாணவியர்களின் பள்ளி, கல்லூரிச் சான்றிதழ்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு இருக்கலாம் அல்லது சேதமடைந்து இருக்கலாம். அவர்களுக்குப் புதிய சான்றிதழ்களை வழங்கச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சான்றிதழ்களை இழந்த மாணவர்கள், அவர்கள் படித்த பள்ளியில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்தால் அவர்களுக்கு அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் மூலமாக புதிய மாற்றுச் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அதேபோல், பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர் பாடப் புத்தகங்களை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் புதிய பாடப்புத்தகங்கள் அவர்கள் படிக்கும் பள்ளியின் மூலமாக வழங்கப்படும். இது பாதிப்புக்குள்ளான அனைத்து அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும். தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தேவைக்கேற்ப அவர்களுக்கும் புத்தகங்கள் வழங்கப்படும்.

11. வருவாய்த்துறை, இதர அரசுத் துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள், ஆவணங்கள் வழங்குதல்

வருவாய்த் துறை, இதர அரசுத் துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் / ஆவணங்கள், குடும்ப அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்ற அரசு ஆவணங்களை இந்த மழை வெள்ளத்தால் இழந்தவர்கள் புதிய ஆவணத்தைப் பெறுவதற்குச் சிறப்பு முகாம்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் வரும் திங்கள் கிழமை தோறும் துவங்கப்படும்.

12. வெள்ளத்தால் பழுதடைந்த வாகனங்களுக்கான காப்பீடு:

தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் காப்பீட்டு நிறுவனங்களும், வாகன தயாரிப்பு நிறுவனங்களும், முகவர்களும் சிறப்பு முகாம்கள் நடத்தி தங்களது சேவைகளைத் துரிதப்படுத்திட தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் வாகனப் பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் 3,046 மோட்டார் வாகனங்கள் பழுதுபார்ப்புப் பணிகளுக்காகக் கொண்டுவரப்பட்டு அவற்றில் 917 வாகனங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,129 வாகனங்களுக்கான பழுதுபார்ப்புப் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து நிலுவையிலுள்ள மசோதாக்கள், கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பப்பட்ட மசோதாக்கள், கோப்புகளுக்கு நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்திருப்பது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டி தமிழ்நாடு அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது.

அவ்வழக்கில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள், கோப்புகள் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு ஆலோசனை நடத்திட வேண்டுமென்று மாண்பமை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி இருந்ததன் அடிப்படையில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் அழைப்பினையேற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.12.2023 அன்று ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு நிதி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ்.இரகுபதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., ஆகியோருடன் மாண்புமிகு ஆளுநர் அவர்களைச் சந்தித்தார்.

முக்கியமான மசோதாக்கள்

ஆளுநருடனான இச்சந்திப்பின்போது, பல மாதங்களாக ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் இருக்கும் பல்வேறு கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் வலியுறுத்தினார்.

அதேபோன்று, தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த 10 முக்கியமான மசோதாக்களை, அரசியல் சாசனத்தில் எங்கும் குறிப்பிடாத வகையில், தேவையின்றிக் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளதைத் திரும்பப் பெற்று, அவற்றிற்கும் விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திடவும் மாண்புமிகு ஆளுநர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ஊழல் வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ள அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் திரு. கே.சி.வீரமணி, திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குத் தொடர அனுமதி கோரி அனுப்பப்பட்ட கோப்புகளும் பல மாதங்களாக ஆளுநர் அவர்கள் வசம் நிலுவையில் உள்ளன. அவற்றிற்கும் விரைந்து ஒப்புதல் வழங்க இச்சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது. இதில் திரு. கே.சி.வீரமணி அவர்கள் தொடர்பான கோப்பினை 15 மாதங்களுக்கு மேலாகவும், திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தொடர்பான கோப்பினை 7 மாதங்களுக்கு மேலாகவும் ஆளுநர் அவர்கள் நிலுவையில் உள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டது.

அரசுப் பணியாளர் தேர்வாணையம்

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் காலியாக உள்ள உறுப்பினர் பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பான கோப்பும், நீண்ட காலமாக ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ளது குறித்தும் தெரிவிக்கப்பட்டு அவற்றிற்கு ஒப்புதல் அளித்துத் திரும்ப அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பொதுவாக, அரசியல் சாசன விதிகளுக்கு உட்பட்டு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் செயல்பட வேண்டுமென்றும், அப்போதுதான் மாநில மக்களின் நலனுக்கும், நிருவாகத்திற்கும் பயனளிக்கக்கூடிய வகையில் ஆளுநர் அவர்களது செயல்பாடு அமையும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

மசோதாக்களுக்கும், கோப்புகளுக்கும் ஒப்புதல்

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள், கோப்புகள் தொடர்பாக அவர் கோரிய அனைத்து விவரங்களும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள், அலுவலர்களால் ஆளுநர் அவர்களுக்கு நேரிலும், எழுத்துப்பூர்வமாகவும் அளிக்கப்பட்டுள்ள நிலையில், மாண்பமை உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துக்களை ஆளுநர் அவர்கள் மனதில்கொண்டு, நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கும், கோப்புகளுக்கும் உரிய காலத்தில் ஒப்புதல் வழங்கிட வேண்டுமென்றும், வருங்காலங்களில் இதுபோன்ற தாமதங்களை ஆளுநர் அவர்கள் தவிர்த்திட வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆலோசனையின்போது, அரசின் சார்பாக மேற்படி கருத்துக்களை மாண்புமிகு முதலமைச்சரும், அமைச்சர் பெருமக்களும், தலைமைச் செயலாளர் அவர்களும் விரிவாக எடுத்துக் கூறினர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆளுநருக்குக் கடிதம் ஒன்றையும் அப்போது வழங்கினார். இக்கடிதத்தில் அரசியல் சாசனத்தின்படி அமைக்கப்பட்டுள்ள அனைத்து உயர் அமைப்புகளின்மீதும் தனக்கு மிக உயர்ந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிலுவையிலுள்ள மசோதாக்கள், கோப்புகள் குறித்துத் தெரிவித்தது, மாநில நிருவாகம், பொதுமக்களின் நலன் கருதி அவற்றிற்கு விரைந்து ஒரு தீர்வு கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

தெரிந்து கொள்வோம்

மாணவ, மாணவியர்களின் குறைகளைத் தீர்க்கும் பள்ளிக் கல்வித்துறை

நலம் நாடி செயலி அறிமுகம்

- மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களது கல்வியினை எவ்வித தடையுமின்றிப் பெற வேண்டும் என்ற அக்கறையில் தமிழ்நாடு அரசு பல முக்கியமான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இதன் வாயிலாக பல மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடல் பரிசோதனை நடத்தப்படுகிறது. இதன் வாயிலாக அவர்களுடைய குறைபாடுகள் கண்டறியப்பட்டு அதனைக் களைவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இவ்வாறாக மாணவர்களிடையே ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அதனைக் கண்டறியவே "நலம் நாடி" எனும் செயலி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பயிற்றுனர்கள் இச்செயலியைப் பயன்படுத்தி குறைபாடுகளை எளிதில் கண்டறிவார்கள். மாணவர்களுக்குப் பிறக்கும் போதே ஏற்பட்டுள்ள குறைபாடுகள், வளர்ச்சியில் ஏற்படும் தாமதங்கள், பிற குறைபாடுகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படுகின்றன. பள்ளிகளில் ஆசிரியர்களால், இக்குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு, பின்னர் சிறப்புப் பயிற்றுநர்களால், இந்தச் செயலியைப் பயன்படுத்தி 21 வகையான குறைபாடுகளுக்கு முழுமையான பரிசோதனை மேற்கொள்ள இயலும்.

- இதன் வாயிலாக மாற்றுத்திறன் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கல்வி, பிற சலுகைகள் அனைத்தும் உரிய தருணத்தில் கிடைப்பதை உறுதி செய்ய இயலும்.

கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV)

- கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா எனும் சிறப்புத் திட்டத்தின் மூலமாக அரியலூர், தர்மபுரி, கடலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், சிவகங்கை, சேலம், பெரம்பலூர், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் பெண் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் 61 KGBV உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் முறையான பள்ளிகளிலிருந்து இடைநின்ற அல்லது பள்ளியில் சேராத 10 வயது முடிந்த 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் சேர்க்கப்பட்டுக் கல்வி பயின்று வருகிறார்கள்.

- மேலும், 14 மாவட்டங்களில் (அரியலூர், தர்மபுரி, கடலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், சிவகங்கை, சேலம், பெரம்பலூர், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம்) கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் 44 பெண்கள் விடுதிகள் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், இடைநிலைப் பள்ளியில் (IX-XII) பெண் குழந்தையைத் தக்க வைத்துக் கொள்வதாகும்.

- இவ்விடுதிகளில் 9 – 12 வகுப்பு மாணவிகள் தங்கி, விடுதி வளாகம் / விடுதிக்கு அருகாமையில் உள்ள அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா (NSCBAV) உண்டு உறைவிடப் பள்ளி

- ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011இன்படி (RTE Rules, 2011) பள்ளி வசதி ஏற்படுத்திட இயலாத குடியிருப்புகளில் பள்ளி வசதி அளிக்கும் பொருட்டு, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகள் உள்ள பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப்

பகுதியில் உள்ள குழந்தைகள், நகர்ப்புறக் குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள், வீடில்லாக் குழந்தைகள், பெரியோர் துணை இல்லாத குழந்தைகளுக்காகத் தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், நீலகிரி, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், இராமநாதபுரம், மயிலாடுதுறை, திருநெல்வேலி, பெரம்பலூர், தர்மபுரி, திருப்பூர்) 15 உண்டு உறைவிடப் பள்ளிகளும் 3 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி விருதுநகர்) 3 விடுதிகளும் தற்போது இயங்கி வருகின்றன.

- கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள், பெண்கள் விடுதிகள், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள், விடுதிகள் ஆகியவற்றில் பயின்று வரும் மொத்தம் 9,870 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை ஒரு மாதத்திற்கு ரூ.200 வழங்கப்பட்டு வருகிறது.
- இதுநாள் வரையில் ஊக்கத்தொகைக்கான நிதி மாநிலத் திட்ட இயக்ககத்திலிருந்து மாவட்டத்திற்கும், மாவட்டத்திலிருந்து வட்டார வள மையத்திற்கும், வட்டார வளமையத்திலிருந்து பள்ளிகளுக்கு விடுவிக்கப்பட்டு மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்பட்டது.
- காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு தற்போது ஜனவரி-2024 முதல் மாணவ/ மாணவிகளின் ஊக்கத் தொகை மாநில திட்ட இயக்ககத்திலிருந்து மாணவரின் வங்கிக் கணக்கிற்கு (DBT) நேரடியாகச் செலுத்தப்படும். இவ்வகையில் 9,870 மாணவ, மாணவியர்களுக்கான ஊக்கத் தொகை மாணவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாகச் செலுத்துவதற்கான வசதி 09.01.2024 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான குறைதீர் அமைப்பு

- தமிழ்நாட்டில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் தகுதிகாண் பருவம் முடித்தல், உயர் கல்வி பயில அனுமதி கோருதல், தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதிக்க கோருதல் போன்ற கருத்துருக்கள், பள்ளி நிர்வாகத்தால் சமர்ப்பிக்கப்படும் பணியிடம் நிரப்ப முன் அனுமதி கோருதல், பணி நியமனத்திற்கு ஒப்புதல் கோருதல் போன்ற கருத்துருக்கள் வட்டார / மாவட்ட / முதன்மைக் கல்வி அலுவலகங்களில் நிலுவையில் உள்ள நிலையில், தங்கள் கோரிக்கை சார்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பள்ளி நிர்வாகம் அறிந்து கொள்வதற்கும், பல்வேறு அலுவலகங்களில் நிலுவையில் உள்ள மனுக்களை உயர் அலுவலர்கள் கண்காணித்திடவும், விரைந்து தீர்வு காணும் வகையில் emis.tnschools.gov.in இணையதளத்தில் தங்களது கோரிக்கையினை இணைய வழியே சமர்ப்பித்திட அரசுப்பள்ளி ஆசிரியர்கள் குறைகளைத்தீர்வுக்காண ஏற்படுத்தப்பட்டுள்ள வசதியினைப் போன்று அரசு உதவி பெறும் பள்ளி நிர்வாகங்களின் குறைகளை களைந்திட ஏதுவாகப் புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.
- அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்களது பள்ளிக்குரிய பயனர் குறியீடு (user ID), கடவுச்சொல் (Password) பயன்படுத்தி EMIS இணையதளத்தில் உள்நுழைந்து தங்களது குறிப்பிட்ட கோரிக்கையினைத் தெரிவு செய்து, கருத்துரு சமர்ப்பிக்கப்பட்ட அலுவலகம், நாள் உள்ளிட்ட விவரங்களைச் சமர்ப்பிக்கும் நிலையில், சார்ந்த அலுவலரால் தொடர்புடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு விரைந்து ஆணைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அதன் விவரங்கள் இணைய வழியே மீளவும் பள்ளி நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்படும்.
- இதன்மூலம் அரசு நிதி உதவி பெறும் 8,337 பள்ளிகளின் கோரிக்கைகள் / குறைதீர் மனுக்களின் மீது இணைய வழித் தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குறைதீர் அமைப்பு 09.01.2024 அன்று முதல் செயல்பாட்டிற்கு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு “இசையாய் கலைஞர்” மெல்லிசை நிகழ்ச்சி

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது - 08.01.2024

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் ஜூன் 2023 திங்கள் முதல் ஜூன் 2024 திங்கள் வரை தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி ‘தமிழினத்தலைவர்’ கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்துகொள்ளும் வகையில், இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும் என்றும், பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

மேலும், அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அமைய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு, தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அவர் ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிட 12 குழுக்கள் அமைப்பு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு திறமைகள் கொண்ட பன்முக வித்தகர். அவர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரின் பரிமாணங்களைப் போற்றும் வகையில்

இதழாளர் – கலைஞர், எழுத்தாளர் – கலைஞர், கலைஞர் - கலைஞர், சமூக நீதிக் காவலர் - கலைஞர், பண்பாட்டுப் பாசறை - கலைஞர், ஏழைப் பங்காளர் - கலைஞர், சட்டமன்ற நாயகர் - கலைஞர், பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்,நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர், நிறுவனங்களின் நாயகர் – கலைஞர், தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர், தமிழ்த்தாயின் தவப்புதல்வன் – கலைஞர் ஆகிய தலைப்புகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் இணைத் தலைவர்கள், உறுப்பினர் செயலர், உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் அமைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

திரைத்துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கும் "கலைஞர் – கலைஞர்" விழா

திரைத்துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் புரிந்த சாதனைகளைப் பறைசாற்றும் வகையில் “கலைஞர் – கலைஞர்” விழாக்குழு அமைக்கப்பட்டு, விழா நடத்தப்பட்டு வருகிறது.

1946ஆம் ஆண்டு ஈரோட்டுச் சிங்கம் தந்தை பெரியார் அவர்களின் குடியரசு ஏட்டின் துணையாசிரியராகப் பணிபுரிந்து பெரியாருடன் ஈரோட்டிலேயே தங்கியிருந்த காலத்தில், கோவை பட்சிராஜா நிறுவனத்திலிருந்து திரு. ஏ.எஸ்.ஏ.சாமி அவர்களால் திரைப்படத்திற்குக் கதை, வசனம் எழுதிட அழைப்பு, தந்தைப் பெரியார் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கோவை சென்று முதன்முதலில் “ராஜகுமாரி” படத்திற்குத் திரைக்கதை வசனம் எழுதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது திரைத்துறைப் பயணத்தைத் தொடங்கினார்.

பின்னர், குண்டலகேசி காப்பியத்தின் கதையை அடிப்படையாகக்கொண்டு “மந்திரிகுமாரி” நாடகம் எழுதினார். நாடகத்தின் பெருமை பற்றிக் கேள்விப்பட்டு அதைத் திரைப்படமாகத் தயாரிப்பதற்குச் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. டி.ஆர்.சுந்தரம் அழைப்பதாகக் கவிஞர் கா.மு.ஷெரீப் வந்து கூற; அவருடன் சேலத்திற்குக் கலைஞர் அவர்கள் சென்றார். மந்திரி குமாரி கதையைத் திரைப்படமாக்கிட ஒப்புதல் தந்தார். படம் தயாராகி மாபெரும் வெற்றி கண்டது. அதன் பின்னர், திரையுலகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர் ஆட்சி புரிந்தது.

“கலைஞர் கதை, வசனம்” என்பது கதாநாயகர்கள் பெயர் வருவதற்கு முன்பாகவே

வந்து அவர் புகழ்க்கொடி நாட்டினார். தமிழ்த் திரைப்பட வரலாற்றை மாற்றியமைத்த திரைப்படம் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய பராசக்தி. பகுத்தறிவு கருத்துக்களை மக்களிடம் பரப்பி, திரையுலகம் காணாத அனல் பறக்கும் வசனங்களைக் கொண்ட படமாக பராசக்தி வரலாறு படைத்தது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய மனோகரா, பூம்புகார், மறக்க முடியுமா போன்ற திரைப்படங்கள் காலத்தைக் கடந்து இன்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரைப்படத் துறையில் ஆற்றிய பணிகளின் விவரங்கள்:

கதை எழுதிய திரைப்படங்கள் - 2, வசனம் எழுதிய திரைப்படங்கள் - 4, கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள் - 13, திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள் - 19, கதை, திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள்- 4, வசனம், பாடல் எழுதிய திரைப்படம் - 1, கதை, வசனம் பாடல் எழுதிய திரைப்படங்கள் - 10, திரைக்கதை, வசனம், பாடல் எழுதிய திரைப்படங்கள்- 8, கதை, திரைக்கதை, வசனம், பாடல் எழுதிய திரைப்படங்கள் - 2, கலைஞர் எழுதிய பாடல்கள் இடம்பெற்ற திரைப்படங்கள் - 21, கலைஞரின் சின்னத்திரைப் பங்களிப்பு - 2, மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்கள் -7

இப்படித் திரைத்துறையில் பல மகத்தான சாதனைகளைப் படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு "கலைஞர் – கலைஞர்" குழுவினரால் விழா நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், "கலைஞர் – கலைஞர்" குழுவின் சார்பில் "இசையாய் கலைஞர்" காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சி

"கலைஞர் – கலைஞர்" குழுவின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் 08.01.2024 அன்று "இசையாய் கலைஞர்" காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சி மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும், கலைஞர்-கலைஞர் விழாக்குழுவின் தலைவருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதிய மந்திரி குமாரி, பராசக்தி, நாம், அம்மையப்பன், ராஜா ராணி, ரங்கோன் ராதா, குறவஞ்சி, காஞ்சித் தலைவன், பூம்புகார், பூமாலை, மறக்க முடியுமா, நெஞ்சுக்கு நீதி, தூக்கு மேடை, வீரன் வேலுத்தம்பி, ஒரே ரத்தம், மக்கள் ஆணையிட்டால், காவலுக்குக் கெட்டிக்காரன், மதுரை மீனாட்சி, கண்ணம்மா, பாசக் கிளிகள், பெண் சிங்கம் போன்ற திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்கள் மற்றும் பல்வேறு திரைப்படங்களின் பாடல்கள் காணொலியோடு கூடிய மெல்லிசை நிகழ்ச்சியாக நடைபெற்றது. இந்த மெல்லிசை நிகழ்ச்சியைப் பல்லவி குழுவினர் நடத்தினர். பாடல்களின் பின்னணியை விளக்கி நிகழ்ச்சியைக் கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கவிஞர் யுகபாரதி அவர்கள் பேசியபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படத்திற்கு எழுதி இருக்கக் கூடிய வசனங்கள் என்பது அந்தப் படத்திற்கான வசனங்கள் அல்ல, நம்முடைய வாழ்க்கைக்கான வசனங்கள் என்பதனால், அவரது ஒவ்வொரு படத்தையும் நாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

திரைப்படத்தில் பாடல்களாக, வசனங்களாக, திரைக்கதையாக எழுதினாரோ அதையெல்லாம் அவரே ஆட்சிப் பொறுப்புக்கு வந்து நிறைவேற்றக்கூடிய இடத்திற்கும் வரக்கூடிய ஒரு அற்புதமான வாய்ப்பினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குக் காலம் வழங்கியது என்பதைவிட நமக்கு வழங்கியது என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். திரைப்பட இயக்குநர் திரு. கரு. பழனியப்பன் அவர்கள் பேசியபோது, உலகில் எந்தத் தலைவருடைய நூற்றாண்டு விழாவையும் ஒரு ஆண்டு முழுவதும் கொண்டாட முடியாது. ஏன் என்றால், சொல்வதற்குச் செய்தி ஒன்றும் இருக்காது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வசனகர்த்தாவாக ஒரு கூட்டம் நடத்தலாம், பாடலாசிரியராக ஒரு கூட்டம் நடத்தலாம், கதாசிரியராக ஒரு கூட்டம் நடத்தலாம், தயாரிப்பாளராக ஒரு கூட்டம் நடத்தலாம், இது திரைத்துறைக்கு மட்டும். சமூகநீதிக்கெனத் தனியாகவும், சட்டமன்றத்திற்கு எனத் தனியாகவும், கட்சித் தலைவராகத் தனியாகவும் இப்படிப் பல கூட்டங்கள் நடத்தலாம். தனது வாழ்நாளில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கத் தயங்காத ஒரு தலைவர் உண்டு என்றால் அது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்று பேசினார்.

பிப்ரவரி 18 : சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள்

சுயமரியாதை இயக்கத்தில் ம.சிங்காரவேலர் அவர்கள் ஆற்றிய மாபெரும் பணியால் சுயமரியாதைச் சோஷலிஸ்டுகள் காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியில் சேர்ந்தனர். இச்செயல் ஏராளமான ஊக்கமுள்ள சுயமரியாதை ஊழியர்களின் அரசியல் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. சமுதாய விடுதலை, உழைக்கும் மக்களின் விடுதலை ஆகியவைகளை அடைவதற்கான இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். தமிழ்நாட்டில் சோஷலிச இயக்க வளர்ச்சிக்கும், சிங்காரவேலர் அவர்கள் ஆற்றிய பணி மிக முக்கியமானது, தனிச் சிறப்புடையது. சுய மரியாதை இயக்கத்தில் அவர் செய்தது போன்று அத்துணை அளவு வேறு எவரும் அநேகமாகச் செய்திருக்க முடியாது.

ஏழைகளும் புரிந்துகொள்ளும் வகையில் கம்யூனிசத்தைப் பரப்பிய பெருமை சிங்காரவேலர் அவர்களின் சுயமரியாதை இயக்கம், சமதர்மம் இந்நாட்டு மக்களுக்குத் தக்கபடி எடுத்துரைத்துச் சொல்லி, மார்க்ஸியம் என்னும் பொருளாதாரத் தத்துவத்தைச் சாதாரணமானவரும் உணரும்படி செய்த பெருமை தமிழ்நாட்டில் இருவரையே சாரும்- தந்தைப் பெரியார் அவர்களும், சிங்காரவேலர் அவர்களும். தோழர் சிங்காரவேலர் அவர்கள் சுயமரியாதை இயக்கம் வளருவதற்குப் பெரிதும் பாடுபட்டார்.

நன்றி: **தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்னும் நூலிலிருந்து...**

படமும்/செய்தியும்

பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் 21.12.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து நடைபெற்ற தினசரி நாளிதழ்கள், செய்தித் தொலைக்காட்சிகள், பருவ இதழ்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கு மாபெரும் சிறப்பு மருத்துவப் பரிசோதனை முகாமினைத் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

எங்களைப் போன்ற இல்லத்தரசிகளின் எண்ணங்களுக்கு உயிரோட்டம் தந்துகொண்டிருக்கும் "முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம்" திட்டம்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் நலனுக்காக வேளாண்மை, உழவர் நலத்துறையின் மூலம் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழக வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறையின் மூலம் பொதுமக்கள், விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தின் மூலம் தங்களது இல்லங்களிலேயே மாடித் தோட்டம் அமைத்துத் தங்களது குடும்பத்திற்கான அன்றாட காய்கறித் தேவைகளை ஊட்டச் சத்துடன் பெற்றுப் பயனடையும் வகையில் மானியத்துடன் காய்கறித் தொகுப்புகள், இடுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் பொதுமக்களிடம் குறிப்பாக இல்லத்தரசிகளிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதுகுறித்துத் தோட்டக்கலைத்துறைத் துணை இயக்குநர் திருமதி கோ.மாலினி அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலனுக்காக எண்ணற்ற பல திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழக வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. வேளாண் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தைப் பன்மடங்கு உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.

குறிப்பாக, பொதுமக்களின் அன்றாட உணவுத் தேவையில் முக்கியப் பங்காக விளங்கக்கூடிய காய்கறிகளை விவசாயிகளின் விளை நிலங்களில் இருந்து நாள்தோறும் நேரடியாகப் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வகையில் உழவர் சந்தைகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் இடைத்தரகர்களின்றித் தங்களின்

விளைபொருட்களுக்கு அதிக இலாபம் பெறுவதுடன் பொதுமக்களும் தங்கள் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகளைக் குறைந்த விலையில் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

தற்போது மாறிவரும் நவீனக்காலச் சூழலுக்கேற்ப இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விளைவிக்கப்படும் காய்கறிகளுக்குச் சந்தையில் அதிக வரவேற்புக் கிடைத்து வருகிறது. மேலும், பொதுமக்களும் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான காய்கறிகளைத் தங்கள் வீடுகளிலேயே உற்பத்திச் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மாடித் தோட்டங்களில் காய்கறிச் செடிகளை வளர்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது.

காய்கறி விதைத் தொகுப்புகள்

அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் நகர்ப்புறங்களில் மாடித் தோட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் ரூ.900 மதிப்புள்ள தொகுப்புகளை 75 சதவிகித மானிய விலையில் ரூ.225க்கு தோட்டக்கலைத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாடித் தோட்டத் தொகுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் கத்தரி, கீரை, வெண்டை, முருங்கை, பூசணி உள்ளிட்ட 6 வகையான காய்கறி விதைத் தொகுப்புகள், செடி வளர்க்கும் பைகள், 12 கிலோ அளவிலான ஊட்டம் ஏற்றிய தென்னை நார்கள், 400 கிராம் உயிர் உரங்கள், 200 கிராம் உயிரிக் கட்டுப்பாட்டு காரணிகள், 100 மில்லி லிட்டர் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து, சாகுபடி முறைகளை விளக்கும் கையேடு ஆகியவை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

ஓர் வருடத்தில் பயிர் சுழற்சி முறையில் காய்கறிகளைச் சாகுபடி செய்யவேண்டும். ஒரே மாதிரியான காய்கறியைப் பயிரிடுவதால் செடிகள் வளர்ப்பதற்காக உள்ள ஊடகத்தில் சத்துக்கள் போய்விடும் எனவே இதை தவிர்ப்பதற்காகப் பயிர் சுழற்சி முறையைக் கடைபிடிப்பது அவசியமாகும்.

விவசாயிகளுக்கும் மானியம்

சேலம் மாவட்டத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின்கீழ்ப் பரப்பு விரிவாக்கம், இயந்திர மையமாக்கல், தேனீ வளர்ப்பு, அறுவடை பின்சார் தொழிற்நுட்பம் ஆகிய இனங்களின்கீழ் 26,083 விவசாயிகளுக்கு ரூ.11.01 கோடி மானியமாகவும், மாநிலத் தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையத் திட்டம், வாழையில் ஊடுபயிராகக் காய்கறிகள் சாகுபடி ஊக்குவித்தல், தென்னையில் ஊடுபயிராக வாழை, சாகுபடி ஊக்குவித்தல் ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்துத் தோட்டம், அரசு மாணவியர் விடுதிகளில் தோட்டம் அமைத்தல், தோட்டக்கலைக் கருவிகள், உபகரணங்கள் ஆகிய இனங்கள் மொத்த தொகை 900 ரூபாயில் 50 சதவிகித மானியமாக விவசாயிகளுக்கு ரூ.450க்கு வழங்கப்படுகிறது. அந்தவகையில் இதுவரை 4,204 பயனாளிகளுக்கு ரூ.82.58 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்

மேலும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாடித்தோட்ட தொகுப்புகள், மூலிகைத் தோட்டத் தளைகள், காய்கறி விதைத்தளைகள், பழச் செடித் தொகுப்பு வழங்குதல் ஆகிய இனங்களின்கீழ் 44,865 பயனாளிகளுக்கு ரூ.1.36 கோடி மானியமாகவும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சின்ன வெங்காயம் பரப்பு விரிவாக்கம், அவகேடோ பரப்பு விரிவாக்கம், நிரந்தரப் பந்தல் அமைத்தல், தற்காலிகப் பந்தல் அமைத்தல். அங்கக

பண்ணையம், பாரம்பரிய காய்கறி ரகங்கள் சாகுபடி ஊக்குவித்தல் ஆகிய இனங்களின்கீழ் 8,569 பயனாளிகளுக்கு ரூ.4.31 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மானாவரி மேம்பாட்டுத் திட்டம்

மானாவரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கால்நடைகள், தோட்டக்கலைப் பயிர்கள், மண்புழு உரக்கூடாரம், தேனீப் பெட்டி, தீவனப் பயிர் விதைகள் ஆகிய இனங்களின்கீழ் 540 பயனாளிகளுக்கு ரூ.2.42 கோடி மானியமாகவும், தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீன மையமாக்கல் திட்டத்தின்கீழ் பயிர் பல்வகைபடுத்துதல், நுண்ணீர்ப் பாசனம், உயிர் கிராமம், நிலப்போர்வை, மாதிரிக் கிராமம், கண்டுணர் சுற்றுலா ஆகிய இனங்களின் கீழ் 431 பயனாளிகளுக்கு ரூ.1.06 கோடி மானியமாகவும், பிரதம மந்திரி நுண்ணீர்ப் பாசன திட்டத்தின்கீழ்ச் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் என 7,540 பயனாளிகளுக்கு ரூ.50.11 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

துணை நீர் மேலாண்மைச் செயல்பாடுகள் திட்டத்தில் ஆழ்துளைக் கிணறு, நீர்ச் சேகரிப்பு தொட்டி, மின் மோட்டார், நீர் கடத்தும் குழாய் ஆகியவை 97 பயனாளிகளுக்கு ரூ.25.34 இலட்சமும், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பல்லாண்டுப் பயிர்கள் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம், பழ செடி தொகுப்பு வழங்குதல், காளான் வளர்ப்புக் குடில், காய்கறி பயிர்கள் சாகுபடியை ஊக்குவித்தல், காய்கறி விதைத் தளைகள் வழங்குதல் ஆகிய இனங்கள் 46,956 பயனாளிகளுக்கு ரூ.2.18 கோடியும், தேசிய மூங்கில் இயக்கம் மூலம் 47 பயனாளிகளுக்கு ரூ.18.45 இலட்சம் மானியத்தில் மூங்கில் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறையின் சார்பில் மொத்தம் 1,39,332 நபர்கள் ரூ.73.72 கோடி மதிப்பிலான மானியம் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ், மாடித்தோட்டம் அமைத்துப் பயனடைந்துவரும் சேலம், கொல்லப்பட்டி, அன்னை இந்திரா நகர் பகுதியை சேர்ந்தப் பயனாளி திருமதி அமுதா அவர்கள் தெரிவித்ததாவது :

எனது பெயர் அமுதா. இயற்கை முறையில் விளையும் காய்கறிகளையும் கீரை வகைகளையும் உண்டு வந்தால் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்பதால் அனைவரும் தற்பொழுது இயற்கை முறையில் விழைவிக்கப்பட்ட காய்கறிகள், பழங்களைப் பயன்படுத்துவதையே விரும்புகின்றனர். ஆனால் காய்கறிகள், பழங்களை அதிக உற்பத்தியை நோக்கமாகக் கொண்டுப் பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகித்து விற்பனைக்கு வருகிறது. அவ்வாறான காய்கறிகளை உண்ணும்போது எதிர்காலத்தில் உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்பாக அமையும் என்பதால் எனது சொந்த வீட்டின் மேற்புறம் மாடித்தோட்டம் மூலம் இயற்கை முறையில் காய்கறிகளை விளைவிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கும், எனது குடும்பத்தினர் அனைவருக்கும் நீண்டகாலமாக இருந்தது.

மாடித்தோட்டம் அமைத்து பயனடைந்து வரும் சேலம், கொல்லப்பட்டி, அன்னை இந்திரா நகர் பகுதியை சேர்ந்த திருமதி அமுதா அவர்கள்

இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நகர்ப்புறங்களில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி 6 வகையான காய்கறி விதைகள் மானியத்தில் வழங்கப்படும் எனவும், மேலும் அதனை வளர்ப்பதற்கு தென்னை நார் கட்டிகள், உயிர் உரங்கள், இயற்கைப் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை மானிய விலையில் வழங்குகிறார்கள் என்பதை நாளிதழ்களில் பார்த்தேன். இது சம்பந்தமாக நான் எனது பகுதியில் உள்ள வட்டாரத் தோட்டக்கலை அலுவலரை அணுகி காய்கறி விதைகளை வாங்கி எனது வீட்டின் மாடியில் இயற்கை முறையில் தோட்டத்தினை அமைத்தேன்.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும் நேராக மாடிக்குச் சென்று நாங்கள் விதைத்த விதைகள் செழுமையாக வளர்ந்து வருவதைப் பார்த்து நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம். இரண்டு மாதங்களுக்குப் பின்னர் எங்களின் அன்றாடக் குடும்பத் தேவைக்குரிய காய்கறிகள் அனைத்தும் எனது மாடித்தோட்டத்தின் வாயிலாகவே கிடைத்தது. மாடித்தோட்டம் மூலம் இவ்வாறாக நமக்குத் தேவைப்படும் காய்கறிகளை சுயமாகவே இயற்கை முறையில் விளைவிப்பது குறித்து அருகாமையில் உள்ளவர்கள் எங்களது மாடித்தோட்டத்தினை வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

மாடித்தோட்டம் அமைத்து பயனடைந்து வரும் சேலம், கன்னங்குறிச்சி பகுதியை சேர்ந்த திருமதி மல்லிகேஸ்வரி அவர்கள்

ஆரோக்கியமான, சத்தான காய்கறிகளை நாங்கள் உணவில் சேர்த்துக்கொள்ளும் மனதிருப்தியுடன் உள்ளோம். இதுபோன்று அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்களைப் போன்றோரின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தின்கீழ், மாடித்தோட்டம் அமைத்துப் பயனடைந்துவரும் சேலம், கன்னங்குறிச்சி பகுதியைச் சேர்ந்த பயனாளி திருமதி மல்லிகேஸ்வரி அவர்கள் தெரிவித்ததாவது :

எனது பெயர் மல்லிகேஸ்வரி, தினசரி எனது குடும்பத்தின் அன்றாடக் காய்கறித் தேவைக்காக கடைகளுக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வருவது வழக்கம். அவ்வாறு செல்லும்போது இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகளைக் காண்பது அரிதாக உள்ளது. பல்வேறு நேரங்களில் இயற்கை முறையில் எனது வீட்டிலேயே காய்கறிகளை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என எண்ணியதுண்டு.

இவ்வாறான சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித்தோட்டம்" என்ற திட்டத்தினை அறிமுகம் செய்து என்னைப்போன்ற இல்லத்தரசிகளின் எண்ணங்களுக்கு உயிரோட்டம் தந்துள்ளது குறித்துக் கேள்விப்பட்டேன். இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளால் நாம் மட்டும் அல்லாமல் நமது சந்ததியினரும் பாதிக்கப்படாமல் பாதுகாத்திடும் வகையில் இத்திட்டம் ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. வீட்டுத்தோட்டத்தில் இயற்கை முறையில் விளைவித்த காய்கறிகளை நாம் உண்ணும்பொழுது நம்மை அறியாமலேயே ஒருவித ஆனந்தம் ஏற்படுகிறது.

மேலும், எனது மாடித்தோட்டத்திற்கு காலை, மாலை நேரங்களில் சென்று வரும் பொழுது அன்றாட வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மன அழுத்தங்களை மறந்து ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. நகர்ப்புறங்களில் வசிக்கும் என்னைப் போன்ற இல்லத்தரசிகளுக்கு இது மிகுந்த பயனளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இத்திட்டத்தினை எங்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இல்லத்தரசிகள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் நகர்ப் புறங்களில் வாழும் பொதுமக்கள் தோட்டம் அமைப்பதற்கான போதிய இடவசதி இல்லாததால் தங்கள் வீட்டின் மாடியிலேயே மாடித்தோட்டம் அமைத்து, தங்கள் வீட்டில் காய்கறிகளை இயற்கை முறையில் வளர்ப்பதன் மூலம் ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகளைப் பெறமுடிகிறது. இதன் மூலம் இயற்கையுடன் ஒன்றி வாழும் ஓர் அனுபவத்தையும், தாங்கள் விளைவித்த காய்கறிகளை தானே பயன்படுத்தும் வாய்ப்பாகவும் அமைகிறது. குழந்தைகளுக்கு மாடித்தோட்டம் ஓர் தாவரவியல் பயிற்சிக் கூடமாகவும் விளங்குகிறது.

தொகுப்பு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம் மாவட்டம்.

சிறுகதை

வெளிச்சம்

- கணேசகுமாரன்

“தமிழகத்தின் டாப் டென் மனிதர் 2023 விருதைப் பெற்றுக்கொள்ள திரு. சிங்கராஜன் அவர்களை மேடைக்கு அழைக்கிறோம். விருதினை மதிப்புக்குரிய ஆட்சியர் வழங்குவார்.” சிங்கராஜன் எழுந்தான். பலத்த கரகோஷங்களுக்கிடையில் மேடையேறிய சிங்கராஜன் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். கையில் அலுமினிய ஸ்டிக் ஒன்றை வைத்திருந்தான். அவனின் இடதுகையைப் பிடித்தபடி ஒருவர் முன்னே செல்ல அவரைப் பின்தொடர்ந்தபடி மேடையில் வந்து நின்றான்.

“இப்பொழுது சிங்கராஜனைப் பற்றிய ஒரு காணொளியைக் காண்போம்.” பிரமாண்ட மேடையில் தெரிந்த அகலமான திரையில் சிங்கராஜன் கறுப்புக்கண்ணாடி அணிந்துகொண்டு வீதியில் நடந்தான். கையில் இருந்த அலுமினிய ஸ்டிக்கின் உதவியுடன் படியேறினான். பின்னணியில் அவன் வாழ்வினை ஒரு பெண் குரல் உரத்துச் சொல்லிக்கொண்டு வர… கிராமத்துப் புழுதியில் அவன் கால்கள் பயணப்பட்டதை நான்குபுறமும் சுற்றிய கேமரா 360 டிகிரியில் பதியவைத்து ஒளிபரப்பிக்கொண்டிருந்தது. காணொளி முடியும்போது லேசாய் புன்னகைக்க முயன்றான் சிங்கராஜன். விரிய மறுத்த அந்தப் புன்னகை அப்படியே திரையில் ஒரு புள்ளியில் உறைய அரங்கத்தில் எழுந்த கைத்தட்டல் ஒலி அமைக்கப்பட்டிருந்த மேடையைத் தாண்டி விண்ணை அதிரவைத்தது. விருதைப் பெற்றுக்கொண்டு தனது இருக்கையில் அமர்ந்த சிங்கராஜனின் விரல்கள் விருதின் மேலிருந்து கீழாக ஊர்ந்துகொண்டு இருந்தது. கண்ணாடிக்குள்ளிருந்த கண்கள் எந்த வெளிச்சத்தையும் உணராமல் என்றோ தன் ஞாபகத்தில் படிந்த சூரியனை மீட்டெடுத்துக் கொண்டிருந்தது. காணொளியில் காட்டப்படாத யாருக்கும் அத்தனை நெருக்கமாய் தெரியாத ஒரு வாழ்வு சிங்கராஜனுக்கு உண்டு. அந்த வாழ்வில்தான் அவன் பகலையும் இரவையும் இரண்டாகப் பிரித்து வாழ்ந்து வந்தான்.

சிம்மமேடு. சுதந்திரத்துக்குப் பிறகு முன்னேற்றம் காணாத, நாட்டின் வரைபடத்தில் எவ்விதத்திலும் இடம்பெறாத சாபம் விளைந்த ஒரு கிராமம். வானத்திலிருந்து குதித்த மனிதர்கள் அங்கு வாழ்வதாய் யாரும் எவரிடமும் சொல்லவில்லை. ஆனாலும் அவர்களின் வாழ்வு அப்படித்தான் விதிக்கப்பட்டிருந்தது. மின்சாரம் என்பதையே அறியாத அந்த வெள்ளந்தி கிராமத்தில் பள்ளிக்கூடம், மருத்துவமனை என்று எந்த அத்தியாவசியமும் கிடையாது. அவர்களின் வெளிச்சம் என்பது சூரியனோடு மட்டும் உறவாடும் வகையில் இருந்தது. சூரியன் மறைந்து இருள் அப்பியதும் கைக்குக் கிடைத்த வெளிச்சத்தை மண்ணெண்ணெய் விளக்கினிலோ விளக்கெண்ணெய் ஊற்றிய அகல் தீபத்திலோ தேடிக்கொண்டார்கள். இரவு என்பதன் முழு அர்த்தமும் ஒருவகையில் அறிந்தவர்களாகவும் இருந்தார்கள். இன்னொரு வகையில் அறியாதவர்களாகவும் இருந்தார்கள். சீக்கிரமே சாப்பிட்டுச் சீக்கிரமே தூங்கிப்போனார்கள். இருள் முடிந்து பனியுடன் சாம்பல் நிறத்துக்கு வானம் மாறும்முன்பே தங்கள் நாளைத் தொடங்கினார்கள். இன்னும் சொல்லப்போனால் சூரியன் வருவதே சிம்மமேடு கிராமத்து மக்களுக்காகத்தான் என்று அவர்கள் நம்பினார்கள். அப்படிப்பட்ட சூரியனோடு பேசிப் பழகி வளர்ந்தவன்தான் சிங்கராஜன். சிம்மமேடு கிராமத்தின் எல்லைச்சாமியும் தங்களின் குலதெய்வமுமான சிங்கராஜனின் பெயரைத்தான் அவன் பெற்றோர்கள் வைத்திருந்தனர். ஏழு கிலோ மீட்டர் நடந்து சென்றால் தென்படும் மந்திமேடு கிராமத்தில் பள்ளிக்கூடம் உண்டு. முக்கியச் சாலைக்கு சமீபத்தில் இருப்பதாலோ என்னவோ அரசாங்கத்தின் கருணைப் பார்வை மந்திமேடு மக்களின் மீது பட்டிருந்தது. சிறிய அளவிலாவது படித்தவர்கள் அங்குத் தென்பட்டார்கள். தன் படிப்பையும் சிங்கராஜன் அங்கே தீர்மானித்தான். தினமும் காலையும் மாலையும் நடக்கத் தொடங்கினான். மந்திமேடு பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்கள் கருணையே மிகுந்தவர்களாகத்

திகழ்ந்தார்கள். அதிலும் வாசுகி டீச்சர் எப்போதும் சிங்கராஜனின் கண்களை உற்றுப்பார்த்து, "ஒனக்கு யாரு சிங்கராஜன்னு பேர் வச்சது. கண்ணன்னு தான வச்சிருக்கணும் முட்டைக் கண்ணா..." என்று செல்லம் கொஞ்சி திருஷ்டி கழிப்பார். சிங்கராஜன் தன் பெரிய விழிகளை உருட்டிச் சிரிப்பான். வெள்ளைச் சிரிப்பில் பெருகும் ஒளி அவனின் இருள் கிராமத்துக்கும் சேர்த்தே இருக்கும்.

வீட்டுக்குள் மிதக்கும் நிலா வெளிச்சத்தில் படித்து முன்னேற முடியாத அவனுக்கு மந்திமேடு பள்ளிக்கூடத்து வெளிச்சம் அறிவுத் திருக்கோவிலின் மந்திர இடமாயிற்று. சூரியனோடு பேசிக்கொண்டு புத்தகப்பையைத் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினால் பள்ளியில் பாடம் ஆரம்பித்துதான் எப்போதும் போய் நிற்பான். பக்கத்து ஊரிலிருந்து வந்து படிக்கும் ஒரே மாணவன் என்பதால் அவனுக்கு மட்டும் சிறப்புச் சலுகையாக அந்தத் தாமதம் அனுமதிக்கப்படும். செம்மண் புழுதி அப்பிய கால்களில் வைராக்கியம் அணிந்துகொண்டு அலைந்து படித்து வந்தான். எப்போதாவது மந்திமேடு கிராமத்திலிருந்து சைக்கிளில் செல்லும் ஒருவர் அவனை ஏற்றிக்கொண்டு செல்வார். மற்ற நாட்களில் இருளும் நிலாவும் மட்டுமே அவனுக்குத் துணை. காலையில் படித்த வாய்ப்பாடுகளைத் தன்னுடன் கூடவரும் நிலாவிடம் சொல்லிக்காட்டி சந்தோஷப்படுவான் சிங்கராஜன். நிலாவின் ஒற்றையடிப் பாதையில் சிங்கராஜனைத் தவிர வேறு யாருமில்லை.

விடியல் என்பது வெளிச்சம் தர மட்டுமே என்று பூரணமாக நம்பிய அந்தக் கிராமத்து மக்களின் மத்தியில்தான் சிங்கராஜன் படித்து முன்னேறினான். மந்திமேடு கிராமத்தின் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு, அரசாங்க ஸ்காலர்ஷிப் பெற்றுக்கொண்டு ப்ளஸ் டூ முடித்தவன் அங்கிருந்து விலகி ஹாஸ்டலில் தங்கி பாலிடெக்னிக் முடித்தான். முதன்முறையாகச் சோடியம் வேபர் வெளிச்சத்தை அங்கேதான் பார்த்தான். இரவு என்பது வெறும் இருளால் ஆனது அல்ல என்பதை அங்கேதான் தெரிந்து கொண்டான். விடுமுறைக்கு ஊருக்கு வருபவன் தன் கிராமத்தின் நிரந்தர இருளைக் கண்டு மனம் வெதும்பினான். அம்மா அப்பாவிடம் தான் கண்ட இரவின் வெளிச்சத்தைப் பற்றி ஏதும் சொல்லாமல் உள்ளுக்குள்ளேயே வைத்து மறுகுவான்.

பகலில் காடுகளில் மரங்கள் வெட்டி பக்கத்து கிராமத்தில் விற்று வயிற்றுக்குக் கஞ்சி வார்த்துக்கொள்ளும் சிங்கராஜனின் பெற்றோர்களுக்கு அவனின் கல்விப் போராட்டம் எல்லாம் கண்ணுக்குத் தெரியவில்லை. "எங்களைக் கீறுன முள்ளுக்காடு உன்னைக் கீறாம பாத்துக்கய்யா..." என்பது மட்டுமே பெற்றவளின் பிரார்த்தனையாய் இருந்தது. சிங்கராஜனின் மனதுக்குள் விடிந்தும் இருளில் கிடக்கும் தன் கிராமத்து மனிதர்களின் சாம்பல் சித்திரம் சதா விரிந்தபடிக் கிடந்தது. குளிர்காலத்தின்போது சூரியன் அவர்களை விட்டுச் சீக்கிரம் விடை பெற்றுக்கொள்வான். நீண்ட இரவைச் சகித்துக்கொள்ள முடியாமல் எல்லா குளிர்காலங்களையும் வாய்விட்டுச் சபித்தார்கள் சிம்மமேடு மக்கள். சாபம் இருளில் புகையாய் வெளியேறிற்று. இனிமேற்கொண்டும் மேலே படிக்க முடியாது என்பதை உணர்ந்த சிங்கராஜன் குளிரில் கருகி வெயிலில் விரைத்த பெற்றோர்களின் பாரம் தீர்க்க முனைந்தான். படித்த படிப்புக்கான அடையாளத்தைக் கையில் வைத்துக்கொண்டு கிராமம் தாண்டி நகரங்களில் கால் பதித்து அலைந்தான். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு இரவு அவனுக்கு அறிமுகமானது.

மந்திமேடு கிராமத்தில் புதிதாய் அமைக்கப்பட்டிருந்த கழிவு சுத்திகரிப்புத் தொழிற்சாலைக்கு வேலை கேட்டுப் போனவனுக்குக் கிடைத்தது தொழிற்சாலையின் செக்யூரிட்டி வேலை. அந்தக் கழிவு சுத்திகரிப்புத் தொழிற்சாலை, எங்கேயோ உருவான மிச்சக் கழிவைக் கொட்டி வைக்கும் குடோனாகத்தான் அது இயங்கி வந்தது. அவன் படிப்புக்கான இடம் அங்கே இல்லை. ஆனால் கழிவைப் பாதுகாக்கும் பொறுப்பு அவனுக்குத் தரப்பட்டது. அந்த இடத்தை சிங்கராஜன் பராமரித்து வந்தான். காட்டு வேலைக்குப் போகவேண்டாம் என பெற்றவர்களைக் கேட்டுக்கொண்டாலும் அவர்கள் விடிந்ததும் காடு தேடி செல்லத் தொடங்கினார்கள். ஆயுதம் ஏந்தி காய்ப்புக் காய்த்த கைகள் ஒருபோதும் ஓய்வை விரும்பியதில்லை.

ஒருநாள் கழிவுத் தொழிற்சாலை உள்ளே புகை கசிந்து பெரும் விபத்து நிகழ்ந்தது. என்ன ஏதென்று உணருமுன்னரே சிங்கராஜனின் முகத்தைத் தாக்கியது பெரும் நெருப்புக்கோளம். அலறியடித்து வெளியே வந்து விழுந்தான் சிங்கராஜன். இமைகளைப் பொசுக்கி கண்களுக்குள் படிந்த நெருப்பு சிங்கராஜனின் பார்வையைப் பறித்தன. கண்கள் நிரந்தர இருளை அணிந்துகொண்டன. மீண்டும் தன் குடிசைக்கே திரும்பினான் சிங்கராஜன். அவனுக்கான இரவும் பகலும் ஒன்றே என ஆகின. கண்ணிருந்தும் நாங்கள் பாதி குருடர்கள்தான் என்று அவனுக்கு ஆறுதல் சொன்ன மக்களின் அடர் இருளின்

துயரம் சிங்கராஜனின் செவிக்குள் கனவிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. தட்டுத்தடுமாறி நகர்ந்தன அவனது பொழுதுகள். வேலை தேடி அலைந்த நகர நாட்கள் அவனுக்குச் சில பாடத்தைப் போதித்திருந்தன. சராசரியான வாழ்க்கை தவிர்த்து இன்னொரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தன் மனிதர்களை நினைத்தான். தலைமுறை தலைமுறையாக இரவின் உண்மை அறியாமல் வாழும் தன் மனிதர்களின் தலையெழுத்தை மாற்ற முடிவெடுத்தான். ஒருநாள் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை விட்டு காணாமல் போனான்.



சென்னைக்கு வரும்போதே தீர்மானித்திருந்தான் சிங்கராஜன். தான் வாழ்ந்த நிலத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வராமல் திரும்பிச் செல்வதில்லையென்று. கையில் தென்படும் மக்களிடம் சிங்கராஜன் ஒன்றே ஒன்றுதான் கேட்டான். "சி.எம் வீட்டுக்கு எப்படி போகணும்?". முதலமைச்சரின் வீதி முனையில் தன் கண்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்தான். கடந்து செல்பவர்கள் வினோதமாய்ப் பார்த்து நகர்ந்தனர். பரபரப்புச் செய்திகளுக்காகச் சுற்றித் திரியும் மூன்றாம் கண்ணின் பார்வையில் பட்டான் சிங்கராஜன். தன் முன் நீட்டப்பட்ட மைக்கில் நிதானமாய் பதிலுரைத்தான். "இது எனக்காக நான் கட்டிக்கிட்ட துணி இல்லை. என் கிராமமே இந்த மாதிரி துணியை நிரந்தரமாய் கட்டியிருக்கு. அதை அவிழ்க்கணும். பகலுக்குள்ள வாழ்ந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் ஒருவிதமான வினோத மிருக வாழ்வைத்தான் அவங்க வாழ்ந்துட்டு இருக்காங்க. எங்க வாழ்க்கைக்கு வெளிச்சம் கிடைக்கும் வரைக்கும் இங்கிருந்து நகரமாட்டேன்."

சிங்கராஜனின் பேட்டி ஒளிபரப்பாகி இரண்டு நாள் வரைக்கும் எந்த அதிசயமும் நிகழ்ந்துவிடவில்லை. மூன்றாம் நாள் பெருமழை சென்னை முழுவதும் கொட்டித் தீர்த்தது. பெய்யெனப் பெய்த மழை சிங்கராஜனையும் நனைத்து வீதி ஓரத்துக்குத் தள்ளியது. ஆஸ்பெஷ்டாஸ் சீட்டின் கூரையின்கீழ் ஒதுங்கினான். நிவாரணப் பணிகளை முடுக்கிவிட வீதியில் இறங்கினார் முதலமைச்சர். தனது தெருவிலிருந்து நிவாரணப் பணிகளைத் தொடங்கியவரின் கண்களில் கூரைக்குக் கீழ் ஒதுங்கி நின்ற சிங்கராஜன் நடுங்கியபடி தெரிந்தான். கண்களை மூடியிருந்த கறுப்புத் துணி வித்தியாசமாகப் பட்டது. சுற்றிலும் கேமராக்கள் கவனித்துக் கொண்டிருக்க சிங்கராஜனிடம் சென்று பேசினார் முதலமைச்சர். இருளில் கிடக்கும் இரண்டு தலைமுறை கோரிக்கை அவர் காதில் விழுந்தது. உடனே விசாரித்து நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆணையிட்டார். சிம்மமேடு கிராமத்தில் பணி தொடங்கியது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து வெளிச்சத்தைத் தொலைத்த மக்களின் கண்களில் பளீரென விளக்கு எரிந்தது. தங்கள் பகலின் நீளத்தை அதிகரித்துக்கொண்டு இரவிலும் சிரித்தனர் அவர்கள். சிங்கராஜன் தனது கிராமத்துக்குச் சென்றபோது அவனை வரவேற்கத் தாரை தப்பட்டைகளுடன் சீரியல் பல்புகளும் தயாராய் இருந்தன. அந்தப் பளீர் வெளிச்சத்தை அவன் உணரவில்லை. தன் கண் கட்டை அவிழ்த்துவிட்டுச் சிரித்த சிங்கராஜனின் சிரிப்பில் தெறித்த மின்சார வெளிச்சத்தில் சிம்மமேடு கிராமமே ஒளிர்ந்தது.

நன்றி :
இலக்கியமலர் 2023 எனும் நூலிலிருந்து...

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 11.01.2024 அன்று,
சென்னை நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், அயலகத் தமிழர் தினம் -
2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்தார்.

தமிழரசு
Tamilarasu
R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026
Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் ரூ. 1,000/- ரொக்கம் வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, 10.01.2024 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ். நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.

Published by : D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,